Eastern Fables & Folk Tales

ஹதிம்தாயின் அற்புதச் செயல்கள்.

ஜே. ஸி. நெஸ்பீல்ட், எம். ஏ

Grade

MACMILLAN & CO., LTD.
MADRAS, BOMBAY, CALCUTTA

No. 3

13 SEP 19..
MADRAS

TB
031(51
N18
86438

சூசிபத்திரம்.

பக்கம்.

1. எழு வினுக்கள் 1
2. முதல் வினுவுக்கு விடை 8
3. இரண்டாவது வினுவுக்கு விடை 18
4 மூன்ருவது வினுவுக்கு விடை 22
5. நான்காவது வினுவுக்கு விடை 37
6. ஐந்தாவது வினுவுக்கு விடை 47
7. ஆருவது வினுவுக்கு விடை 63
8. எழாவது வினுவுக்கு விடை 78

படங்களின் அட்டவணை.

பக்கம்.

1. முனிவரைன ஹதீம் கண்டு பேசுதல்.... 3
2. மங்கையர்கள் ஹதீமைச் சூழ்ந்துகொள்ளல் 13
3 ஹம்ஸதேவியின் செவிலித்தாய் ஹதீமுக்குச் சில விஷயங்கள் 18
4. மரத்தடியிலுள்ள மடந்தையை இளைஞன் பார்த்தல் 25
5. ஹதீம் பச்சிலையைப் பறித்தல் 35
6. திருடன் மூட்டையை யவிழ்த்துக் காட்டல் 45
7. ஹதீம் சமுத்திரத்தை நோக்குதல் 55
8. ஹதீம் வந்தனம் செய்தல் 58
9. கந்தருவ அரசனுடைய சாபவிமோசனம் 67
10. கந்தருவனும் ஹதீமும் குதிரைகளின்மேல் ஏறிச்செல்லுதல்.... 73
11. ஹதீம் வைரக்கல்லைப் பார்த்தல் 88

ஹாதீம்தாயின் அற்புதச் செயல்கள்.

OFFICE OF THE REGISTRAR OF B... 13 SEP 1918 MADRAS
7B O-13C N18

அத்தியாயம். I.

ஏழு வினக்கள்.

1. ஹாதீம்தாயின் பிறப்பும் குணவிசேடங்களும்.

கி. பி. ஆரும் நூற்ருண்டின் பிற்பாதியில் தாய் என்ற ஒரு ஜாதியார்கள் இருந்துவந்தார்கள். அவர்களுக்கு ஹாதீம் என்பவன் தலைவனுவன். அவன் அரேபியா தேசத்தைச் சார்ந்த 'யாமன்' என்னும் நாட்டிற் பிறந்தவன்.

அவன் பிறந்தபோது அவன் ஜாதகத்தைப் பார்வையிட்ட சோதிடர்கள் ஒருகாலத்தில் அவன் மிக்க புகழ்பெற்ற அரசனுக விளங்குவான் என்றும் தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் ஜனங்களின் நன்மையின்பொருட்டே அர்ப்பணம் செய்து கீர்த்தியடைவான் என்றும் சொன்னுர்கள்.

அவர்கள் சொன்ன விஷயங்களெல்லாம் பிற்காலத்தில் உண்மையாகவே முடிந்தன. பல நூற்ருண்டுகளுக்கு முன்பு வசித்த அரபிக்கவிஞர் ஒருவர் தமது புஸ்தகத்தில் ஹாதீமைப்பற்றி அடியிற் கண்டவாறு எழுதியிருக்கிருர்:—

"ஹாதீம் தயாள குணசீலன். சிறந்த புத்திமான். மகா தீரன். ஜயலக்ஷ்மியின் பேரருள் வாய்ந்தவன். ஒரு யுத்தத்திலும் அவன் தோற்றதில்லை. பகைவரிடம் கொள்ளையிட்ட பொருள்களையெல்லாம் இரவலர்க்கு ஈந்தான். அவன் எய்த பாணம் ஒன்றும் குறிதவறினதில்லை. கைதிகளாகக் கொண்டு போனவர்களையெல்லாம் விடுதலை செய்தான்."

ஸாதி என்னும் மகாகவி எழுதியுள்ள புஸ்தான் என்னும் புஸ்தகத்தில் இரண்டு இடங்களில் அவனைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிருர். அரபிதேசத்துக் கதைகளில் அவனைப்

2179
894·813

போல் கொண்டாடப்படுகிற அரசனுவது வீரனுவது வேறு ஒருவனும் இல்லை.

துன்பமுற்ற ஆண் பெண் இருபாலார்க்கும் அவன் பின் வாங்காது அன்புடன் பலமுறை உதவிசெய்து அவர்களை காப்பாற்றிய விசேஷங்களைப்பற்றி எத்தனையோ ஆச்சரிய மான வரலாறுகள் வழங்கிவருகின்றன. அநேகம் பொய்க் கதைகள் அவற்ருேடு கலந்திருப்பதால் அவை முழுமை யும் நம்பக்கூடியனவாக இல்லை. ஆனுல், அவன் தயாள குண சீலனுக இருந்தான் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை. பாரசீக நாட்டையாண்ட நௌஷிர்வான் என்பவன் மகா நீதி மான் என்ற பட்டப்பெயரோடு எப்படி விளங்கினுனே அப் படியே ஹதீம் உதாரி என்ற பெயரோடு விளங்கினுன். இரு வரும் ஒரேவருஷத்திற் பிறந்தவர்கள். ஹதீம் செய்த அற் புதச் செயல்கள் அளவற்றன. அவற்றுள் சிலவற்றைமட்டும் இந்தப் புஸ்தகத்திற் கூறுவோம்.

2. ஹதீம் முனிவரனைக் கண்டதும் ஏழு கேள்விகளைப்பற்றிக் கேள்வியுற்றதும்.

ஒருநாள் ஹதீம் தனது நாட்டில் நிர்மானுஷ்யமான பிரதேசத்தில் தனியே உலாவிக்கொண்டிருந்தான். அங்கே யாரோ ஒரு சிறுவன் மிகுந்த துக்கத்தோடு புலம்பியதை அவன் கவனித்து, "நண்பனே, நீ இவ்வளவு துக்கப்படு வதற்கு என்னகாரணம்?" என்று கேட்டான். உடனே சிறு வன் நிமிர்ந்துபார்த்து எதிரில் ஓர் அரசகுமாரன் யுத்த வீரனைப்போல் ஆயுதபாணியாக நிற்பதைக்கண்டு வியப்புற்று அவனை நோக்கி, "அன்பனே, என் துக்கத்தை உனக்குச் சொல்வதால் என்ன பயன்? நான் எடுத்துச் சொல்வதனு லாவது அல்லது நீ கேட்பதனுலாவது அது தணியப்போகிற தில்லையே!" என்று சொன்னுன்.

ஹதீம்:—"சிறுவனே, அப்படி எண்ணுதே. உன் மனத்தி லுள்ளவைகளை என்னிடம் சொல்லு. என்னுல் ஆகக்கூடிய தைச் செய்ய நான் சித்தனுக இருக்கிறேன். பணம் வேண்டு மானுல் தருகிறேன். பிறஉயிர்களைப்போல எனது உயிர் அற்பமாக இருப்பினும் அதனை ஈசுவர கைங்கரியத்திற்கு

86438

அர்ப்பணம் செய்திருக்கிறேன். ஈசுவர கைங்கரியமாவது கஷ்டப்படும் ஸ்திரீகளையேனும் புருஷர்களையேனும் கண்டால் உடனே அவர்களுடைய கஷ்டத்தைப்போக்க முயல்வது

OFFICE OF THE REGISTRAR OF ... 13 SEP 1918 MADRAS

முனிவரை ஹாதீம் கண்டு பேசுதல்.

தான். அப்படிப்பட்ட கைங்கரியத்திலேதான் கடவுளுக்கு அதிக இஷ்டம். நாம் கடவுளுக்குச் செய்யும் சிறந்த பணிவிடையாவது ஜனங்களுக்குச் செய்யும் உபகாரந்தான்" என்று சொல்லவே அச்சிறுவன், "உன்னுடைய நற்காரியங்கள் நிறைவேறும்படி கடவுள் உனக்கு அருள்புரிவாராக" என்று கூறிவிட்டுத் தன் சட்டைப்பையிலிருந்து ஓர் அழகிய கன்னிகையின் படத்தை யெடுத்து அவனிடம் கொடுத்து, "இதைப் பார். என் மனத்திலுள்ள அபிப்பிராயத்தை இனி நீயே தெரிந்துகொள்ளலாம். இதுதான் என் துக்கத்திற்குக் காரணம்" என்று உரைத்தான்.

பிறகு ஹாதீம் படத்தை வாங்கிச் சிறிதுநேரம் கவனித்துக்கொண்டிருந்து சிறுவனை நோக்கி, "நீ யார்? உன் பெயர் என்ன? இந்தப் படத்திலுள்ள கன்னிகையின் பெயர் என்ன?" என்று கேட்டான்.

சிறுவன், "என் பெயர் முனிவரான். காரசீமநாட்டு வேந்தரே என் பிதா; அந்த ராஜ்யத்திற்கு நானே இளவரசன். **கூரசான்** நாட்டின் எல்லையிலுள்ள **ஷாஹபாத்து** என்ற நகரத்தில் அதி சௌந்தரியவதியான ஹம்ஸதேவி என்னும் கன்னிகை யொருத்தி இருப்பதாக அறிந்து நான் அங்கேபோனேன்; ஆனால் அவளைப் பார்க்க முடியாவிட்டாலும் அவளுடைய படம் ஒன்று கிடைத்தது. தான் கேட்கும் ஏழு கேள்விகளுக்கும் யார் தகுந்தவிடை பகர்வானோ அவனையே தான் வரிக்கப்போவதாகவும் ஒருவரும் விடை பகராதவரையில் தான் கன்னிகையாகவேயிருந்து காலங்கழிக்க எண்ணியிருப்பதாகவும் ஒரு திரை மறைவிலிருந்து அவள் சொன்னாள். அந்தக் கேள்விகளாவன:—

(1) நான் ஒருமுறை பார்த்ததை மறுபடி பார்க்க விரும்புகிறேன்.

(2) நன்மைசெய்து சமுத்திரத்தில் போடு.

(3) ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. செய்தால் அது உனக்கே வரும்.

(4) உண்மை பேசுகிறவன் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

(5) நிடாமலையின் வரலாறு என்ன?

(6) கோழிமுட்டை யளவுள்ள முத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

(7) பதகார்டிலுள்ள ஸ்நான கட்டத்தின் வரலாறு என்ன?

அக்கேள்விகளுள் சிலவற்றின் பொருளே எனக்கு விளங்கவில்லை. ஆதலால் விளங்கக் கூறும்படி அவளைக் கேட்டேன். அதற்கு அவள், 'ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக; முதலில் ஒருதரம் பார்த்ததை மறுபடி பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறவன் எங்கே இருக்கிறான்? அப்படி அவன் பார்க்க விரும்புகிற பொருள் யாது? இதுவே முதல் கேள்வி' என்றனள்."

ஹாதிம்:—"தன்னுடைய கலியாணத்திற்காக இவ்விதமான நிபந்தனையை ஏற்படுத்தியதில் அவளுடைய கருத்து யாது?"

முனிவரான்: "அவள் மிகுந்த பணக்காரி. ஷாஹபாத்து நகரம் அவளுக்குச் சொந்தமானது; அந்த நகரம் அவளது திரவியத்தைக்கொண்டே அமைக்கப்பட்டது. அவளுடைய

பிதா காலம்சென்றுவிட்டார். அவள் மிகவும் ஒழுக்கமான நடையுள்ளவள். மணம் புரிந்து கொள்வதில் அவளுக்கு இச்சையில்லே. தருமகாரியங்கள் செய்வதிலேயே பொழுது அவள் போக்கிவருகிருள். பாக்கியுள்ள தனது வாழ்நாளேயும் இதேமாதிரி தருமவழியிலேயே செலவிடக் கருதியிருக்கிருள். ஆனல், பாரசீக தேசத்தில் பெண்கள் எல்லோரும் மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அதற்காகவே அவள் இந்த ஏழு வினுக்களேயும் ஏற்படுத்தி அவற்றிற்கு விடை சொல்லுகிறவனேயேதான் கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிருள். இவ் வித உபாயத்தால் தான் கலியாணமே செய்துகொள்ளாமல் இருந்துவிடலாமென்பது அவள் கருத்து."

ஹதீம்:—"இந்தக் கேள்விகளுக்குள் முதற் கேள்விக்கு விடை கண்டுபிடிக்க நீ முயன்றதுண்டா?"

முனிவரன்: "ஆம். நான் முயன்று பார்த்தேன். ஆனல், என் முயற்சி பலிக்கவில்லே. அவள் அவ்விஷயத்தில் ஒரு வித அநுகூலமும் செய்யவில்லே. முதற்கேள்வியில் குறிப் பிட்டவன் எங்கே இருக்கிருன் என்று கேட்டதற்கு அவள் தனக்குத் தெரியாதென்றும் நானே கண்டுபிடித்துவர வேண்டு மென்றும் சொல்லிவிட்டாள்; உடனே அவ்விடமிருந்து புறப்பட்டுத் தென்திசையில் நான் கேள்விப்பட்டிராத பல தேசங்களுக்கும் சென்று திரிந்துபார்த்தேன். நான் நாடிச் சென்ற மனிதனேப்பற்றிய சமாசாரம் எந்த இடத்திலும் தெரியவில்லே. கடைசியில் யாமன் தேசத்துக்குப் போகலா மென்றிருக்கையில் உன்னேக் கண்டேன். என்னுடைய வர லாறு இதுதான்."

3. ஹதீம் ஏழுவினுக்களுக்கும் விடைகள் கண்டுபிடிக்க ஒப்புக்கோள்ளல்.

ஹதீம் என்பவன் எவ்வளவு கஷ்டமானவேலேயாயிருந் தாலும் அதில் ஏதேனும் நன்மை இருக்குமென்று தெரிந்தால் அந்த வேலேயைச்செய்து முடிக்காமல் விடான். முனிவரனே அவன் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கே தன் விரு ந்தினனுக இருக்கச்செய்தான். இரண்டு மூன்று தினங்கள்

சென்றபின் ஹாதீம் அவனைப்பார்த்து, "உனக்கு என்னாற் செய்யக்கூடிய உதவி ஏதேனும் உண்டா?" என்று கேட்டான்.

முனிவரன், "ஐயோ! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! இக்காரியத்தை நீ ஏற்றுக்கொள்வாயானால் உன் இஷ்டப்படியே விட்டுவிடுகிறேன். முடிவில் காரியம் பூர்த்தியாகாவிட்டாலும் நீ படும் சிரமத்திற்கு எப்பொழுதும் நன்றி பாராட்டுவேன்" என்று கூறினன்.

ஹாதீம் தன் வேலைக்காரர்களையழைத்து, "நான் இப்போது ஒரு யாத்திரை செய்ய எண்ணியிருக்கிறேன். திரும்பிவர நெடுநாள்பிடிக்கும். அதுவரையில் வழிப்போக்கர்களுக்கு வேண்டிய உதவியை வழக்கப்படி நீங்கள் செய்து வாருங்கள். இந்த ராஜ்யத்தில் ஒவ்வொருவரும் தம்தம் வேலையை எப்போதும்போலவே சுறுசுறுப்புடன் பார்த்துவரவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

வேலைக்காரர்களுக்கு இம்மாதிரியாக அவன் உத்தரவளித்துத் தன் புதிய நண்பனுடன் ஷாஹபாத்து நகரத்தை நோக்கிச் சென்றான். நெடுந்தூரம் கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்து இருவரும் ஷாஹபாத்து நகரத்தை யடைந்தார்கள். ஹம்ஸதேவியின் வேலைக்காரர்கள் நல்வரவு கூறி ஒரு விடுதியில் இருக்கச்செய்து வழக்கம்போல் மிகவும் உபசரித்து நல்ல ஆகாரத்தையும் சில திரவியங்களையும் அவர்களுக்கு அனுப்பினார்கள், ஆனால், ஹாதீம் உபசாரங்களைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல், "ஆகாரத்துக்காகவும் பணத்துக்காகவும் நான் இங்கே வரவில்லை" என்றான்.

அதனைக் கேள்வியுற்ற ஹம்ஸதேவி அவர்களைத் தன்னிடம் வருவித்து வழக்கம்போல் தன் முகத்தை மூடிக்கொண்டு "ஏன் திரவியம் வேண்டாம் என்கிறீர்கள்? எப்பொழுதாவது உபயோகப்படுமே! எப்பொருளாயினும் (பாம்பின் தலையானாலும்) பத்திரமாய் வைத்திருந்தால் ஒருசமயம் உபயோகப்படுமென்று பெரியோர்கள் சொல்லுவார்களே" என்றாள்.

ஹாதீம்:—"ஜனங்கள் திரவியத்தைச் சம்பாதிப்பது சேர்த்து வைப்பதற்கன்று. வேண்டியவர்களுக்குக் கொடுத்தற் பொருட்டே."

ஹம்ஸதேவி:—"அப்படியானல் நீங்கள் இங்கே வந்த நோக்கம் என்ன?"

அவ்வாறு அவள் கேட்டவுடன் ஹாதீம் தன் மனத்தி லுள்ளதை வெளியிடுவதற்கும் தான் அங்குவந்த காரணத் தைத் தெரிவிப்பதற்கும் சமயம் நேர்ந்ததேயென்று சந்தோஷ மடைந்து, "பெண்மணி! உன்னுடைய அழகின் மேன்மை யைப்பற்றியும் நற்குணத்தைப்பற்றியும் நான் நிரம்பக் கேட் டிருக்கிறேன். இப்பொழுது நான் வேண்டுவது ஒன்று; அதற்கு நீ இணங்குவாயாயின் நீ கொடுக்கும் ஆகாரத்தையும் திரவியத்தையும் ஏற்றுக்கொள்வேன். இல்லையானல் நான் தாகத்துடனும் பசியுடனும் உன் நகரத்தைவிட்டுத் திரும்பிப் போவேன்" என்றான்.

ஹம்ஸதேவி:—உன்னுடைய வேண்டுகோள் என்ன?"

ஹாதீம்:—"உன் முகத்தை ஒருநிமிஷமாவது நான் நேரில் பார்க்கவேண்டும்."

ஹம்ஸதேவி:—"நான் கேட்கும் ஏழு கேள்விகளுக்கும் விடை சொல்லுகிறவரையில் நீ என் முகத்தைத் திரையில்லா மல் பார்க்க முடியாது; வேண்டுமானல் அக்கேள்விகளைச் சொ ல்லுகிறேன் கேள்."

ஹாதீம்:—"எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட் டால் நீ எனக்கு உரியவளாவதாகவும் நான் பார்த்து யாரைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்வேனே அவனை நீ கலியா ணம் செய்துகொள்வதாகவும் வாக்களிக்கவேண்டும்."

ஒருவரும் தன் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியா தென்று எண்ணி அவள் ஹாதீமின் வார்த்தைக் கிசைந்து, "நான் உனக்கு உரியவளானபிறகு என்னை உன் இஷ்டப்படி செய்யலாம். நீயே கலியாணஞ்செய்துகொண்டாலும் சரி, அல் லது வேறு யாருக்கேனும் கலியாணஞ் செய்துவைத்தாலும் சரி, இரண்டில் எதுவும் எனக்குச் சம்மதமே" என்றனள்.

பிறகு சில சாட்சிகள் முன்னிலையில் அவர்களிருவரும் அங்ஙனமே ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

ஹாதீம்:—"நான் இப்பொழுதே புறப்படச் சித்தமாயிருக் கிறேன். முதற்கேள்வி இன்னதென்று சொல்லு."

ஹம்ஸதேவி:—"ஒருவன் தான் பார்த்ததையே மறுபடி பார்க்க விரும்புவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் எங்கே இருக்கிறான்? அவன் எதைப் பார்த்தான். ஏன் அதனை மறுபடி பார்க்க விரும்புகிறான்?"

பிறகு ஹாதீம் ஹம்ஸதேவியினிடம் விடைபெற்றுக்கொண்டு தான் திரும்பி வரும்வரையில் முனிவரனை அந்த விடுதியிலே இருக்கச் சொல்லி அங்கிருந்து புறப்பட்டான்.

அத்தியாயம் 2.

முதல் வினவுக்கு விடை.

1 மலைப்பாம்பினிடம் ஹாதீம் அகப்பட்டுக்கொண்டது.

ஹாதீம் புறப்பட்டவுடன் இன்ன திக்கிற்குப் போகவேண்டுமென்று தெரியாமல் மிகவும் கலங்கிப்போனன். ஆனாலும் தைரியத்தை விடாமல் ஷாஹபாத்து நகரத்திற்கு அருகிலுள்ள காட்டிற் புகுந்து பலநாள் நேரேசென்று ஒரு பாலைவனத்தை யடைந்தான். அது மணல்நிறைந்த இடம். ஜீவஜந்துக்கள் வசிக்கும் சின்னமே அங்கு இல்லை. அவ்வழியே தொடர்ந்து செல்லுகையில் அவன் மனோதைரியத்தைச் சிறிதும் விடவில்லை. அங்ஙனமிராவிட்டால் அவன் உடனே தனது நாட்டிற்குத் திரும்பியிருப்பான். ஒவ்வொருநாளும் மாலையில் கிழிந்த ஆடையை அணிந்த யாரோ ஒருவன் சிறிது ரொட்டியும் கொஞ்சம் தண்ணீரும் எடுத்துக்கொண்டு அவன்முன் வந்து தோன்றுவான்; தன்னைப்படைத்த கடவுளே தன்னைக் காப்பாற்றும்பொருட்டு அவ்வாறு நடத்திவருவதாக அவன் எண்ணினன்.

பாலைவனத்தில் அவன் போகையில் அவனுக்கு எதிரில் திடீரென்று ஒரு பெரிய மலைப்பாம்பு காணப்பட்டது. வாயைத் திறக்கையில் அதன் தலை மிகவும் பெரிதாகத் தோன்றிற்று. முதலில் ஹாதீம் அதனைக்கண்டு பயந்தான். பிறகு கொஞ்ச தூரம் போகவே அஃது ஒரு மண் குவியலென்று எண்ணித் தன் பயத்தை ஒழித்தான். அதன் அருகில் போனவுடன் அது வாயைத்திறந்து பெருமூச்சுவிட்டுக் காற்றை உள்ளே இழுத்தது. காற்றை இழுத்த வேகத்தினல் ஹாதீம் பாம்பின் வாய்க்குள் இழுக்கப்பட்டு அங்கிருந்து அதன் வயிற்றுக்குள் அகப்பட்டுக்கொண்டான். அவன் தன்னலானவரையில் முயன்றும் அதன் வாய்க்குள் போகாமல் நிற்க முடியவில்லை. அப்போது அவன் கடவுளைத் தியானித்து, "நான் செய்திருக்

கும் பாவத்திற்கு இந்தத் தண்டனை எனக்கு வேண்டியதுதான். நான் கடவுளுக்கு ஊழியஞ்செய்து காலத்தைக்கழிக்க எண்ணியிருந்தேன். ஐயோ பாவம்! அது முடியாமற் போயிற்றே! கடவுள் பரம கருணாமூர்த்தியாக இருந்தும் அவருடைய கிருபைக்கு நான் அபாத்திரனாகப் போய்விட்டேனே!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டிருந்தான். ஆனாலும் கடவுள் தமது பக்தர்களைச் சோதிப்பது வழக்கமல்லவா?

மூன்றுநாள் அல்லும் பகலும் ஹதீம் மலைப்பாம்பின் வயிற்றிலேயே இருந்தான். முன்பு ஒருகாலத்தில் மிகவும் விநோதமான ஒரு முத்து அவனுக்குக் கிடைத்திருந்தது. அது தன்னை அணிந்திருப்பவனுக்கு நெருப்பினாலாவது விஷத்தினாலாவது ஒரு தீங்கும் உண்டாகாதபடி காக்கும் வன்மையுள்ளது. அதனை அவன் தன் தலைப்பாகையில் தரித்துக்கொள்வது வழக்கம். அந்த முத்து இல்லாவிட்டால் அவன் பாம்பின் வயிற்றிலேயே கிடந்து மரித்திருப்பான்.

பாம்பின் வயிற்றில் ஹதீம் உயிரோடு இருந்தமையால் அதற்கு உடம்பு சௌகரியப்படாமல் இருந்தது. "நாம் எதை விழுங்கி விட்டோம்! நமக்கு அது வயிற்றில் அதிக வருத்தத்தை உண்டாக்குகிறதே. நாம் விழுங்கின பிராணிக்கு இன்னும் உயிர் போகவில்லைபோலிருக்கிறது. அதனால்தான் அது ஜீரணமாகவில்லை" என்று அந்த மாசுணம் தனக்குள் சொல்லிக்கொண்டது. அதன் வயிற்றில் இருந்துகொண்டே ஹதீம் கொஞ்சம் இளைப்பாறினான். அதனால் பாம்பிற்கு அதிக நோயுண்டாகவே சுற்றிச் சுற்றிப் புரண்டது. என்னசெய்தும் ஜீரணிக்க முடியாதென்று எண்ணி மிகுந்த கஷ்டத்துடன் வாந்திசெய்து அவனை வெளியேவிட்டது. உடனே ஹதீம் அதன் எதிரில் தோன்ற அவனைப்பார்த்து அது பயந்து அதிக வேகமாக எவ்விடத்துக்கோ ஓடிப்போயிற்று.

அப்பால் ஹதீம் தன் வஸ்திரங்களை அங்கேயே யிருந்து உலர்த்திக்கொண்டு பாலைவனத்தின் வழியே சென்றான். தாகத்தினாலும் பசியினாலும் மிக வருந்தி அன்று மாலையில் ஓர் ஆற்றங்கரையை அடைந்தான். அங்கே உட்கார்ந்து சிறிது நேரம் இளைப்பாறி ஆற்றில் இறங்கி ஸ்நானம்செய்து வஸ்திரங்களைச் சுத்தம் செய்துகொண்டு தண்ணீர் குடித்துத் தாகத்தைத் தணித்துக்கொண்டான். சிறிதுநேரம் சென்றபிறகு மறு

படியும் வழக்கம்போலவே பிரயாணம்செய்யத் தொடங்கினன்.

2. ஹாதீம் ஒரு பரதேசியாரைச் சந்தித்து அவரது ஆலோசனையைக் கேட்டல்.

இவ்வாறு ஹாதீம் சிலநாள் பிரயாணம் செய்துவருகையில் ஒருசிறிய குன்று அவனுக்கு எதிர்ப்பட்டது. அதன் உச்சியில் அநேக மரங்கள் அடர்ந்திருந்தன. பாலைவனத்தின் வழியேவந்த ஹாதீமுக்கு அக்காட்சி மிக்க ஆனந்தத்தை விளைவித்தது. பிறகு அவன் அந்தக் குன்றின் மேலேறிப்போய் அழகான ஒரு சோலையை அடைந்து அங்கே நேர்த்தியான மேடைகள் கட்டியிருப்பதையும் பக்கத்தில் சுத்தமான நீரோடு கூடிய ஓர் அருவி ஓடுவதையுங் கண்டு களித்தான். குளிர்ந்த மேல்காற்று புஷ்பங்களின் வாசனையுடன் வீசியடித்தது. ஹாதீம் ஒரு மேடையில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டே அயர்ந்து நித்திரை செய்தான். அப்போது அக்குன்றில் வசிக்கும் பரதேசியாரொருவர் அங்கே வந்து, அழகான உருவத்தோடு கூடிய ஓர் இளைஞன் மேடையில் தூங்குவதைக் கண்டு வியப்புற்று மேடையினருகே சென்று அவன் பக்கத்தில் உட்கார்ந்தார். ஹாதீம் நித்திரைதெளிந்து எழுந்ததும் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெரியவரைப் பார்த்து வணக்கத்துடன் அவருக்கு வந்தனம் செய்தான். பரதேசியார் அவனை ஆசீர்வதித்து "நீ எங்கிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? இக்கொடிய பாலைவனத்தைத் தாண்டி எதற்காக வந்தனை?" என்று கேட்டார்.

ஹாதீம்:—"ஒருமுறை பார்த்ததை மறுபடியும் பார்க்கவேண்டுமென்று யாரோ ஒருவன் சொல்லிக்கொண்டிருக்கிறானும். அவனைப் பார்க்கும்பொருட்டு வந்தேன்."

பரதேசியார்:—"அவனை நான் அறிவேன். அவன் ஒரு வயோதிகன். 'ஹவைதா' என்றொரு பாலைவனத்தில் திரிந்து கொண்டிருக்கிறான். அங்கே போகும் பாதை மிகவும் அபாயமானது. அவன் பார்க்க விரும்புவது மாயா விநோதக் காட்சியேயன்றி உண்மையானதல்ல."

ஹாதீம்:—"ஹவைதா பாலைவனம்சென்று அந்த மனிதனைப் பார்க்கவேண்டுமென்ற உறுதியுடன் நான் இவ்வளவு

தூரம் வந்துவிட்டேன். பாலேவனம் சமீபத்தில் இருப்பதால் அதனை நான் பார்க்கும்படி கடவுள் துணை செய்வாரென்று எண்ணுகிறேன். காரசீமநாட்டு அரசனுடைய குமாரனுகிய முனிவரனை நீங்கள் அறிந்திருப்பீர்களே. அவன் ஷாஹபாத்தி லுள்ள ஹம்ஸதேவியென்னும் ரூபவதியை மணம்புரிய ஆசை கொண்டிருக்கிருன். அப்பெண்மணி ஏழு விடுகதைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு விடை தரும்படி அவனைக் கேட்ட னள். அவனுல் அவற்றிற்கு விடைபகர முடியவில்லை. அவற் றிற்கு விடைபகர்ந்தாலன்றி அவன் தன்னைக் கலியாணம் செய்துகொள்ள முடியாதென்று அவள் சொல்லிவிட்டாள். அதனுல் அவன் ஏக்கங்கொண்டு ராஜ்யத்தைத் துறந்து காட் டில் திரிந்துகொண்டிருந்தான். தற்செயலாய் நான் அவனைக் கண்டு அவன் மனவருத்தத்திற்குரிய காரணத்தை யறிந்து கொண்டேன். அது தெரிந்தபிறகு அவ்வருத்தத்தை நீக்காம லிருப்பது முறையல்லவாதலால் என்னுற் கூடியஅளவு முயன்று அவன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்க எண்ணியே இவ்விடம் வந்திருக்கிறேன்."

பரதேசியார்:—"ஹவைதாவுக்குப் போனவர்களில் ஒரு வரும் சௌக்கியமாய்த் திரும்பி வந்ததாகத் தெரியவில்லை. சிலர் பைத்தியங்கொண்டும் சிலர் வியாதியால் பீடிக்கப்பட் டும் வருந்தினுர்கள். நீ அங்கே போவதாக நிச்சயித்துவிட்ட படியால் நான் உன்னைத் தடுக்கவில்லை. ஆயினும் நான் சொல் வதைக் கவனித்துக்கேள். நீ அவ்விடம் புகுவதற்கு முன்பு பல துன்பங்களினுல் பீடிக்கப்படுவாய். அவற்றினின்றும் விடுபட உன்னுல் முடியாது. அழகிய பெண்கள் பலர் உன் னைச் சூழ்ந்துகொள்வார்கள். அவர்கள் மத்தியில் எல்லாரைக் காட்டிலும் அதிக அழகோடுகூடிய ஒரு தேவகன்னிகை ஒளி மிக்க ஆடையாபரணங்களுட னிருப்பாள். அவளைப் பார்த்த வுடன் நீ மனங்கலங்குவாய். ஆனுல் நீ உறுதியாயிருக்க வேண்டும். அவளைப் பார்த்தபிறகும் உனக்குப் பாலேவனம் போகவேண்டுமென்ற எண்ணமிருக்குமாயின் நீ அவளுடைய கரத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும். உடனே ஹவைதா பாலேவனத்தில் நீ இருப்பாய்."

இவ்வளவு அருமையான விஷயங்கள் சொன்னதற்காக ஹாதீம் பரதேசியாருக்கு மிக்க நன்றி பாராட்டினுன். பின்பு

ஒரு வேலைக்காரன் அவர்களிருவருக்கும் பாற்சோறும் குளிர்ந்த நீரும் கொணர்ந்தான். பசியோடிருந்த ஹாதீம் அச்சோற்றையுண்டு இரவில் அங்கே தங்கி மறுநாட்காலையில் பரதேசியாரிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

3. ஹாதீமும் மாயக்காரியும்.

சிலதினங்கள் சென்றபின் ஹாதீம் நிழல்மரங்கள் சூழ்ந்த ஓர் ஏரியை அடைந்தான். அதில் சுத்தமான தண்ணீர் நிறைந்திருந்தது. அந்த ஸ்தலத்தின் அழகைப்பார்த்து அவன் ஆனந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு தேவகன்னிகை ஜலத்திலிருந்து தோன்றினாள். அவளைப் பார்க்க முடியாமல் ஹாதீம் ஒருகையால் தன் கண்ணை மூடிக்கொண்டான். அவளோ அவனது மற்றொரு கையைப்பற்றி ஜலத்துக்குள் அவனை இழுத்துக்கொண்டு சென்றாள். ஜலத்திற்குள் வெகுதூரம் சென்றபின் கண்ணைத் திறந்துபார்க்கையில் ஓர் அழகான தோட்டம் அவனுக்கு முன்னே தெரிந்தது. உடனே தேவகன்னிகை அவன் கையை விட்டுவிட்டு மறைந்தனள்.

கொஞ்சதூரம் ஹாதீம் அத்தோட்டத்தில் நடந்து செல்ல, அழகிய மாதர் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டு தங்களுடைய மேனிமினுக்கால் அவனை மயக்கினார்கள். அவற்றையெல்லாம் அவன் கவனியாமல் பரதேசியார் கூறியதை ஞாபகத்தில்வைத்துக்கொண்டு தன் மனத்தை அவர்களிடம் விடாமல் உறுதியாயிருந்தான். அப்பெண்களெல்லாரும் அவனை அழைத்துச் சென்று இரத்தினங்கள் இழைக்கப்பட்ட ஆபரணங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பெற்ற ஓர் அரண்மனையில் விட்டார்கள்.

அங்கே ஒரு சிங்காதனம் இருந்தது. அதில் ஒருவரும் இல்லை. 'இந்தச் சிம்மாசனத்தில் நான் ஏன் ஏறக்கூடாது?' என்று சொல்லிக்கொண்டு அவன் அதன் அருகிற்சென்று அதன்மேல் தன்காலை வைத்தான். உடனே ஒரு சத்தம் உண்டாகவே சிம்மாசனம் முறிந்ததென்று எண்ணி அவன் திடுக்கிட்டான். பிறகு கவனிக்கையில் அது முறியாமலிருக்கக் கண்டு அதில் ஏறி உட்கார்ந்தான். மறுபடியும் ஒரு சத்தம் உண்டாயிற்று. உடனே பரதேசியார் குறிப்பிட்டிருந்த கன்



மங்கையர்கள் ஹாதீமைச் சூழ்ந்துகொள்ளல்.

னிகை எதிரில் தோன்றிப் புன்னகை செய்தாள். அவள் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டிருந்தனள். ஆனால் அவள் முகம் மிகவும் மெல்லிய ஒரு துணியால் மூடப்பட்டிருந்தது. அவள் ஹாதீம் வீற்றிருந்த சிம்மாசனத்தினடியிற் போய் நின்றாள்.

அத்தகைய மடந்தையை நோக்கியவுடன் ஹாதீமின் மனம் மிக்க தடுமாற்றத்தை யடைந்தது. இன்னது செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவள் முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்துவிடவேண்டுமென்ற ஆவல் அவனுக்கு நிரம்ப இருந்தது. அவள் கையைப் பற்றிக்கொண்டால்தான் அவளுடைய மாயவலையிற் சிக்கிக்கொள்ளாமலிருக்கலாமென்று பரதேசியார் சொன்ன விஷயம் அப்போது அவன் ஞாபகத்திற்கு வந்தது. ஆயினும் அவ்விடத்திலுள்ள வேறு சில விநோதமான காட்சிகளைப் பார்க்கவேண்டுமென்று அவன் எண்ணி அச்சிம்மாசனத்திலேயே மூன்றுநாள் இரவும் பகலும் உட்கார்ந்திருந்தான்.

இரவு முழுவதும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் அவை இருந்த இடம் அவன் கண்ணிற்குப் புலப்பட வில்லை. வெளிச்சம் மட்டும் மிகவும் பிரகாசமாயிருந்தது. இனிமையான பாட்டுக்கள் அவன் காதில் விழுந்தன. அவை இன்ன இடத்திலிருந்து வந்தனவென்று அவனுக்குத் தெரிய வில்லை. அவனுக்கு எதிரே ஒரு விசாலமான மண்டபத்தில் தேவகன்னிகைகள் கூட்டமாக நின்று நர்த்தனம்செய்து கண் ஜாடையாலும் புன்னகைகளாலும் அவனை மயக்கினார்கள். விதம்விதமான ஆகாரங்களையும் பழங்களையும் கொணர்ந்து கொடுத்தார்கள். ஹாதீம் எல்லாவற்றையும் சாப்பிட்டான். ஆனால் எவ்வளவு சாப்பிட்டும் அவனுக்குப் பசியடங்கவில்லை. இவ்விதமாக மூன்று தினங்கள் சென்றன. நான்காம் நாள் ஹாதீம் தனக்குள், "இத்தோற்றங்களை நூறு வருஷம் பார்த்துக் கொண்டிருந்தாலும் உனக்குத் திருப்தியுண்டாகப் போகிற தில்லை. திக்கற்ற ஒரு சிறுவனை விட்டு வந்திருக்கிறாய். அவ னுடைய எண்ணம் உன்னுடைய முயற்சியினாலேதான் நிறை வேறவேண்டும். ஆகையால் எழுந்திருந்து உன் வேலையைப் பார்" என்று சொல்லிக்கொண்டு உடனே எழுந்திருந்து பர தேசியார் சொல்லியிருந்த கன்னிகையின் கரத்தைப் பிடித் தான். பிடித்தவுடன் வேறொரு கன்னிகை சிம்மாசனத்தினடி யிலிருந்து கிளம்பி அவனை ஓர்அடி அடித்துப் பூமிக்குள் அமுக்கிவிட்டாள்.

அவன் கண்ணைத்திறந்து பார்த்தான். தோட்டமும் காண ப்படவில்லை; தேவகன்னிகைகளும் காணப்படவில்லை. ஒரு பெரிய பாலைவனம்மட்டும் தெரிந்தது. பரதேசியார் சொல்லி யிருந்த அடையாளத்தைக்கொண்டு அதுவே ஹவைதா பாலை வனம் என்று நிச்சயித்தான். பிறகு அங்கே தான் உத்தேசித்த மனிதனை ஹாதீம் தேட ஆரம்பித்தான். கொஞ்சதூரம் நடந்து சென்றதும் அவன் காதுக்கு இனிய ஒரு சத்தம் கேட்டது. அவன் கவனித்துக் கேட்கவே "ஒருதரம் பார்த்ததை மறுபடி யும் பார்க்க விரும்புகிறேன்" என்ற வாக்கியம் அவன் காதில் விழுந்தது. இம்மாதிரி மூன்றுதரம் அவன் காதில் விழுந்த பிறகு சத்தம் அடங்கிவிட்டது. சத்தம் வந்த திக்கை நோக் கிக்கொண்டே அவன் அதிகவேகமாய் நடந்து சென்றான். ஏழுநாள் இரவும் பகலும் போய்க்கொண்டேயிருந்தான்.

அடிக்கடி அவனுக்கெதிரிலிருந்து அந்த வார்த்தைகள் அவன் செவியில் விழுந்தனவேயன்றி அவற்றைச் சொல்லுபவனை அவன் காணவில்லை.

இப்படியிருக்கையில் எட்டாம் நாள்மாலையில் ஒரு வயோதிகன் தரையில் படுத்துக்கொண்டிருந்ததை ஹதீம் கண்டு அவனருகிற்சென்று அவனுக்கு வந்தனம் செய்தான். கிழவன் ஹதீமை ஆசீர்வதித்து, "நீ எங்கிருந்து வருகிறாய்? உனக்கு இங்கு என்னவேலை?" என்று கேட்டான்.

ஹதீம்:—"ஐயா, ஒருமுறை பார்த்ததை மறுபடி பார்க்க வேண்டுமென்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே! அதன் கருத்தென்ன? அதைத் தெரிந்துகொள்வதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்."

கிழவன், "என்பக்கத்தில் உட்கார்ந்துகேள்; சொல்லுகிறேன்" எனவும் ஹதீம் உட்கார்ந்தான். ஒரு நிமிஷத்திற்குள் எங்கிருந்தோ இரண்டு துண்டு ரொட்டியும் இரண்டு கிண்ணம் தண்ணீரும் வந்தன. அவை மந்திரபலத்தினால் வந்திருக்கவேண்டுமென்று ஹதீம் எண்ணினான். கிழவன் ஒரு துண்டு ரொட்டியையும் ஒரு கிண்ணம் ஜலத்தையும் ஹதீமுக்குக் கொடுத்து மீதியைத் தான் வைத்துக்கொண்டான். இருவரும் மௌனமாயிருந்து ஆகாரஞ் செய்தார்கள். பிறகு ஹதீம் கிழவனைப்பார்த்து, "நீங்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும் அவ்வார்த்தைகளின் கருத்தென்ன?" என்று கேட்கவே கிழவன் தன் வரலாற்றை அடியிற் கண்டவாறு சொல்லலுற்றான்:—

"முன்பு ஒருகாலத்தில் நான் ஓர் ஏரிக்கரைக்கு வந்தேன். அப்போது அந்த ஏரிஜலத்திலிருந்து ஒரு பெண் தோன்றினாள். அவள் என் கையைப் பிடித்து விரைவாக ஏரிக்குள் இழுத்துக் கொண்டுபோய்விட்டாள். பிறகு என்கண்ணைத் திறந்து பார்த்தேன். உடனே ஓர் அழகான தோட்டம் என் கண்ணிற்குப் புலப்பட்டது. அதன் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பேரழகு வாய்ந்த பல பெண்கள் கூட்டங் கூட்டமாக என்னைச் சுற்றி வந்து பிறகு என்னை ஓர் அரண்மனைக்கு அழைத்துச்சென்று அங்கிருந்த ஒரு பெரிய சிம்மாசனத்தண்டை விட்டார்கள். அதில் நான் உட்கார்ந்து சுற்றிலுமுள்ள நேர்த்தியான பொருள்களைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அப்போது அவர்க

ளைக்காட்டிலும் அதிக அழகுள்ள ஒரு கன்னிகை சிம்மா சனத்தின் பக்கத்தில் வந்து நின்றாள். அவள் முகம் ஒரு மெல்லிய துணியால் அழகாக மூடப்பட்டிருந்தது. அவளைப் பார்த்தமாத்திரத்தில் என் மனம் என் சுவாதீனத்தில் இல்லாமற் பைத்தியம் பிடித்தவன்போல் ஆனேன். அவள் முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்தேன். அவள் என்னைப்பார்த்துப் புன்னகைசெய்தாள். அப்போது இருந்த என் சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அவளை என் பக்கத்தில் இருக்கச் சொல்லுவதற்காக அவள் கையைப் பிடிக்கவே திடீரென்று பூமியிலிருந்து வேறொரு பெண் தோன்றி என்னை ஓர் அடி அடித்தனள். உடனே நான் இப்பாலைவனத்தில் வந்து விழுந்தேன். இங்கே ஓய்வில்லாமல் தனியே அலைந்து கொண்டிருக்கிறேன். என் ஞாபகம் முழுவதும் என்னை மயக்கிய அழகிய கன்னிகையின்மேல் இருக்கிறது."

வயோதிகன் அவ்வாறு சொல்லிப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் சொரிந்தான். பிறகு ஒரு பைத்தியக்காரனைப்போல் திடீரென்று எழுந்து இங்குமங்கும் ஓடி "நான் ஒருமுறை பார்த்ததை மறுபடி பார்க்க விரும்புகிறேன்" என்று கதறினான். ஹாதீம் ஓடிப்போய் அவனைப் பிடித்துக்கொண்டு, "ஐயா! அந்த அழகிய கன்னிகையை மறுபடியும் பார்த்தால் உங்கள் மனம் சாந்தமடையுமா?" என்று கேட்டான்.

"அதற்குச் சந்தேகமேயில்லை. ஆனால் அது முடியாத காரியம்" என்று கிழவன் சொன்னான். ஹாதீம், "என்னுடன் வாருங்கள். அவளை மறுபடி பார்க்கிறவழியைச் சொல்லுகிறேன்" என்று சொல்லக் கிழவன் மிக்க சந்தோஷத்துடன் அவனைத் தொடர்ந்து சென்றான்.

இருவரும் சிலநாள் பிரயாணம்செய்து முன்பு குறிப்பிட்ட ஏரிக்கரையிலுள்ள நிழலடர்ந்த சோலையை யடைந்தார்கள். ஹாதீம் கிழவனைப்பார்த்து, "ஐயா, பெரியவரே, நீங்கள் மறுபடி அரண்மனைக்குப் போகும்போது உங்களை மயக்கிய பெண்ணையே பார்த்து ஆனந்தமுற்றிருக்கவேண்டுமென்று உங்களுக்கு இஷ்டமிருக்குமாயின் நீங்கள் எந்தக்காரணத்தினாலும் அவள் கையைப் பிடிக்கவும் கூடாது. முகத்திலுள்ள துணியை எடுக்கவும் கூடாது. அவள் கையைப் பிடித்தால் முன்பு உண்டான கஷ்டம் நேரிடும். மறுபடி அந்த அரண்

மனைக்குப் போக உங்களால் முடியாது. நான் வரும்போது வழியில்பார்த்த ஒரு பெரியவரிடம் இவைகளையெல்லாம் தெரிந்துகொண்டேன். ஏரிக்கரையில் அதோ ஒரு மரம் இருக்கிறது பார்த்தீர்களா? அங்கே போயிருங்கள். ஜலத்திலிருந்து ஒரு கன்னிகை முன்போல் வந்து உங்களை அழைத்துப்போவாள்" என்றுன்.

ஹாதீம் சொன்னபடியே கிழவன் செய்தான். அவன் மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் ஒருபெண் வந்து அவனை ஜலத்துக்குள் அழைத்துச் சென்றுள்.

4. ஹாதீம் ஷாஹபாத்துக்கு வருதல்.

ஹம்ஸதேவி கேட்ட முதற்கேள்விக்குப் பதில் தெரிந்துகொண்டவுடன் ஹாதீம் ஷாஹபாத்துக்கு வந்து அவளைப் பார்த்து எல்லாவற்றையும் சொன்னுன். ஹம்ஸதேவி அவனுடைய விருத்தாந்தங்களைக் கேட்டபொழுது அவன் தைரியத்தையும் புத்தி கூர்மையையும் மிகவும் மெச்சிக்கொண்டாடினுள். உடனே அவள் ஆகாரம் கொண்டுவந்து வைத்து அவனைச் சாப்பிடச்சொன்னுள். பிறகு ஹாதீம் அவளைப் பார்த்து, "ஆண்டவன் கிருபையால் உன்னுடைய முதல் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். இரண்டாவது கேள்வி என்ன?" என்று கேட்டான்.

ஹம்ஸதேவி:—"கொஞ்சம் இளைப்பாறு; பிறகு சொல்லுகிறேன்" என்றுள். ஹாதீம் முனிவரன் இருவரும் ஹம்ஸதேவியின் அரண்மனையில் ஆகாரஞ்செய்துவிட்டு அன்றிரவு அங்கேயே நித்திரை செய்தார்கள். மறுநாட் காலையில் விடைபெற்றுக் கொள்ளுவதற்காக அவளிடம் இருவரும் சென்றுர்கள்.

ஹம்ஸதேவி:—"என்னுடைய இரண்டாவது கேள்வியைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். ஒருவன் தன்வீட்டுக் கதவின் மேல், 'நன்மையைச்செய்து தண்ணீரில் போட்டுவிடு' என்று எழுதியிருக்கிறுன். அதன் கருத்தென்ன? அவன் எங்கே இருக்கிறுன்? அவன் என்ன நன்மைசெய்து தண்ணீரில் போட்டிருக்கிறுன்? இதுதான் இரண்டாவது கேள்வி" என்றனள்.

ஹாதீம் பிறகு அவளிடம் விடை பெற்றுக்கொண்டு முனிவரனுக்கு ஆறுதல்சொல்லி அங்கிருந்து புறப்பட்டான்.

அத்தியாயம் 3.

இரண்டாவது வினாவுக்கு விடை.

1. ஹம்ஸதேவி குறிப்பிட்ட வசனத்தை ஹாதீம் ஒரு வீட்டுக் கதவில் காணுதல்.

ஹம்ஸதேவியினிடம் ஹாதீம் விடை பெற்றுக்கொண்டு புறப்படுகையில் அவள் குறிப்பிட்ட மனிதன் இருக்கும் தேசத்தைத் தெரிவிக்கும்படி அவளைக் கேட்டான். தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று அவள் சொல்லிவிட்டனள். ஆனாலும் அவளைக் குழந்தைப்பருவம்முதல் வளர்த்து வந்த செவிலித்தாய், "அந்த மனிதன் ஷாஹபாத்துக்கு வடக்

ஹம்ஸதேவியின் செவிலித்தாய் ஹாதீமுக்குச் சில விஷயங்கள் சொல்லுதல்.

கேயுள்ள 'மாதின்' என்ற நகரத்தில் இருக்கிறான்" என்றாள். உடனே ஹாதீம் ஷாஹபாத்திலிருந்து வடதிசையை நோக்கிப் புறப்பட்டான். பலநாள் பிரயாணம்செய்தும் அவன் தேடிச்சென்ற மனிதனைப்பற்றி ஒருவித வரலாறும் தெரிந்து

THE REGISTRAR OF BOOKS 13 SEP 1918 MADRAS

கொள்ள முடியாமல், கடைசியில் ஒருநாள் ஓர் ஆற்றங் கரையை யடைந்தான். அங்கே கருங்கல்லாற் கட்டப்பட்ட ஒரு பெரிய மாளிகை இருந்தது. அதன் வெளிக்கதவில் "நன்மைசெய்து ஜலத்தில் போடு" என்ற வாக்கியம் வரையப் பெற்றிருந்தது. அதைப்பார்த்து ஹதீம் சந்தோஷமடைந்து கருணாமூர்த்தியான கடவுளை மனமார வாழ்த்தி, "நான் தேடி வந்த பொருளைக் கண்டுவிட்டேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அவ்வாறு அவன் சொல்லிக்கொண்டிருக்கையில் சில வேலைக்காரர்கள் வந்து அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள். உள்ளே சென்றதும் ஏறக்குறைய நூறு பிராயமுள்ள ஒரு பெரியவர் ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருப்பதை அவன் கண்டான்.

அந்தப் பெரியவர் ஹதீமைக் கண்டவுடன் எழுந்து அவனை எதிர்கொண்டழைத்தார்; பிறகு அறுசுவையுண்டியுடன் அவனுக்கு ஆகாரஞ் செய்வித்தார். ஹதீம் பசியையும் தாகத்தையும் தீர்த்துக்கொண்டு அவரைப்பார்த்து, "ஐயா! உங்கள் மாளிகையின் வெளிக்கதவில் எழுதியிருக்கும் வசனத்திற்குப் பொருள் என்ன? அதிற் குறிப்பிட்ட நன்மை யாவது யாது? இவற்றைத் தெரிந்துகொள்வதற்காகவே நான் வெகுதூரம் அலைந்து இங்கு வந்தேன். நல்லவேளையாய் உங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன்" என்றான்.

பெரியவர், "எதற்காக நீ அந்தவிஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாய்?" என்று ஹதீமைக் கேட்க ஹதீம், "என்னுடைய நண்பனொருவனுக்காக இங்கே வந்திருக்கிறேன். அவன் ஓர் அழகிய கன்னிகையின்மேல் மோகங் கொண்டிருக்கிறான். இவ்வாக்கியத்தின் கருத்தைத் தெரிந்து அவன் சொல்லாதவரையில் தன்னை அவன் மணம் செய்து கொள்ள முடியாதென்று சொல்லுகிறாள்" என்றான். பின்பு பெரியவர், "அப்படியா! என் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். அப்போது உனக்கு எல்லாம் விளங்கும்" என்று தம் வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

2. பெரியவருடைய வரலாறு.

"நான் சிறுவனாயிருக்கையில் அஞ்சாத நெஞ்சுபடைத்த திருடனாக இருந்தேன். அப்போது பிறர் பொருளை எவ்விதத்

தினுலாவது கொள்ளையடித்தே ஜீவனம் செய்வது எனக்கு வழக்கம். ஆனுல் நான் செய்தது தவறென்று எனக்கே நன்ருகத் தெரிந்தது. அதற்காகத் தினந்தோறும் நல்லெண்ணெயும் சர்க்கரையும் கலந்து இரண்டு கோதுமைரொட்டிகள் செய்து நான் செய்த பிழைகளை மன்னிக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு அவற்றை ஆற்றில் போட்டு வந்தேன். அந்த ரொட்டிகளை ஆற்றிலுள்ள மீன்களுக்கு இரையாகப் போடுவதனுல் ஜனங்களைக் கொள்ளையிடும் எனது பாவம் தொலையுமென்று நினைத்தேன். ஒருநாள் எனக்கு மிகவும் கடுமையான ஒரு நோய் கண்டது. அதனுல் நான் பிரஞ்ஞையற்றுப் போனேன். என் உயிர் உடலைவிட்டு நீங்கினது போல் காணப்பட்டது. ஒருவன் என் கையைப் பிடித்து நரகத்தைக் காட்டி, 'அதோ தெரிகிறதே அந்த இடந்தான் உனக்கு ஏற்பட்ட இடம்' என்று சொன்ஞற்போல் இருந்தது. அவன் என்னை நரகக்குழியில் தள்ளும் தறுவாயில் அழகிய இரண்டு இளைஞர்கள் என்னைக் காப்பாற்ற வந்தார்கள். என் குலதெய்வம்போற் காணப்பட்ட அவர்கள் என்னைப் பலமாகப் பிடித்துக்கொண்டு அந்த மனிதனைப்பார்த்து, 'இவனை நரகக்குழியில் தள்ளவேண்டாம். இவன் பாவியாயிருந்தாலும் முடிவில் சுவர்க்கத்திற்கு வரக்கூடியவன். அங்கேயே இப்பொழுது நாங்கள் அவனைக் கொண்டுபோவோம்' என்ருர்கள்.

"பிறகு அவர்கள் என்னைச் சுவர்க்கத்துக்குக் கொண்டு போஞர்கள். அங்கே ஒரு பெரிய தேவதை அவர்களைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இவனைக் கொண்டுவந்தீர்கள்? இவனுக்கு இன்னும் நூறுபிராயம ஆயுள் இருக்கின்றதே. இவன் பெயர்கொண்ட வேருெருவன் இருக்கிருன். அவனையல்லவோ நான் கொண்டுவரச் சொன்னேன்? இவனைக் கொண்டுபோய் விட்டுவிட்டு அவனைக் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட அந்த இளைஞர் இருவரும் என்னை என் வீட்டண்டை கொண்டுவந்து விட்டுத் திரும்பிஞர்கள். அவ்வாறு திரும்புகையில் அவர்கள் என்னைப்பார்த்து, 'நீ தினந்தோறும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு ஆற்றில் எறியும் இரண்டு ரொட்டித்துண்டுகளும் நாங்களே' என்று சொல்லிப் போஞர்கள்.

"நான் மூர்ச்சைதெளிந்து எழுந்ததும் 'அடைக்கலம் அடைக்கலம்' என்று சொல்லிக்கொண்டே இங்குமங்கும் ஓடி, 'சர்வேசா, கிருபாநிதே, என்னைக் காப்பாற்றவேண்டும். நான் மகாபாவி. நான் செய்த பாவங்களையெல்லாம் நினைத்து இப்போது வருத்தப்படுகிறேன். நீதான் என்னை மன்னித்துப் பாதுகாக்கவேண்டும். கிருபாசமுத்திரமே! என்னைக் காப்பாற்றி என்னை நல்லவழியில் செலுத்தவேண்டும்' என்று பிரார்த்தித்தேன்.

"பிறகு எனக்கு உடம்பு சௌக்கியமானதும் வழக்கம் போல் இரண்டு ரொட்டித்துண்டுகளைச் செய்து ஆற்றில் எறிந்தேன். அப்போது கரையில் நூறு வராகனைக் கண்டேன். அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து, யாருக்காவது பணம் கேட்டுப்போயிருந்தால் அவர் என்னை வந்து கேட்கலாம்' என்று ஊர் முழுவதும் பறையறைவித்தேன். ஒருவராவது வரவில்லை. பிறகு யாராவது வந்து கேட்டால் கொடுக்கலாமென்றெண்ணி அந்தப் பணத்தைத் தனியே வைத்திருந்தேன்.

"மறுநாள் வழக்கம்போல் ஆற்றங்கரைக்குப் போய் ரொட்டித்துண்டுகளை எறிந்தேன். அன்றைக்கும் நூறு வராகன் கரையில் இருந்தது. அதையும் எடுத்து வைத்தேன். இம்மாதிரி பத்துத்தினங்கள் ஆயின. பதினோராம்நாள் இராத்திரி நான் தூங்குகையில் என் கனவில் ஒரு தேவதூதன் தோன்றி, 'நீ ஆற்றில் போட்ட ரொட்டித்துண்டுகள் கடவுளிடம் உன்னைப்பற்றிப் பேசி உன் பாவங்களை மன்னிக்கச் செய்தன. ஆற்றங்கரையிற் கிடக்கும் பணம் உன் செலவுக்காகவே, உனக்குச் செலவானது போக மிகுந்ததை ஏழைகளுக்குக் கொடுத்துத் தருமவழியில் செலவிடு' என்று சொன்னான்.

"நான் நித்திரைதெளிந்து எழுந்ததும் கடவுளை வந்தனம் செய்து இந்த மாளிகையைக் கட்ட ஆரம்பித்தேன். இதன் வெளிக்கதவில் எழுதியிருக்கும் வசனம் உனக்குத் தெரிந்ததே. தினந்தோறும் எனக்கு ஆற்றங்கரையில் நூறு வராகன் கிடைக்கிறது. யாசகர்களுக்குக் கொடுப்பதிலும் ஏழைகளுக்கு அன்னம் அளிப்பதிலும் அந்தத் தொகையைச் செல

விட்டு வருகிறேன். எனக்கு ஆயுட்காலம் இன்னும் நூறு வருஷம்வரையில் இருக்கிறது. இதுதான் என் வரலாறு."

3. ஹாதீம் ஷாஹபாத்துக்குத் திரும்புதல்.

பெரியவர் சொன்ன வரலாற்றை ஹாதீம் கேட்டுக்கொண்டு மறுநாள் அவரிடம் விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டுச் சில தினங்களில் ஷாஹபாத்துக்கு வந்து சேர்ந்தான். நேரே முனிவரனுடைய விடுதிக்குப் போய் அவனால் உபசரிக்கப் பெற்றான். ஹம்ஸதேவியின் வேலைக்காரர்கள் அவன் வரவை அவளுக்குத் தெரிவித்தார்கள். அவள் மறுநாள் ஹாதீமை வருவித்து எல்லா விஷயங்களையும் அவன் சொல்லக் கேட்டனள். ஹாதீம் ஆண்டவன் கிருபையால் தான் போனகாரியம் நிறைவேறிற்றென்று சொன்னதோடு பெரியவருடைய சரித்திரத்தையும் விவரமாகக் கூறினான். ஹம்ஸதேவி ஆச்சரியமான அந்த வரலாற்றைக் கேட்டுத் தன் செவிலித்தாயை நோக்கினாள். அவள் அவன் சொன்ன யாவும் உண்மையே யென்றும் இரண்டாவது கேள்விக்கு அவன் சொன்ன விடை சரிதான் என்றும் சொன்னாள்.

பிறகு ஹாதீமுக்கு ஹம்ஸதேவி ஆகாரம் செய்வித்தாள். மூன்று தினங்கள்வரையில் ஹாதீம் தன்னுடைய பிரயாணக் களைப்பை ஆற்றிக்கொண்டு மறுபடி ஹம்ஸதேவியினிடம் போய் மூன்றாவது கேள்வியைச் சொல்லும்படி கேட்டான்.

அப்போது ஹம்ஸதேவி, "ஒரு மனிதன், 'ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. செய்தால் உனக்கே தீங்குநேரிடும்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் யார்? எங்கே இருக்கிறான்? அவன் யாருக்கு என்ன தீங்கு செய்தான்? அவனுக்கு என்ன கெடுதி நேர்ந்தது? இந்த விஷயங்களைத் தெரிந்துவா" என்றாள்.

அத்தியாயம் 4.

மூன்றாவது வினாவுக்கு விடை.

1. ஆசைநாயகியால் வெறுக்கப்பட்ட ஓர் இளைஞனை ஹாதீம் பார்த்தல்.

ஹாதீம் மூன்றாவது கேள்விக்கு மறுமொழியை அறிந்து வரும்பொருட்டுப் புறப்பட்டான். முன்போலவே இன்ன

திசையை நோக்கிச் செல்லலாமென்று அவனுக்கு முதலில் தெரியவில்லே. தான் தேடிச்செல்லும் மனிதன் 'ஹிமியார்' என்ற நகரத்துக்கு அருகில் எங்கேயோ இருக்கிருன் என்ற செய்திமட்டும் அவனுக்குத் தெரியும். ஆதலால் அவன் வட திசையை நோக்கிச் சென்ருன். ஒருமாதம் சென்றபின் தனக்கு முன்னே கொஞ்சதூரத்தில் ஒரு மலே இருப்பதைக் கண் ணுற்ருன். அதன் அடிவாரத்தை யடைந்ததும், "வா, வா, உன் பிரிவை இனி ஒரு நிமிஷமேனும் சகியேன்" என்ற ஒரு சத்தம் அவன் காதில் விழுந்தது.

அந்த வார்த்தைகளேத் தேடிக்கொண்டு அவன் செல்ல வில்லே. ஆயினும் அவ்வசனம் துக்கத்துடன் சொல்லப்பட் டமையாலும் கூடுமானவரையில் ஒவ்வொருவருடைய துக்கத் தையும் போக்குவதையே தனது கடமையாகக் கொண்டிருந் தாலும் அவ்வசனத்தின் கருத்தை ஹதீம் தெரிந்துகொள்ள நிச்சயித்தான். அவ்விஷயத்தை விசாரிப்பதனுல் ஒரு வேளே ஹம்ஸதேவி கேட்ட கேள்வி சம்பந்தமாய் ஏதேனும் விஷயம் கிடைக்கலாமென்ற எண்ணமும் அவனுக்கு உண்டாயிற்று. அவன் எண்ணியது தவறல்லவென்று பின்னுள்ள கதையால் தெரியவரும்.

அந்த மலேயின்மேல் ஹதீம் கொஞ்சதூரம் ஏறிச்சென்ற தும் ஒரு பெரிய மரத்தைக் கண்டான். அதனடியில் அதிக லக்ஷணம்பொருந்திய இளேஞனெருவன் உட்கார்ந்திருந்தான். அவன் சற்றுநேரத்திற்கொருதரம், "வா, வா; இனி ஒரு நிமிஷ மேனும் உனது பிரிவை நான் சகியேன்" என்று புலம்பிக் கொண்டு கண்களேத் திறவாமல் ஏதோ ஏக்கம் உற்றவன் போல் உட்கார்ந்திருந்தான்.

ஹதீம் அவன் சமீபத்திற் சென்று, "நண்பனே! நீ ஏன் துக்கப்படுகிருய்?" என்று கேட்க, அவன் ஹதீமைச் சிறிதும் கவனியாமல் எப்போதும்போலவே புலம்பிக்கொண்டிருந் தான். ஹதீம் மறுபடியும் அவனே வினவினுன். அதற்கும் விடையில்லே. சற்றுநேரம் பொறுத்து இளேஞனேப் பின்னு மொருமுறை பார்த்து, "நீ என்ன செவிடனு? உன் துக்கத்தின் காரணம் என்னவென்று நான் மூன்றுதரம் கேட்டேன். ஒன் றிற்கும் விடை கூருமல் இருக்கிருயே! என்னேப் பார்த்தால் உனக்கு மனிதனுகத் தோற்றவில்லேயா?" என்ருன்.

அதைக்கேட்ட சிறுவன் அப்போது கண்ணை மெல்லத் திறந்து ஹாதீமைப்பார்த்து, "அருமை நண்பனே! நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்? என்னிடம் உனக்கு என்னவேலை? என்னைப்பற்றி ஏன் விசாரிக்கிறாய்?" என்று கேட்டான்.

ஹாதீம்:—"நாம் இருவரும் ஒரேவகுப்பினரல்லவா? இருவரும் மனிதஜாதியிற் பிறக்கவில்லையா? ஒருசமயம் உன்னுடைய துக்கத்தை நான் போக்கக்கூடும்."

இளைஞன்:—"ஐயோ! உன்னைப்போல் அநேகர் இங்கே வந்து என்னுடைய விருத்தாந்தத்தைப்பற்றிக் கேட்டுக் கேட்டு வீணை தொந்தரவு கொடுத்துவந்திருக்கிறார்கள். என் வரலாற்றைக் கேட்டபிறகு ஒருவராவது எனக்கு உதவிசெய்ய முயலவில்லை. ஆதலால் நீ என்னை விட்டுவிட்டு உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ."

ஹாதீம்: — "உன் சரித்திரத்தை இத்தனை பேர்களுக்குச் சொன்னதுபோல் எனக்கும் சொல்லக்கூடாதா? அவர்களெல்லாரும் ஏதோ ஆவலினால் கேட்டிருப்பார்கள். நான் அப்படிப்பட்டவனல்ல; ஒரு சமயம் என்னால் உனக்கு அனுகூலம் ஏற்படலாம்."

இளைஞன்: — "அப்படியானால் உட்கார்ந்து கேள். என் சரித்திரத்தைச் சொல்லுகிறேன்" என்று தன் சரித்திரத்தைப் பின் வருமாறு கூறினான்:—

"நான் ஒரு வர்த்தகன். ஒருகாலத்தில் என் வேலைக்காரர்களுடன் ரோம்நாட்டிற்குப் போய்க்கொண்டிருந்தேன். இம்மலைக்குச் சமீபத்தில் வரும்போது அவர்களை முன்னே போகச் சொல்லிவிட்டு நான்மட்டும் இங்கேயுள்ள காட்சியைப் பார்த்துக்கொண்டு கொஞ்சநேரம் தங்கினேன். சீக்கிரத்தில் அவர்களுடன் வந்து சேர்வதாகச் சொல்லியிருந்தேன். என் கட்டளையின்படி அவர்கள் முன்னே சென்றார்கள். பிறகு நான் இந்த மலையின்மேல் ஏற ஆரம்பித்தேன். போகப்போக உச்சிவரையில் சென்று பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. இந்த மரத்தடியில் சிறிதுநேரம் இளைப்பாறினேன். அப்பொழுது அழகில் யாரும் நிகரில்லையென்று சொல்லும்படியான ஒரு பெண் என் கண்ணிற்குப் புலப்பட்டாள். அவளைக் கண்டதும் என் அறிவை இழந்து பிரஞ்ஞையில்லாமல் கீழே விழுந்துவிட்டேன்.

மரத்தடியிலுள்ள மடந்தையை இளைஞன் பார்த்தல்.

"சந்திரன்போன்ற முகத்தோடுகூடிய அப்பெண் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து என்னைத் தன் மடியில் போட்டுக்கொண்டு பரிமளம் மிகுந்த பன்னீரை என் முகத்தில் தெளித்துத் துடைத்தாள். எனக்கு மயக்கம் தெளிந்ததும் என் தலை அவள் மடியில் இருக்கக்கண்டேன். உடனே என் மனம் உருகிற்று.

"நான் எழுந்து, 'பெண்மணியே, நீ யார்? ஏன் இங்கே தனியே இருக்கிருய்?' என்று கேட்டேன்.

"அவள், 'நான் ஒரு தேவகன்னிகை. வெகுகாலமாய் உன்னைப்போன்ற ஒரு புருஷனைப்பார்க்க விரும்பியிருந்தேன். என் மனேபீஷ்டம் நிறைவேறிற்று' என்ருள்.

"'நான் அவளது அழகாகிய வலையில் பலமாய்ச் சிக்கிக்கொண்டமையால் என்னையும் என் வேலைக்காரர்களையும் என் வியாபாரத்தையும் முற்றிலும் மறந்தவனுனேன். அவளுடன் மூன்று மாதகாலம் இருந்தபிறகு ஒருநாள், 'ஜனங்களே இல்லாத இந்த இடத்தில் ஏன் இருக்கவேண்டும்? ஜனங்கள் வசிக்

கும் நகரத்திற்போய் உல்லாசமாய்க் காலம் கழிக்கலாமே' என்றேன். அதற்கவள், 'உன்னுடன் வர எனக்கு இஷ்டந் தான். இம்மலையைவிட்டுப் போகவேண்டுமானால் என் தாய் தந்தையர்களுடைய உத்தரவைப் பெற்றுவரவேண்டும். நான் உத்தரவு பெற்றுத் திரும்பிவருகிற வரையில் இந்த மரத்தடி யில் அசையாமல் இரு' என்றாள். 'திரும்பிவர எத்தனைநாள் ஆகும்' என்று நான் கேட்டதற்கு அவள், 'ஒரு வாரத்தில் வருவேன். ஆனால், நான் வருகிறவரையில் நீ இங்கேயே இரு. இந்த இடத்தைவிட்டுப் போனால் பிறகு வருத்தப்பட வேண் டியதாயிருக்கும்' என்றாள்.

"அவள் என்னைவிட்டுப் பிரிந்து இப்பொழுது ஏழு வருஷ காலம் ஆகிறது. அதுமுதல் இந்த இடத்தைவிட்டு நான் நகரவில்லை. மரத்தின் இலையைத் தின்றுகொண்டும் ஊற்றின் ஜலத்தைக் குடித்துக்கொண்டும் பிழைத்திருக்கிறேன். இது தான் என் கதை."

இளைஞன் தன் கதையைச் சொல்லி முடித்ததும் ஹாதீம் அவனைப்பார்த்து, "உன் பெயர் என்ன? அவள் தன் பெயரை யும் இருப்பிடத்தையும் உனக்குச் சொன்னாளா?" என்று கேட்க அவன், 'என் பெயர் தாமன்; அவள் பெயர் ஆல் கன்பரி; அவள் வசிக்குமிடம் ஆல்காமலை' என்றான்.

ஹாதீம்:—"உன்னைவிட்டுப் போனபோது அவள் எந்தத் திக்கை நோக்கிச் சென்றாள்?"

தாமன்:—"இங்கிருந்து வலதுகைப் பக்கமாகச் சென்றாள். நான் இந்த இடத்தைவிட்டு நகராமல் இருந்தமையால் அதி சீக்கிரத்தில் அவள் என் பார்வையினின்றும் மறைந்தனள். பிறகு இன்ன இடம் சென்றாளென்று எனக்குத் தெரியாது."

ஹாதீம்:—"நல்லது. உனக்கு உண்மையில் அவளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையிருந்தால் என்னுடன் வா. நாம் இருவரும் ஆல்காமலைக்குச் சென்று அவளைத் தேடிப்பார்ப் போம்."

தாமன்:—"என்னிடம் உள்ள பிரியத்தினால் நீ அவ்வாறு சொல்லுகிறாய். நீ சொல்லுகிறபடி உன்னுடன் வருவதில் தடையில்லை ஆனால், நான் இல்லாதகாலத்தில் அவள் இங்கு வருவாளாயின் என்னதீங்கு உண்டாகுமோ அறி யேன். அதைப்பற்றி அவளே முன்பு எச்சரிக்கை செய்தி

ருக்கிருள். ஆதலால் நான் இங்கேயே இருப்பது நலமென்று எண்ணுகிறேன்?"

ஹாதீம்:—"நண்பனே, நீ சொல்வதும் நியாயந்தான். நான் மட்டும் ஆல்காமலேக்குச் சென்று கடவுள் கிருபையால் அவளை உன்னிடம் அழைத்து வருகிறேன். இல்லாவிட்டால் உன்னையாவது அவளிடம் அழைத்துச் செல்லுகிறேன்."

இளைஞன்:—"தயாளகுணசீலரே, உங்களைப்போல் சொந்த வேலையை விட்டுவிட்டுப் பிறருக்காக உழைப்பவரை யான் இதுவரையில் எங்கும் பார்த்ததில்லை. உலகத்தாரெல்லோரும் ஒருமாதிரியாக இருக்க நீங்கள் மட்டும் ஏன் வேறுமாதிரியாக இருக்கவேண்டும்? அவர்களைப்போலவே நீங்களும் உங்கள் காரியத்தைக் கவனித்துக்கொண்டு போகலாமே."

ஹாதீம்:—"என்னை நீ வித்தியாசமாய் நினைக்கவேண்டாம். என் உடல் பொருளாவி மூன்றையும் பிறருக்காகவே தத்தம் செய்துவிட்டேன். என் வார்த்தையை நீ நம்பு. நானாவது வேறு யாராவது வந்து உன்னை யழைத்துப்போகிறவரையில் நீ இங்கேயே இரு."

ஹாதீம் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபின் இளைஞன் அங்கேயே தங்கியிருந்தான்.

2. ஹாதீம் கன்னிகையைக் கண்டதும் அவளை இளைஞனுடன் இருக்கச்செய்ததும்.

பிறகு ஹாதீம் தான் மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்றுவதற்காக அங்கிருந்து புறப்பட்டுச் சில தினங்களில் ஆல்காமலேயடிவாரம் வந்து சேர்ந்தான். அங்கே என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டு சற்று நிற்கையில் மலையின் உச்சியில் கந்தருவஸ்திரீகள் பலர் கூட்டமாகப் போனார்கள். அவர்களைக்கண்டு அவனும் பின்தொடர்ந்து சென்ருன். அவன் கொஞ்சதூரம் போவதற்குள் திடீரென்று அவர்கள் மறைந்துவிட்டார்கள். உடனே பல பக்கங்களிலும் சுற்றிப் பார்க்கவே சலவைக்கல்லில் தோண்டப்பட்ட ஒரு சுரங்கம் அவன் கண்ணிற்பட்டது. அதன் வழி நேராக இராமல் வளைந்து வளைந்து பூமிக்குள் அதிக ஆழம் சென்றது.

ஹாதீம் அதற்குள்ளே போகலாமா வேண்டாமா என்று தயங்கினான். வழவழப்பாயும் வளைவாயுமிருக்கிற அந்தப்

பாதையில் கால்வைப்பதற்கும் படிகள் இல்லை. உள்ளே சென்றால் வெளியே திரும்பிவருவது அசாத்தியமென்று அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் தன் கண்ணுக்கெதிரில் மறைந்த கந்தருவஸ்திரீகள் அவ்வழியேதான் சென்றிருக்கவேண்டுமென்று எண்ணியே அந்த வழியிற் செல்ல நிச்சயித்தான். ஆதலால் உள்ளே புகுந்து கொஞ்சங் கொஞ்சமாய் வழுக்கிப் பூமிக்குள் சென்று கடைசியில் சமதரையை யடைந்தான். சுற்றிலுமிருந்த தோட்டமும் மற்றக் காட்சிகளும் பார்வைக்கு இனிமையாயிருந்தன. அவன் போனபோது இருட்டிப்போனமையால் மிருதுவான ஓர் இடத்தைத்தேடி அங்கே தங்கி இராத்திரியைக் கழித்தான்.

மறுநாட்காலையில் அந்த இடத்தைச் சுற்றிப்பார்க்கையில் நேர்த்தியான மாளிகையொன்று தென்பட்டது. அதுதான் கந்தருவ மடந்தையர்களின் அரண்மனையாயிருக்கவேண்டுமென்று கருதி அதனை நோக்கி அவன் சென்றான். அவன் வருவதைப்பார்த்த பெண்கள், ‘இது எங்களுடைய நாடென்றும் உன்னுடையதல்லவென்றும் உனக்குத் தெரியாதா? இங்கு நீ எப்படி வந்தாய்? யார் அழைத்துவந்தார்?’ என்று கேட்டார்கள். அவன் அவற்றிற்குத் தக்கபடி விடையளித்ததும் அங்கே அவன் வந்த காரியம் யாதென்று அவனை விசாரித்தார்கள்.

ஹாதீம்:—“உங்களுடைய ராணியைப் பார்க்க வந்திருக்கிறேன். ஒருகாலத்தில் அவள் என் நண்பனொருவனிடம் பிரியங்கொண்டிருந்தாள். ஏதோ அலுவலிருக்கிறதென்றும் அதை முடித்துக்கொண்டு மறுபடி ஏழுதினங்களுள் வந்து சேர்வதாகவும் அதுவரையில் அவன் அந்த மரத்தைவிட்டு அசையக்கூடாதென்றும் சொல்லிவிட்டு வந்தாள். இப்பொழுது ஏழு வருஷகாலமாகியும் அவள் திரும்பி வரவில்லை. அவன் இன்னும் அங்கேயே இருக்கிறான். எப்பொழுதும் அவளையே நினைத்துக்கொண்டு மனம் நொந்து தேகம் இளைத்து யாவரும் கண்டு பரிதவிக்கும் நிலைமையை அடைந்துவிட்டான். ஆதலால் அவன்விஷயத்தை அவளுக்கு ஞாபகப்படுத்தி அவன் இறக்குமுன் அவளை அவனிடம்போய்ச் சேரும்படி சொல்ல வந்திருக்கிறேன்” என்றனன்.

அவன் அவ்வாறு சொல்லவும் அவனுக்கு வேண்டிய உதவிசெய்வதாக அந்தக் கந்தருவஸ்திரீகள் ஒப்புக்கொண்டார்கள். அவனை அந்த நிலைமையில் ராணியிடம் அழைத்துப்போகக் கூடாதென்று எண்ணி ஒரு கைதிபோல் அவன் கைகளைக் கட்டி நடத்திச்சென்று ராணியின் மாளிகைக்கு முன்னே நிறுத்தி ராணியிடம் சென்று யாரோ ஒரு மனிதனைத் தாங்கள் கண்டதாகவும் அவனைக் கைதிசெய்து அழைத்துவந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். உடனே அவள் அவனை உள்ளே அழைத்துவரும்படி கட்டளையிட அவர்கள் அழைத்துவந்தார்கள். மனிதன் என்ற வார்த்தை அவள் காதில் விழுந்ததும் மரத்தடியில் விட்டுவந்த தன் ஆசை நாயகனது ஞாபகம் அவளுக்கு உண்டாயிற்று. ஆனால் ஹதீமைப் பார்த்தவுடன் அவனை முற்றிலும் மறந்து ஹதீமையே தன் வசப்படுத்திக்கொள்ள நிச்சயித்தனள். பிறகு அவன் கையைப்பிடித்து இழுத்துப் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் இருக்கச்செய்தாள். அவன் யாமன்தேசத்து இளவரசனாகிய ஹதீம் என்று தெரிந்துகொண்டபொழுது அவளுக்கு அவனிடமிருந்த ஆசை பின்னும் அதிகரித்தது.

ஹதீமும் அவளது அழகைக்கண்டு மயங்கினான். ஆனால் அவளிடங்கொண்ட காதலை உடனே அகற்றிவிட்டுத் தான் வாக்களித்திருந்த நண்பனுக்கு உதவிசெய்ய எண்ணினான். பிறகு அந்த மடந்தையைப்பார்த்து அவளுடைய ஆசைநாயகனைத் தான் கண்டபோது அவனிருந்த நிலைமையைச் சொன்னான். அவள், 'என்னுடைய ஜனங்கள் ஒரு நரன் வந்திருக்கிறான் என்று சொல்லுகிறவரையில் அவனைப்பற்றி முற்றிலும் மறந்துவிட்டேன். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் அவனே வந்திருப்பானென்று எண்ணினேன். உன்னைப் பார்த்தபிறகு நீ அவனல்லவென்று தெரிந்தும் அவன் என் மனத்தைவிட்டு அகன்றுவிட்டான். அவனுக்கு என்மேலுள்ள ஆசை நிலையற்றதுபோலும். நிலையானதாயிருப்பின் என்னை வந்துபாராமல் ஏழு வருஷகாலம்வரையில் ஒரே இடத்திலிருப்பானா! நான் வசிக்கும் மலையையும் அதற்குரிய வழியையும் காட்டி என் பெயரையும் சொல்லி வந்தேன். அவன் நேசம் உண்மையாயிருந்தால் உயிர்போவதாயிருந்தாலும் என்னை வந்து பார்த்திருப்பானே' என்று சொன்னாள்.

ஹதீம் தன்னுற்கூடியபமட்டில் தன் சிநேகிதன் சார்பாகப் பேசியும் அவள் நம்பவில்லே. "அவன் எப்போதும்போலவே உன்னே நேசிக்கிருன் என்று நீ நம்பாவிட்டாலும் காமத்தால் வருந்தும் அவனே என் வார்த்தைக்காவது இங்கே வருவி. இல்லாவிட்டால் நானுவது போய் அழைத்துவருகிறேன். உன் முகத்தைப் பார்த்தாவது அவன் நோய்தீரட்டும்" என்ருன்.

ராணி, "அவன் என்னேப் பார்ப்பதில் நான் ஒன்றும் தடைசெய்யவில்லே. ஆனுல், அவன் என்னேப் பார்த்துவிட்டுப் போகலாமேயல்லாமல் வேருென்றையும் என்னிடம் எதிர்பார்க்க முடியாது" என்று ஹதீமைச் சந்தோஷப்படுத்துவதற்காகவே அம்மட்டில் இசைந்தாள்.

உடனே ஹதீம் அவ்விளேஞனே அழைத்துவரப் புறப்பட்டான். ஆனுல் அவனே விட்டுப்பிரிய இஷ்டமில்லாமல் அவள், "நீ மறுபடியும் இந்த அபாயமான பாதையில் செல்ல வேண்டாம். என்னுடைய ஊழியக்காரிகளாகிய கந்தருவ ஸ்திரீகள் போய் வெகு சீக்கிரத்தில் அவனே இங்கே அழைத்து வருவார்கள்" என்று சொல்லி அந்த ஸ்திரீகளுக்கு உடனே அவ்வாறு கட்டளேயிட்டாள்.

அவர்கள் வாயுவேகத்துடன் அவ்விளேஞனிருந்த மரத்தடிக்குச் சென்று அவனேக் கண்டு தங்கள் ராணி உடனே அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி அவனேத் தங்கள் தலேமேல் ஏற்றிக்கொண்டு ஆகாயமார்க்கமாக வந்து தங்கள் தலேவியின் முன்னே நிறுத்திஞர்கள்.

தாமன் தன் மனத்திற் குடிகொண்டிருந்த தன் ஆசை நாயகியின் அழகை அன்று முழுவதும் பார்த்துக்கொண்டிருந்தான். இருட்டிப் போனவுடன் ராணி ஒரு சைகை காட்டவே சில ஸ்திரீகள் ஆடிக்கொண்டும் சில ஸ்திரீகள் பாடிக்கொண்டும் அங்கே வந்தார்கள். அந்தக் கேளிக்கையில் ராணி தன் பழைய ஆசைநாயகனேக் கொஞ்சமேனும் கவனியாமலிருந்ததை ஹதீம் கவனித்தான். பிறகு அவன் தாமனிடம் சென்று, "கவலேப்படாதே. இந்த ஆச்சரியமான முத்தை ஜலம் நிறைந்த ஒரு பாத்திரத்தில் கொஞ்சநேரம் போட்டுவை. பிறகு அந்த ஜலத்தை ராணி வழக்கமாய் நீரருந்தும் பாத்தி

ரத்தில் ஊற்றிவிட்டு உன்னிடத்துக்குத் திரும்பிவிடு" என்று சொன்னுன்.

முன்பு ஹதீமைப் பாம்பு விழுங்கினபொழுது அவனைக் காப்பாற்றியது இந்த முத்துத்தான். ஆதலால் ராணி அந்த முத்துநீரைப் பருகுவாளாயின் அவள் மனம் மாறுபடும் என்று ஹதீமுக்கு நன்றுய்த் தெரியும்.

ஹதீம் சொன்னபடியே தாமன் செய்தான். ராணி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கந்தருவஸ்திரீகள் ஆடுவதையும் பாடுவதையும் கவனித்துக்கொண்டிருந்தாள். ஹதீம் அவளிடம் சென்று மிகவும் தாகமாயிருத்தலால் ஏதாவது சரபத்து சாப்பிடலாமென்று சொன்னுன். ராணி அதற்கிசைந்து வேலைக்காரர்களைச் சரபத்து கொண்டுவரும்படி உத்தரவு செய்தாள். சரபத்து வந்தபிறகு ஹதீம் அதனை மேலே குறிப்பிட்ட பாத்திரத்தில் விட்டு ராணியிடம் கொடுத்துச் சாப்பிடும்படி சொல்ல அவள் அங்ஙனமே சாப்பிட்டாள். அந்த ஜலம் கலவாத சரபத்தை ஹதீம் கொஞ்சம் பருகினுன். உடனே அவளுடைய ஆசையெல்லாம் பழைய நாயகனிடம் திரும்பிவிட்டது. அவனை எந்த விதத்திலாவது மணம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் ஒன்றே அவள் மனத்திற் குடிகொண்டிருந்தது. ஆனுல் முதலில் தன் பெற்றோர்களுடைய சம்மதத்தைப் பெறவேண்டித் தோட்டத்தை விட்டு அரண்மனைக்குச் சென்று அவர்களிடம் தன் கருத்தை வெளியிட்டாள். அவர்கள் அதற்குச் சம்மதிக்கவே அவள் சில பாங்கியர்களை யனுப்பித் தாமனையும் ஹதீமையும் அரண்மனைக்கு வருவித்தாள். பிறகு அவளுடைய தந்தை தாமதமின்றி அவளைத் தன் ஜாதி முறைப்படியே தாமனுக்கு விவாகம் செய்வித்தான்.

3. ஹதீம் தான் தேடிச்சென்ற மனிதனைப் பார்த்தல்.

ஹதீம் தன் சிநேகிதனுடன் ஒருவாரம் அவ்வரண்மனையில் இருந்தான். ஹம்ஸதேவி கேட்ட மூன்றுவது கேள்வியின் விடையைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு அங்கிருந்து புறப்பட நிச்சயித்துத் தன் கருத்தை அந்த ராணியினிடம் வெளியிட்டான். அவன் புறப்படுவதற்குமுன் கந்தருவராணி அவன் போகவேண்டிய இடத்தைச் சொல்லும்படி கேட்டாள்.

ஹிமயமலைக்குப் போகவேண்டுமென்று ஹாதீம் கூற அவள், “அப்படியானால் நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். அம் மலை இங்கிருந்து வெகுதூரத்திலிருக்கிறது. ஆயினும் என்னுடைய வேலைக்காரிகள் சீக்கிரம் உன்னை அவ்விடம் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்” என்றாள்.

ராணியின் கட்டளைப்படி கந்தருவஸ்திரீகள் ஹாதீமை ஒரு பல்லக்கில் ஏற்றிவைத்து ஆகாயமார்க்கமாக எடுத்துக் கொண்டுபோய் 24 மணிநேரத்திற்குள் ஹிமயமலையிற்சேர்த்து விட்டுத் தங்கள் இடத்துக்குத் திரும்பினார்கள்.

ஹாதீம் அங்கு வந்தவுடனே, “தீங்கு செய்யாதே, தீங்கு செய்தால் உனக்குத் தீங்கு நேரிடும்” என்ற சத்தம் அவன் காதில் விழுந்தது. அவ்வார்த்தைகளைச் சொன்ன மனிதன் ஒரு மரக்கிளையிலிருந்து தொங்கிய ஒரு கூட்டில் இருந்தான். ஹாதீம் அவனிடம் சென்று மிக்க இரக்கங்காட்டி அவன் சரித்திரத்தை விசாரித்தான்.

அப்போது அவன், “என்னை ஒன்றும் கேளாதே. நீ கேட்டு என்ன பிரயோசனம்? என் கஷ்டங்களை நீக்க உன்னால் முடியுமா? ஆயினும் நான் சொல்லும் ரகஸ்ய சமாசாரங்களை ஒருவரிடத்தும் வெளியிடுவதில்லையென்று நீ உறுதியாகச் சொன்னால் நான் அவற்றைச் சொல்லுகிறேன்” என்றான்.

ஹாதீம் அங்ஙனமே வாக்களித்தான். உடனே அம்மனிதன் தன் சரித்திரத்தை அடியில் வருமாறு சொல்லலுற்றான்:—

“என் பெயர் ஹாமிர். என் தகப்பனார் ஒரு வியாபாரி. எனக்கும் வியாபாரத்தொழிலையே அவர் கற்பித்துவந்தார். அதோ தெரிகிற நகரத்தைக் கட்டுவித்தவர் அவரே. அதற்கு என் பெயரையே வைத்திருக்கிறார். வியாபாரநிமித்தம் கப்பலேறி அயல்தேசம் செல்லுகையில் இறந்தனர். அவருடைய செல்வம் முழுவதும் பிறகு என் கைக்கு வந்தது. ஆயினும் வெகு சீக்கிரத்தில் அந்தச் சொத்து முழுவதையும் என் அஜாக்கிரதையால் அழித்துவிட்டேன். எனக்குத் தெரியாமலே என் தந்தைக்கு வேறு திரவியம் நிரம்ப இருந்ததாகக் கேள்வியுற்றேன். பிறகு அதைக் கண்டுபிடிக்க மிக்க ஆவலுடனிருந்தேன். என் கையிலிருந்த சொத்து முழுவதும் போனமையால் ஒரு பிச்சைக்காரனைப்போல் வீதியில் நான் திரிவது

வழக்கம். ஒருநாள் வீதிவழியே போகையில் ஒரு பெரிய வரைக் கண்டேன். அவர், 'திருட்டினாலாவது அஜாக்கிரதை யினாலாவது யாராவது தன் பொருளை இழந்துவிட்டால் அதனை மறுபடி கண்டுபிடிக்கும் வழியை நான் அவனுக்குக் காட்டுவேன் ஆனால் அவன் திரும்ப அடையும்பொரு ளில் நாலிலொரு பங்கை எனக்குக் கொடுக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே போனார். நான் உடனே அவரிடம் சென்று அவருடைய உதவியை நாடினேன். என் வீட்டை யும் தோட்டத்தையும் நன்றாகச் சோதனைசெய்து பார்த்துப் பூமிக்குள் என் தகப்பனார் புதைத்துவைத்திருந்த திரவியங் களைக் கண்டுபிடித்தார். ஆனால் அவற்றில் நாலில் ஒரு பங்கை அவருக்கு நான் கொடுக்கவேண்டியிருந்தும் அவ ருக்கு ஒன்றும் கொடாமல் மோசம்செய்ய எண்ணினேன். ஆதலால் சிறிதளவு பணம் கொடுத்து அவரைப் போகச் சொன்னேன். 'அற்பனே, பொய் சொல்லலாமா?' என்று சொல்லி என்னை அவர் மிகவும் நிந்தித்தார். நிந்தைமொழி களைக் கேட்டவுடன் அவரிடம் கோபங்கொண்டு அவரை அங்கிருந்து அடித்துத் துரத்தினேன். சில தினங்கள் சென்ற பின் அவர் திரும்பி வந்து எனக்கும் தமக்கும் வருத்தம் சிறி தும் இல்லாததுபோல் சிநேகமாகப் பேசினார். பூமியில் அங் கங்கே ஜனங்கள் புதைத்துவைத்திருக்கும் புதையல்களில் சிலவற்றை என் கண்ணிற் படும்படி அவர் தமது மந்திரவித் தையாற் செய்தார். அந்த வித்தையை எனக்குக் கற்பிக்கும் படி நான் அவரைக் கேட்டுக்கொள்ள அவர், 'என்னிடம் விநோதமான மை ஒன்றிருக்கிறது. அதனை யார் கண்ணில் தடவிக்கொள்ளுகிறானோ அவனுக்குப் பூமியிலுள்ள திரவிய மெல்லாம் தெரியும்' என்றார்.

"உடனே நான், 'அந்த மையை என் கண்ணில் தடவும். நான் காணும் சொத்தில் பாதியை உமக்குத் தருகிறேன்' என்று சொல்ல அவர், 'சம்மதம்; ஆனால் ஒருவருமில்லாத பாலைவனத்துக்குப் போவோம் வா' என்று என்னைக் கூப்பிட் டார். பின்பு நாங்கள் இருவரும் சேர்ந்து புறப்பட்டோம். இங்கே வந்து இந்தக் குகையைக் கண்டதும் 'இது யாருடை யது?' என்று கேட்டேன். 'ஒருவருடையதுமல்ல; இது ஒரு

பொது ஸ்தலம்' என்றார். இருவரும் இந்த மரத்தடியில் உட்கார்ந்தோம். பிறகு என் கண்ணில் அவர் ஒரு மையைத் தடவ ஆரம்பித்தார். ஐயோ! தடவினதும் நான் குருடனானேன்.

"அப்போது நான், 'ஏன் என்னை இவ்வளவு கொடுமையாக நடத்தவேண்டும்?' என்று கேட்க அவர், 'நீ என்னை மோசம் செய்ததற்குப் பலன் இதுவாகும். உனக்கு மறுபடி கண்தெரியவேண்டுமானால் இந்தக் குகையிலேயே இருந்து தவம் செய்யவேண்டும். நீ ஒருவரைப்பற்றியும் குறைசொல்லக் கூடாது. சற்றுநேரத்திற்கு ஒருதரம் 'ஒருவருக்கும் தீங்கு செய்யாதே; செய்தால் உனக்குத் தீங்கு நேரிடும்' என்று சொல்லிக்கொண்டிரு' என்றார்.

"பிறகு அவரைப்பார்த்து நான், 'நீர் என்னைப்போல் ஒரு நரமனுஷ்யர். இப்படி என்னைத் துன்பப்படுத்தலாமா? உமக்கு ஈசன் கூலி கொடுப்பார்?' என்றேன். 'மோசத்தின் பலன்' என்றுமட்டும் அவர் பதிலுரைத்தார்.

"அவர் ஒரே பிடிவாதமாக இருந்தமையால் எனக்கு எப்பொழுதுதான் கண்தெரியுமென்று அவரைக் கேட்டேன். 'ஒருநாள் ஒரு பிரபு வருவார். அவர் ஒரு பச்சிலையினால் உன் கண்ணைத் தடவுவார். பிறகு உனக்குக் கண்தெரியும். அந்த மூலிகை இந்தப் பாலைவனத்திலிருக்கிறது' என்று சொன்னார். மூன்று வருஷகாலமாக இங்கேயே யிருந்து வருந்துகிறேன். உன்னால் ஏதாவது எனக்கு உதவிசெய்யக் கூடுமா? இதுதான் என்கதை."

அந்தக் குருடனுடைய சரித்திரத்தைக் கேட்ட ஹாதீம், "நண்பனே கவலைப்படாமலிரு. சீக்கிரத்தில் உனக்குக் கண் தெரியும்படி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு மூலிகையைத் தேடும்பொருட்டு ஹிமயமலைப் பக்கத்துப் பாலைவனத்துக்குச் சென்றான். பாலைவனத்தை யடைந்ததும் அங்கே முன்பு அவனைக் கொண்டுவந்துவிட்ட கந்தருவ ஸ்திரீகள் அவனுசகாகக் காத்திருந்தார்கள். ஹாதீம் அந்தப் பாலைவனத்திலிருக்கும்வரையில் அவனுக்குத் துணையாகஇருந்து பிறகு ஷாஹபாத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று அவர்களுடைய தலைவியாகிய ராணி முன்னரே கட்டளையிட்டிருந்தனள்.

ஹாதீம் பச்சிலையைப் பறித்தல்.

அவர்களிடம் ஹாதீம் தான் வந்த காரியத்தைச் சொல லவே அவர்கள் அவனைப் பாலைவனத்திற்குள் அழைத்துச் சென்று பாதி இராத்திரியில் ஒரு பெரிய மைதானத்தை அடைந்தார்கள். அதில் பல இடங்களிலும் தேடிப் பார்க்கை யில் குறிப்பிட்ட பச்சிலை கண்ணிற்குப் புலப்பட்டது. ஒவ் வொன்றும் ஒரு விளக்குப்போலிருந்தமையால் மைதானம் முழுவதும் ஒரே பிரகாசமாயிருந்தது.

பாம்புகளும் தேள்களும் காட்டுமிருகங்களும் பச்சிலை யைச் சுற்றிக்கொண்டிருந்தன. அவற்றைக் கண்டு கந்தருவ ஸ்திரீகள் பயந்து நின்றனர். ஹாதீம் அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஒதுங்கியிருங்கள்; நான் போய் இரண்டு மூன்று இலைகளைக் கிள்ளிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுத் தன்னிடமுள்ள முத்தைக் கையிலெடுத்துச் சென்று ஒளிபொருந்திய பெரிய இலைகளில் மூன்றைப் பறித்துக் கொண்டு கந்தருவஸ்திரீக ளிருக்குமிடம் வந்து சேர்ந்தான். அவர்கள் அவன் தைரியத்தைக் கண்டு வியப்புற்று அவன்

ஒருவிதமான தீங்குமின்றித் திரும்பிவந்ததில் மிக்க சந்தோஷமடைந்தார்கள். பிறகு அவனைத் தங்கள் தோளில் தூக்கிக்கொண்டு ஹாமிர் இருக்குமிடம் வந்து சேர்ந்தார்கள்.

ஹாதீம் அவனிடம் சென்று, "வருத்தப்படாதே! உன் கண்ணுக்கு ஒளியைக் கொடுக்கக்கூடிய பச்சிலையைக் கொணர்ந்திருக்கிறேன்" என்றான்.

அப்போது குருடன், "வீரசிகாமணி, அந்தப் பச்சிலையைக் கசக்கிச் சாற்றை என் கண்ணிற் பிழி" என்று கேட்டுக்கொள்ள, ஹாதீம் அப்படியே மூன்றுமுறை பிழிந்தான். உடனே ஹாமிர் கண்ணைத்திறக்க அவனுக்கு முன்போல் பார்வை உண்டாயிற்று. பின்னர் ஹாதீமினுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து அவனைப் பலவாறு புகழ்ந்தான். ஹாதீம் அவனை எழுப்பி எல்லாவற்றையும் படைத்த ஈசனை வழிபடும்படி சொன்னான்.

பிறகு ஹாமிர் அளவற்ற தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் ஹாதீமுக்குக் கொடுக்க வந்தான். ஹாதீம் தனக்கு ஒன்றும் வேண்டாமென்றும் பசியால் வருந்துகிற ஏழை ஜனங்களுக்கு அன்னமும் ஆடையும் கொடுத்துதவினால் போதுமென்றும் சொன்னான்.

4. ஹாதீம் ஷாஹபாத்துக்கு வருதல்.

ஹாதீம் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு கந்தருவ ஸ்திரீகளின் உதவியால் ஆகாயமார்க்கமாக அதிவேகத்துடன் ஷாஹபாத்துக்கு வந்தான். கந்தருவஸ்திரீகள் கேட்டுக்கொண்டபடி அவர்களுடைய ராணிக்குத் தான் சௌக்கியமாக வந்து சேர்ந்த சமாசாரத்தை ஒரு கடிதத்தில் எழுதி அவர்களிடம் கொடுத்தான். அதனை வாங்கிக்கொண்டு அவர்கள் தங்கள் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

ஹாதீம் ஷாஹபாத்து நகரம் சேர்ந்ததும் ஹம்ஸதேவியின் வேலைக்காரர்கள் அவனைத் தெரிந்துகொண்டு தங்கள் எஜமானியிடம் அவனை யழைத்துச் சென்றார்கள். ஹம்ஸதேவி அவனை அன்புடன் உபசரித்து அவன் பிரயாணத்தில் நடந்த விஷயங்களைப்பற்றிப் பலவிதமாகக் கேட்டாள். 'ஒருவருக்கும் தீங்கு செய்யாதே; செய்தால் உனக்குத் தீங்கு நேரிடும்' என்ற வசனத்தைப்பற்றி அவன் சொன்ன வரலாற்றைக்

கேட்டு அவள் மிகவும் திருப்தியடைந்தாள். பிறகு அவனுக்கு ஆகாரம் கொண்டு வரச்சொன்னுள். முனிவரனில்லாமல் தான்மட்டும் போஜனம்செய்ய ஹாதீம் இணங்காமையால் ஹம்ஸதேவி அவனையும் வருவித்து இருவருக்கும் நன்ருகப் போஜனம் செய்வித்தாள். போஜனமானபின் ஹாதீம் அடுத்த கேள்வி யென்னவென்று கேட்டான்.

ஹம்ஸதேவி:—"நிஜத்தைப் பேசுகிறவன் ஒன்றிற்கும் பயப்படவேண்டியதில்லையென்று ஒருவன் சொல்லிக்கொண்டிருக்கிருன். அவன் யார்? எந்த விஷயத்தில் அவன் உண்மை பேசினுன். அதனுல் அவன் எவ்விதமான சாந்த மடைந்திருக்கிருன்? இவற்றை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

ஹாதீம்:—"அவன் இன்ன இடத்தில் இருக்கிருனென்று சொல்லக்கூடுமா?"

ஹம்ஸதேவி:—"அவனிருக்குமிடம் எனக்குத் தெரியாது; ஆனுல் என் செவிலித்தாய் அவன் 'காராம்' நகரத்திலிருப்பதாகச் சொல்லுகிருள்."

ஹாதீம், "அவ்வளவுபோதும், இவ்விஷயத்திலும் கடவுள் எனக்குத் துணைசெய்வார் என்று நம்புகிறேன்" என்றுசொல்லி அவளிடம் விடைபெற்றுக்கொண்டான்.

அத்தியாயம் 5.

நான்காவது வினுவுக்கு விடை.

1. ஹாதீம் ஒரு மந்திரவாதியை வென்றதும் அவன் குமாரியை மணஞ்செய்துகொண்டதும்.

ஷாஹபாத்து நகரத்தைவிட்டு ஹாதீம் புறப்பட்டு அநேக நாள் பிரயாணம்செய்து ஒரு மலையடிவாரத்தை யடைந்து அங்கே கொஞ்சதூரத்தில் ஒரு பெரிய மரம் இருந்ததைக் கண்டான். அந்த மரம் பக்கத்திலுள்ள மற்ற மரங்களைக்காட்டிலும் அதிக உயரமாக இருந்தது. அதன் அருகிற் சென்றதும் அதன் கிளை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பெண்ணின் தலை தொங்கியிருக்கக் கண்டான். அதனடியில் செந்நிறமான ஓர் ஏரி யிருந்தது. அதிலிருந்து இரத்தம் ஆருக ஓடிற்று. எல்

லாவற்றையுங்கண்டு ஹதீம் ஆச்சரியமடைந்து அந்த மரத்தடியில் உட்கார்ந்தான்.

அப்போது மரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் சிரங்கள் திடீரென்று நகைத்தன. நகைத்த சத்தத்தைக் கேட்டு அதிசயித்து ஹதீம் அதற்குக் காரணம் எதுவாயிருக்கலாமென்று ஆலோசித்துக் கொண்டிருக்கையில் மரத்தில் தொங்கிய தலைகளுள் எல்லாவற்றிற்கும் மேலிருந்த தலையில் அவன் கண் விழுந்தது. அது மற்றத் தலைகளைக்காட்டிலும் அதிக அழகாக இருந்தது எல்லா முகங்களுமே அழகாயிருந்தாலும் அதன் அழகு பார்ப்பவர் கண்களைக் கவரக்கூடியதாக இருந்தது. அதைக்கண்டு ஹதீம் மோகங்கொண்டு அம்முகத்தையுடையவளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நிச்சயித்தான். அழகான அவ்வளவு ஸ்திரீகளும் அவ்வளவு கொடுமையாக நடத்தப்படுவதற்குக் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ள அவன் இச்சைகொண்டான்.

சூரியாஸ்தமனமாகி இருட்டுகிற சமயத்தில் அங்கே ஒரு விநோதம் நடந்தது. மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த தலைகளெல்லாம் திடீரென்று கீழேயிருந்த ஏரியில் விழுந்தன. ஒரு நிமிஷத்திற்குள்ளாக அந்த ஏரியானது ஒரு பெரிய அரண்மனைபோலாயிற்று. நாற்காலிகள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. மத்தியில் தங்கச் சிம்மாஸனமொன்று இருந்தது. கொஞ்சநேரத்திற்கெல்லாம் பல கந்தருவ ஸ்திரீகள் கூட்டமாக வந்தார்கள். அவர்களுள் ஒருத்தி மற்றவர்களைக் காட்டிலும் அதிக அழகாயிருந்தாள். அவள் சிம்மாஸனத்திலிருக்க மற்றவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

சிம்மாசனத்தில் இருந்த பெருமாட்டியை ஹதீம் உற்று நோக்கினன். பகற்பொழுதில் மரத்தின் உச்சியில் தொங்கிக்கொண்டிருந்த தலைதான் அவள் தலையென்று அப்போது அவன் கண்டுகொண்டான். சில கந்தருவ ஸ்திரீகள் கீதவாத்தியங்கள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். அஃது அவன் காதிற்கு இனிமையாயிருந்தது. வேறு சிலர் நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அழகான அபிநயம் அவனுக்கு மிக்க பசிழ்ச்சியை விளைவித்தது. பாதிராத்திரியில் எல்லோருக்கும் சிலர் ஆகாரம் கொணர்ந்து வைத்தார்கள். ஹதீமுக்கு எதிரிலும் ஒருதட்டு வைக்கப்பட்டது. ஆனல்

ஹாதீம் அந்தப் பெருமாட்டியைப் பார்த்துப் பேசுகிறவரை யில் ஆகாரத்தைத் தொடவில்லை.

பொழுது விடிந்ததும் அந்தக் காட்சியெல்லாம் மறைந்து போயிற்று. தலைகள்மட்டும் ஜலத்திலிருந்து கிளம்பி முன் போல் மரக்கிளைகளில் ஒட்டிக்கொண்டன. அன்றிரவிலும் அதேமாதிரி நடந்தது. அன்றைக்கும் ஹாதீமுக்கு ஆகாரம் வந்தது. ஆகாரத்தைக் கொண்டுவந்தவள் அவன் சாப்பிட்ட பிறகு பெருமாட்டியைப் பார்க்கலாமென்று சொன்னமையால் ஹாதீம் சாப்பிட ஒப்புக்கொண்டான். சாப்பாடானபிறகு அவன் ஆகாரங்கொணர்ந்த கந்தர்வ ஸ்திரீயுடன் பெருமாட்டியைப் பார்க்கச் சென்றான். அவள் ஏரியில் முழுகினாள். அவனும் முழுகினான். அவன் கால் ஏரியின் அடியில் பட்டதும் கண்ணைத் திறந்தான். ஏரியாவது மரமாவது கந்தர்வ ஸ்திரீகளின் கூட்டமாவது காணப்படவில்லை. பேய்கள் உலாவக் கூடிய ஒரு வெட்டவெளியைமட்டும் கண்டான். அவனுக்குக் கந்தருவத் தலைவியிடமுள்ள மோகம் அதிகமாயிருந்தமையால் தனக்கு உண்டான கஷ்டங்களையெல்லாம் பாராட்டாமல் அவளுடைய ஞாபகமாகவே யிருந்தான்.

சிலநாள் அந்தத் தனியான வெளியில் அங்கும் இங்கும் திரிந்தபிறகு தானிருக்குமிடம் மிக்க அபாயமுள்ளதென்று தெரிந்துகொண்டான். அதினின்றும் தப்பிப்போகும் வழிதெரியாமல் மிக்க பயமடைந்தான். அப்பொழுது ஒரு வயோதிகன் பச்சை நிறமுள்ள ஆடையுடன் ஒரு தடியை ஊன்றிக்கொண்டு அவனுக்கெதிரில் வந்தான்.

"இந்த இடம் எப்படியிருக்கிறது? இப்பொழுது உன் இச்சை யென்ன?" என்று கிழவன் கேட்டான்.

ஹாதீம்:—"நான் எங்கிருந்து வந்தேனே அந்த இடத்திற்கு உடனே திரும்பிப் போகவேண்டும்; அதுதான் என் விருப்பம்."

கிழவன்:—"அப்படியானல் இந்தக் கழியைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடிக்கொள்."

அவன் சொன்னபடியே ஹாதீம் செய்தான். உடனே முன்பு ஏரிக்கரையில் தலைகள் தொங்கிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்துவிட்டான். ஆனால் கிழவன் போனஇடம் தெரியவில்லை.

பிறகு என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். சிறிதுநேரங் கழித்து மரத்தில் ஏறித் தான் அதிக ஆசைவைத்திருந்த தலையைப் பிடித்துக்கொண்டு வரலாமென்று எண்ணி மரத்தில் ஏறினான். உடனே அது அதிவேகமாக ஆடினமையால் அவன் கீழே விழுந்தான். விடாமல் மறுபடியும் ஏறினான். பாதிமரம் ஏறினதும் அடிமரம் திடீரென்று இரண்டாகப் பிளந்தது. ஹாதீமின் சரீரம் பாதி வெடிப்பில் அகப்பட்டுக்கொண்டது.

வெடிப்பிலிருந்து வெளியே வர எவ்வளவோ முயன்றும் அவனால் வர முடியவில்லை. ஆனால் வரவர அவன் உடம்பு உள்ளே போனதாகத் தோற்றிற்று. கடைசியில் அவன் தலையும் கைகளுமே வெளியேயிருந்தன. அவனுக்கு மூச்சு அநேகமாக நின்றுவிட்டது. அப்பொழுது பச்சை வஸ்திரம் தரித்துக்கொண்டிருந்த கிழவன் எதிரில் வந்து தன் தடியால் மரத்தைத் தட்டினான். உடனே ஹாதீம் அகப்பட்டுக்கொண்டிருந்த வெடிப்பு கொஞ்சம் தளரவே கிழவன் ஹாதீமை வெளியே இழுத்துவிட்டான்.

கிழவன்:—"இளைஞனே! எதற்காக உடலில்லாத் தலைகளைப் பிடிக்க முயலுகிறாய்?"

ஹாதீம்:—"ஐயா! அந்தச் சிரங்கள் பகல் முழுதும் உடலைவிட்டுப் பிரிந்து இப்படித் தொங்குவதற்குக் காரணம் என்ன?"

கிழவன்:—"நான் சொல்லுகிறேன் கேள். ஸாம் அமார் என்று ஒரு மந்திரவாதி யிருக்கிறான். நீ பார்த்து வியப்படைகிற தலை அவன் மகளுடையது. அவள் தனக்கு ஒத்த பிராயமுள்ள ஒரு சிறுவன்மேல் ஆசைகொண்டு அவனை மணம் புரிய விரும்பினாள். அவனுக்குக் கலியாணம் செய்துகொடுப்பதில் மந்திரவாதிக்கு இஷ்டமில்லாமையால் கோபங்கொண்டு தன் மந்திர பலத்தினால் இவ்விதமான தண்டனையை விதித்தான். மரம், ஏரி, முதலிய வெல்லாம் அவன் மந்திர பலத்தால் உண்டாக்கப்பட்டன. அவன் குமாரியின் பெயர் ஜாரின் போஷ் என்பது. அவனிருப்பிடம் செம்மலை. அவன் உயிரோடிருக்கும்வரையில் ஒருவனும் தன்னுயிருக் கபாயமின்றி அவன் குமாரியை யணுக முடியாது. இளைஞனே, நான் சொல்வதைக் கேள். அவன் வழிக்குப் போகாதே."

ஹதீம்:—"மந்திரவாதியின் மகளிடம் எனக்கு மோகம் அதிகமாயிருக்கிறது. என்னல் அவளைக் காப்பாற்ற முடியா விட்டால நானும் அவளைப்போல் தொங்குவேன்."

தன் வார்த்தையை ஹதீம் கேளாமையைக் கிழவன் கண்டு தன் தடியால் மரத்தை மறுபடி அடித்து மறைந்து போனன்.

தனியே விடப்பட்ட ஹதீம் பின்னும் மரத்தில் ஏறித் தான் ஆசைகொண்டிருந்த மந்திரவாதி மகளின் தலையிடம் சென்றன். அந்தத் தலையைத் தொட்டதும் ஹதீமின் தலையும் உடலைவிட்டுப் பிரிந்து பக்கத்தில் தொங்கிக்கொண்டது. உடலோ கீழேயிருந்த ஏரியில் விழுந்துவிட்டது. அஸ்தமித்ததும் தலைகளும் உடல்களும் முன்போல் சேர்ந்துகொண்டன. சூரியோதயம்வரையில் பாட்டும் கூத்தும் விருந்துமாகவே யிருந்தன. பொழுதுவிடிந்ததும் சிரங்களும் உடல்களும் மறுபடி பிரிந்துபோயின.

இப்படி அநேகநாள் சென்றன. இராக்காலத்தில் நடந்த காட்சிகளில் எல்லாம் ஹதீம் உடனிருந்தான். ஆனல் அவனுக்குப் பழைய ஞாபகம் இல்லை. அப்படியிருக்கையில் ஒரு நாள் கிழவன் வந்து அவன் தலையை மரத்திலிருந்து கீழே வருவித்துத் தன் தடியால் அதனை யடித்தான். அதனல் அவன் தலை உடலோடு சேர்ந்தது. ஹதீம் முன்போலானன்.

கூடுமானல் மந்திரவாதியைக் கொன்றுவிட்டு அவன் மகளைத் தான் அடையவேண்டுமென்று ஹதீம் தீர்மானஞ் செய்திருந்ததைக் கிழவன் தெரிந்துகொண்டான். மந்திரவாதியிடம் பொருமை யிருந்தமையால் கிழவனுக்கும் அவனைக் கொல்வதில் சந்தோஷந்தான். ஆதலால் ஹதீமுக்கு ஒரு மந்திரோபதேசம் செய்து, "பொய்சொல்லாமல் மனத்தையும் சரீரத்தையும் சுத்தமாக வைத்துக்கொண்டு இந்த மந்திரத்தை ஜபித்துவந்தால் இதன்முன் மந்திரவாதியின் தந்திரம் பலிக்காது" என்று சொன்னன்.

"மந்திரவாதி யிருக்குமிடத்தை நான் எவ்வாறு தேடிச் செல்லுவேன்?" என்று ஹதீம் கேட்கவே,

கிழவன், "இத்தடியை வலதுகையில் வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொள்ளு. உனக்கு வழிதெரியும்" என்றனன்.

மந்திரோபதேசத்தாலும் தடியினாலும் தைரியங்கொண்டு ஹதீம் தான் கொல்ல உத்தேசித்த மந்திரவாதி இருக்குமிடத்தை யடைந்து அவனுடன் பலவிதமாகச் சண்டைசெய்து கடைசியில் அவனைக் கொன்றான். பிறகு தான் ஆசைகொண்டிருந்த அவன் மகளிடம் செல்ல அவளும் அவள் பரிவாரங்களும் மந்திரவாதியின் பந்தத்திலிருந்து தாங்கள் விடுபட்டதைக் கண்டு சந்தோஷமடைந்தார்கள். தன் தகப்பனைக்கொன்ற ஹதீமை மணம்புரிய அவளுக்கு முதலில் இஷ்டமில்லாமலிருந்தும் கடைசியில் உடன்பட்டாள். பிறகு முறைப்படி இருவருக்கும் விவாகம் நடந்தது.

2. ஹதீம் தான் தேடிவந்த மனிதனைக் காணல்.

கலியாணம் முடிந்து தன் எண்ணம் நிறைவேறியபிறகும் ஹதீம் சோர்வடைந்து யோசனையில் ஆழ்ந்தான். அவன் மனைவி மனங்கலங்கி அவன் வருத்தத்திற்கு என்னகாரணம் என்றும் அது தன்னாலுண்டானதோ என்றும் கேட்டாள். ஹதீம் தன் நண்பனாகிய முனிவரனுக்காகத் தன் தேசத்தை விட்டுவந்த வரலாற்றைச் சொல்லி, "உன்னைப் பார்த்தவுடன் என் காரியம் முழுவதையும் மறந்துவிட்டேன். ஈசுவர கிருபையால் நம்மிருவருக்கும் விவாகம் ஆனபிறகு என் நண்பனுடைய ஞாபகம்வந்து என் மனத்தைக் கலக்குகிறது. இதுதான் என் வருத்தத்திற்குக் காரணம். இப்போது நான் 'காரம்' என்ற ஊரை நோக்கிச் செல்லவேண்டும். அங்கேதான் நான் தேடிவந்திருக்கும் மனிதன் இருப்பதாகக் கேள்வி" என்றான்.

அவ்வரலாறுகளைக் கேட்டு அவன் மனைவி, அவன் போய்த் திரும்பிவரும் வரையில் யாமன் என்ற ஊரில் தன் பிதாவின் இல்லத்தில் இருப்பதாக ஒப்புக்கொள்ள ஹதீம் தன் காரியத்தை உத்தேசித்துச் சென்றான்.

கிழவன் கொடுத்திருந்த தடியின் உதவியால் சீக்கிரத்தில் காரமென்ற ஊருக்கு வந்து அங்கே தான் சந்தித்தவர்களை, "உண்மை பேசுகிறவன் ஒன்றிற்கும் பயப்படவேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பவன் இங்கே யாரேனுமுண்டோ?" என்று ஹதீம் கேட்டான். அவர்கள் வழிகாட்ட ஹதீம் 'பழைய காரம்' என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கே

ஒரு பெரிய அரண்மனை யிருந்தது. அதன் வெளிப்புறத்து வாயிலில் அந்த வசனம் எழுதப்பட்டிருந்தது. ஹதீம் கத வண்டைபோய்க் கதவைத் தட்டினன். உள்ளேயிருந்த எஜமானன் உத்தரவின்படி வாயில்காப்போன் கதவைத் திறந்தான். அரண்மனைக்குச் சொந்தக்காரனுகிய வயோதிகனெருவன் ஹதீமுக்கு நல்வரவு கூறித் தக்க ஆகாரம் கொடுத்து உபசரித்தான்.

ஹதீம் ஆகாரத்தை யுட்கொண்டபிறகு கிழவன் அவனை நோக்கி, "நீ யார்? எங்கிருந்து வருகிருய்? வந்த வேலை யாது? இவ்வீடுகட்டியபிறகு இங்கு இருவரே வந்திருக்கிருர். நீ இரண்டாவது மனிதன்" என்ருன்.

ஹதீம்:—"மாட்சிமை தங்கிய ஐயா, நானிருக்கிறது தென் அரேபியாவிலுள்ள யாமன் என்ற ஊர். முனிவரான் என்னும் அரசகுமாரன் வசிக்கும் ஷாஹபாத்து என்ற நகரத்திலிருந்து வருகிறேன். அவ்விளவரசன் அந்த நகரத்து ராணியாகிய ஹம்ஸதேவியிடம் காதல்கொண்டிருக்கிருன். ராணி சொல்லுகிற ஏழு விடுகதைகளையும் விடுத்தாலன்றி அவன் எண்ணம் நிறைவேறுகிறதாகஇல்லை. அவற்றுள் மூன்றை விடுத்துவிட்டேன். நான்காவது விடுகதையின் கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக இங்கே வந்திருக்கிறேன். அதாவது தங்கள் வீட்டுக் கதவில் எழுதியிருக்கும் வசனத்தைப் பற்றியே."

கிழவன்:—"தைரியசாலி, நீ உண்மையில் பெருந்தன்மையுள்ளவன் உன் கீர்த்தி உனக்குப்பிறகு வெகுநாள் நீடித்திருக்கும். இக்காலத்து உன்னைப்போல் பிறருக்காகத் தமது கஷ்டத்தையும் அபாயங்களையும் பாராட்டாமல் காரியத்தைச் சாதித்துக்கொண்டு வருவோர் ஒருவருமில்லை. நாளைத்தினம் உனக்கு வேண்டியவற்றை யெல்லாம் சொல்லுகிறேன்."

பிறகு ஹதீம் அன்று இரவு சுகமாகத் தூங்கினன். காலையில் இருவரும் ஆகாரம் செய்துகொண்டபிறகு கிழவன் பின் வருமாறு தன் வரலாற்றைச் சொன்னன்:—

"நான் இங்கே வந்து எழுநூறு வருஷமாகிறது. இப்பொழுது எனக்கு வயது எண்ணூறு. ஆயினும் எவ்வளவு யௌவன புருஷனுகக் காணப்படுகிறேன் பார். இளமையில் இரவும்பகலும் சூதாடிவந்தேன். சூது அபாயமான விளையாட்

டல்லவா? ஒருநாள் ஆட்டத்தில் என் துர்அதிஷ்டத்தினால் என் பொருள் எல்லாவற்றையும் தோற்றுவிட்டேன். கையில் ஒன்று மில்லாமையால் இருட்டியதும் எங்கேயாவது திருடிச் சம்பாதிக்கலாமென்று ஊரிலிருந்தும் புறப்பட்டேன்.

''ஏழைகளைக் கொள்ளையடிப்பதால் ஒன்றும் பலனில்லை யென்று நினைத்து அரண் மனையிற்சென்று கொள்ளையடிக்க உத்தேசித்தேன். அரண்மனைக்கு மெதுவாய்ச்சென்று சுவரில் ஒரு நூலேணியைச் சார்த்தி அதன் வழியாக மேல் உப்பரிகைக்கு ஏறிச் சத்தமில்லாமலிருக்கும் சமயத்தில் அரசகுமாரி நித்திரை செய்துகொண்டிருக்கும் அறைக்குட் புகுந்தேன். வேலைக்காரர்களெல்லாரும் அறைக்கு வெளியில் அயர்ந்து நித்திரை செய்தார்சள். அவளும் அயர்ந்து நித்திரை செய்தனள். அவளுடைய பொன் ஆபரணங்களையும் தங்க விளக்கையும் விலைபெற்ற வேறு பொருள்களையும் எடுத்துக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வெளியேவந்து அவற்றுடன் பக்கத்திலிருந்த பாலைவனத்திற்குள் சென்றேன். அங்கே சில திருடர்கள் வேறோர் இடத்தில் திருடிவந்த பொருள்களைப் பங்கிட்டுக்கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும், 'யார் அங்கே? நில்' என்றார்கள். நான் இன்னான் என்பதையும் நான் கொள்ளையடித்துவந்த சமாசாரத்தையும் உள்ளபடி சொன்னேன். என் மூட்டையை அவிழ்த்து நான் கொண்டு வந்த பொருள்களைக் காட்டும்படி அவர்கள் சொன்னார்கள். நான் அவற்றையெல்லாம் காட்டிக்கொண்டிருக்கையில் ஒரு பெரிய மாணிக்கத்தை அவர்கள் கண்டு மிக்க பொறாமை கொண்டு அதனை என்னிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது பூமி அதிரும்படி பயங்கரமான ஒரு சத்தம் உண்டாயிற்று. அதைக் கேட்டதும் திருடர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.

''சத்தம் செய்தவன் என்னிடம் வந்து, 'நீ யார்? எங்கிருந்து வருகிறாய்' என்று கேட்டான். நான் செய்த பாவங்களையும் என் மூடத்தனத்தையும் ஒளிக்காமற் சொல்லி நான் திருடிவந்த சொத்துக்களையும் மாணிக்கத்தையும் காண்பித்தேன். அவன் 'நீ என்னிடம் உண்மை பேசியது உனக்கு நல்லதாயிற்று. உன்னுடைய குற்றங்களையெல்லாம் மன்னித்து அந்தப் பொருள்களையும் நீயே அனுபவிக்கும்படி கொடுத்து

திருடன் மூட்டையை யவிழ்த்துக் காட்டல்.

விடுகிறேன். ஆனால் நீ இனிமேல் சூதாடுகிறதில்லையென்று சத்தியம் செய்துகொடு' என்று கேட்டான். நான் அப்படியே சத்தியம் செய்துகொடுக்க, 'இந்தச் சத்தியத்தை உறுதியாய்க் காப்பாற்று. நீ தொள்ளாயிரம் வருஷம் ஜீவித்திருப்பாய்' என்று அவன் ஆசீர்வதித்தான்.

"பிறகு அங்கிருந்து இவ்விடம் வந்து சேர்ந்தேன். அப்போது இங்கே ஜன நெருக்கம் அதிகமாயிருந்தது. என் திரவியத்தைக்கொண்டு இந்த அரண்மனையைக் கட்டினேன்; என்னுடைய பழைய நண்பர்களில் சிலர் என்னுடைய நிலைமையைக்கண்டு பொறாமைகொண்டு நியாயாதிபதியிடம் சென்று நான் வெகுநாள்வரையில் ஏழையாகஇருந்தேன் என்றும் அவ்வளவு சீக்கிரத்தில் இந்த அரண்மனை கட்டக்கூடிய திரவியத்தை நல்லவழியிற் சம்பாதித்திருக்க முடியாதென்றும் சொன்னார்கள். பிறகு நியாயாதிபதி என்னை வருவித்து விசாரித்தார். அவரிடமும் நான் ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொன்னேன். என்னுடைய வாக்குமூலத்தைக் கேட்டபிறகு, அவர் என்னை அரசனிடம் அனுப்பிவிட்டார்.

"அரசனிடமும் நான் உண்மையைச் சொன்னேன். அரசன் என் வர்த்தமானத்தைக் கேட்டபிறகு நான் அவன் மகளுடைய மாணிக்கத்தைத் திருடினபோதிலும் என் குற்றத்தை முற்றிலும் மன்னித்துவிட்டான். 'இவன் முற்றிலும் உண்மை பேசி யிருக்கிறான். ஆதலால் என் மன்னிப்புக் குரியவன். நான் இதுவரையில் இவனைப்போல் தைரியமாக உண்மைபேசின திருடனைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை' என்றான். அன்றைத்தினமே வீட்டிற்கு வந்தவுடன் எல்லாருக்கும் உபயோகப்படும்படி வீட்டுக்கதவில், 'உண்மை பேசுகிறவன் ஒன்றிற்கும் அஞ்சவேண்டியதில்லை' என்று எழுதினேன். நண்பனே, இதுதான் என் சரித்திரம். இது உனக்கு உபயோகமாகுமென்று தெரிந்து சந்தோஷமடைகிறேன்."

3. ஹாதீம் ஷாஹபாத்திற்குத் திரும்புதல்.

சில தினங்கள் சென்றபின் ஹாதீம் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு ஷாஹபாத்திற்குத் திரும்பினான். வழியில் அவன் மனைவியின் ஞாபகம் அவனுக்கு அடிக்கடி உண்டாயிற்று. ஷாஹபாத்திற்குப் போவதற்குமுன் தன் ஊருக்குப் போய் அவளைப் பார்க்கலாமாவென்று நினைத்தான். மறுபடியும் அது தவறென்று எண்ணி முனிவானுடைய காரியத்தை முடித்துவைத்த பிறகுதான் தன் காரியத்தைக் கவனிக்க வேண்டு மென்று நிச்சயித்து அவன் ஷாஹபாத்துக்கே சென்றான்.

அங்கேபோய்ச் சேர்ந்ததும் ஹம்ஸதேவியின் ஜனங்கள் அவனை எதிர்கொண்டழைத்து அவன் வரவைத் தங்கள் தலைவியினிடம் தெரிவித்தார்கள். ஹம்ஸதேவி அவனைத் தன் அரண்மனைக்கு வருவித்து நான்காவது கேள்விக்கு அவன் சொன்ன விடைகளைக்கேட்டு, "தைரியசாலி இனி 'நிடா' என்ற மலையின் வரலாற்றைத் தெரிந்து வரவேண்டும்" என்றாள்.

பிறகு ஹாதீம் அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு முனிவனிடம் சிலநாளிருந்துவிட்டு அப்பால் பிரயாணம் செய்ய ஆரம்பித்தான்.

அத்தியாயம் 6.

ஐந்தாவது வினுவுக்கு விடை.

1. ஓர் இந்தியன் வீட்டில் ஹாதீம் விருந்தினனுக இருத்தல்.

ஹாதீம் பல நகரங்களைக் கடந்து சென்றும் 'நிடா' மலையைப்பற்றிய ஒரு சமாசாரமும் அவனுக்குத் தெரியவில்லை; ஆனால் வழியில் அவன் அநேக விதமான அற்புதக் காட்சிகளைக்கண்டு களித்தனன்.

ஒருநாள் ஒரு பாலைவனத்தின் வழியே போய்க்கொண்டிருக்கையில் ஏதோ ஓரிடத்தில் மனித சஞ்சார மிருப்பதாக அவன் தெரிந்துகொண்டனன். சாயங்காலவேளையில் வயல்களின் வழியே போகும்போது ஒரு வயலில் சில ஜனங்கள் தீமைமூட்டி எரித்துக்கொண்டு கூடியிருப்பதைக் கண்டான். ஹாதீம் அது ஏதோ ஒரு திருவிழாவின் கொண்டாட்டமென்று நினைத்து அங்கிருந்த ஒருவனைப்பார்த்து, "நண்பனே! இது என்னதேசம்? உங்கள் தலையிலும் முகத்திலும் உள்ளமயிரை ஏன் ஒரு மாதிரியாகக் கத்திரித்து விட்டிருக்கிறீர்கள்? நெருப்பைச்சுற்றி நீங்கள் கூட்டம் கூடிக்கொண்டு என்னசெய்கிறீர்கள்? காய்ந்த கட்டைகளை ஏன் அடுக்கிவைத் திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அந்தமனிதன்:—"இப்படி யடுக்கியிருக்கும் கட்டைக்கு 'ஜதை' யென்றுபெயர். எங்கள் பந்துக்களுள் இறந்துபோன ஒருவனது சரீரத்தை இதில் தகனம் செய்துகொண்டிருக்கிறோம். அவனுடன் அவன் மனைவியும் தன்னை உயிருடன் எரித்துக்கொண்டனள்."

ஹாதீம்:—"ஆனால், நீங்கள் சவங்களைப் பூமியில் புதைக்கிற வழக்கமில்லையா? மனைவியையும் ஏன் கணவனுடன் தகனம் செய்யவேண்டும்? ஒரு குற்றமும் செய்யாத ஸ்திரீயைக் கொன்ற பாவம் உங்களைவிடாது."

மற்றவன்:—"ஐயா! நீங்கள் இந்த ஊருக்குப் புதியவரென்று நினைக்கிறேன். இது இந்தியா தேசம் இந்த நாட்

டில் புருஷன் இறந்துபோனால் ஸ்திரீயும் சககமனம் செய்வது வழக்கம். நாங்கள் நிர்ப்பந்தப்படுத்தி அவளை எரிக்கவில்லை. அவள் தானாகவே தன்னை எரித்துக்கொண்டாள். இதனால் அவள் தன் புருஷனிடம் தனக்கு உள்ள அன்பைக் காட்டினள்.”

ஹாதீம்:—“நீ சொல்லுவது உண்மைதான். ஆனால் கணவனிடத்திலுள்ள அன்பிற்கு அடையாளமாக அவனுக்குப் பிறகு அவள் தனியாயிருத்தலே முறையாகுமென்பது எனது அபிப்பிராயம். பிறகு வேறொருவரை மணம்புரிந்து கொள்ளாமலிருத்தலே அவளுக்குப் புருஷனிடத்தில் உள்ள உண்மையான அன்பை உலகத்தாருக்குக் காட்டும். இந்த விரதம் சககமனத்தைக் காட்டிலும் கஷ்டமானது.”

அவன் இவ்வாறு சொல்லிவிட்டு வெகுதூரம் நடந்து சென்று மறுநாள் ஒரு பெரிய கிராமத்தை யடைந்தான். பசியினாலும் தாகத்தினாலும் மிக்க களைப்படைந்து ஒரு வீட்டிற்குள் நுழைந்து கொஞ்சம் இடமும் ஆகாரமும் கேட்டான். அவ்வீட்டுக்காரன் ஓர் இந்தியன். அவன் ஹாதீமை அன்புடன் வரவேற்றுச் செவ்வையாக ஆகாரம் செய்வித்தான். ஹாதீம் போஜனஞ் செய்தபிறகு நன்றாகத் தூங்கினான். மறுநாட் காலையிலும் வீட்டுக்காரன் அவனுக்கு நல்ல ஆகாரம் செய்வித்தனன்.

ஹாதீம்:—“தயாளு! வழிப்போக்கனிடம் இவ்வளவு அன்பு பாராட்டியதற்குக் கடவுள் உன்னை ரட்சிப்பாராக.”

இந்தியன்:—“நான் என்ன செய்துவிட்டேன்! அரேபிய வீரனே! நீ மூன்றுநாள் இரவும் பகலும் என் வீட்டிலிருந்தாலன்றி எனக்குத் திருப்தி யுண்டாகாது.”

ஹாதீம்:—“உனக்கு இஷ்டமிருந்தால் அப்படியே செய்கிறேன்.”

அவ்வாறே ஹாதீம் மூன்றுநாள் இந்தியன் வீட்டில் தங்கியிருந்தான். அதனால் அதற்குமுன் அவனுக்கு இருந்த களைப்பெல்லாம் தணிந்துவிட்டது. மறுபடியும் பிரயாணஞ் செய்ய எண்ணி இந்தியனை நோக்கி, “நான் நிடாமலையைத் தேடிச் செல்லவேண்டும். ஆகையால் எனக்கு விடைகொடு” என்றான்.

இந்தியன்:—"நான் சொல்லுவதைக்கேள். உன் தேசத்திற்குத் திரும்பிப்போ. நிடாமலை வெகுதூரத்திலிருக்கிறது. அல்லாமலும் அதற்குப் போகும்வழி அபாயமானது. ஆதலால் உன் பிரயாணம் நிறைவேருது."

ஹதீம்:—"நான் கடவுளை நம்பினவன். அவர் என் யாத்திரையைப் பூர்த்திசெய்வித்து என்னை ஜாக்கிரதையாக மறுபடி ஊரிற் கொண்டுபோய்ச் சேர்ப்பார்."

உடனே இந்தியன் விடைகொடுக்க ஹதீம் அங்கிருந்து புறப்பட்டான்.

2. ஹதீம் நிடாநகரத்தை அடைந்தது.

ஹதீம் வெகுநாள் அலைந்து திரிந்து வழிதப்பித் தடுமாறிக் கொண்டிருக்கையில் ஒருநாள் ஒரு வழிப்போக்கன் அவனுக்குச் சரியான வழியைக் காட்டினுன். அவனுடைய உதவியால் இரண்டொரு தினத்தில் ஹதீம் நிடாநகரத்தை யடைந்தனன். அது விசாலமானதாகவும் ஜன நெருக்கமுள்ளதாகவுமிருந்தது. ஹதீம் அந்த நகரத்தை யடைந்ததும் அங்கேயுள்ள ஜனங்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அந்நகரத்துத் தலைவனிடம் அழைத்துச் சென்றுர்கள். தலைவன் ஹதீமுக்கு நல்வரவு கூறித் தக்க ஆசனம் அளித்து க்ஷேமத்தை விசாரித்து, "உலகம் முழுவதும் பிரயாணம்செய்த மாட்சிமை தங்கிய அலெக்ஸாண்டர் காலத்திற்குப் பிறகு இந்த நகரத்திற்கு அன்னியர்கள் வந்ததில்லை. நீதான் வந்திருக்கிருய். நீ இங்கே வந்ததன் நோக்கம் என்ன?" என்று கேட்டனன்.

ஹம்ஸதேவியின் வரலாற்றையும் முனிவனுடைய வரலாற்றையும் அவர்களுடைய கலியாண விஷயமாக அதுவரையில் தான்செய்த வீரச்செயல்களையும் ஹதீம் விவரமாக எடுத்துக்கூறினுன். அப்போது நகரத்தலைவன், "சிலநாள் இங்கேயே தங்கியிரு. நிடாமலையைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய் விசாரித்து வேண்டியவரையில் தெரிந்துகொள்ளலாம். அதன் விசேஷங்கள் நான் எடுத்துச் சொன்னுல் உனக்குச் செவ்வையாக விளங்கா" என்று சொன்னுன்.

ஹதீம் அவன் சொன்னபடி ஒரு வீட்டில் தங்கியிருந்தான். அப்போது ஆகாரம் முதலியவற்றில் அவனுக்கு ஒரு

குறைவு மில்லை. அந்த நகரத்துப் பிரபுக்கள் எல்லாரும் அவனைப்பார்த்து அவன் சம்பாஷணையை மிகவும் மெச்சினார்கள்.

ஒருநாள் ஹாதீம் தன் வீட்டிற்கு வந்த சிலரோடு பேசிக்கொண்டிருக்கையில் அங்கே காணப்பட்ட மலைகளுள் நிடா மலை எதுவென்று அவர்களைக் கேட்டான். அவர்களில் ஒருவன், "மேகமண்டலம் வரையில் பரவியிருக்கும் சிகரத்தையுடைய மலைதான் நிடாமலை" என்று காட்டினான். அவ்வாறு அவன் சொல்லுகையில் மலையிலிருந்து ஒரு பெரிய சத்தம் உண்டாயிற்று. அப்போது அங்கிருந்த வேறொருவன் திடீரென்று ஆழ்ந்த ஆலோசனையில் உட்கார்ந்தான். அவன் சற்றுநேரத்திற் கெல்லாம் எழுந்து மலையை நோக்கிச் சென்றான். அவனுடைய நண்பர்கள் பின்தொடர்ந்து அவனைத் தடுத்தும் அவன் கேட்கவில்லை. அவன் பேசாமல் வெளுத்த முகத்துடன் மலையை நோக்கியே வேகமாகச் சென்றான்.

மற்றவர்களுடன் ஹாதீமும் சென்று, "பைத்தியம் பிடித்தவன்போல் போகிற இந்தச் சிறுவனுக்கு என்ன நேர்ந்தது?" என்று அங்குள்ளவர்களைக் கேட்டான்.

"அவன் காலம் நெருங்கிவிட்டது. மலையிலிருந்து வந்த சத்தம் சீக்கிரம்வா என்று அவனை அழைத்தது" என்றார்கள்.

ஹாதீம்:—"அது யாருடைய சத்தம்? அதன்படி ஏன் அவன் நடக்கவேண்டும்?"

நகரத்தார்:—"அது எங்களால் சொல்லமுடியாது. அவன் தவறிப்போகுமுன் நீ அவனைப்பிடிக்க முடியுமானால் அவனையே கேள்."

ஹாதீம் கூடியமட்டும் வேகமாக ஓடி அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "நண்பனே! நான் கேட்கும் விஷயத்தைச் சொல்லாமலிருப்பது தருமமல்ல. மலையிலிருந்து உன்னைக் கூப்பிட்டது யார்? தயவுசெய்து சொல்லு. அவன் உன்னைக் கூப்பிட என்ன நியாயம் இருக்கிறது? நீ ஏன் அதற்கு இணங்க வேண்டும்? எனக்குப் பதில்சொல்லு. அவசியமானால் உன்னுடன் மலைக்குவந்து நானும் மரிக்கச் சித்தனாக இருக்கிறேன்" என்று சொன்னான்.

ஹாதீம் பலவாறு கேட்டுக்கொண்டும் சிறுவன் பதில் சொல்லாமல் ஹாதீமின் கையைத் தள்ளிவிட்டு வாயுவேகத்துடன்

மலையை நோக்கி ஓடினன். ஹாதீமும் உடன் சென்றான். அவன் மலையில் பாதியளவு ஏறிக்கொண்டிருக்கும்பொழுது மலை மறைந்துவிட்டது. பிறகு அவன் திடுக்கிட்டு நான்கு பக்கமும் சுற்றிப்பார்த்துக்கொண்டு நின்றான். மலையினுடைய சின்னமாவது மனிதர்களுடைய சஞ்சாரமாவது காணப்படவில்லை. அந்த இடத்தில் எல்லாவித வர்ணங்களும் அமைந்த ஒரு பெரிய கருங்கல் கிடந்தது.

அப்பால் ஹாதீம் தான் செய்யக்கூடியது ஒன்றுமில்லையென்று கண்டு ஊருக்குத் திரும்பினன். வரும் வழியில் முதலில் தன்னைத் தொடர்ந்துவந்த மனிதர்களைக் கண்டான். அவன் பார்த்தபோது அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஏதோ ஒரு சடங்கு செய்துகொண் டிருந்தார்கள். மலை உள்ள திக்கை நோக்கிக்கொண்டு மூன்றுமுறை அவர்கள் ஒரு மந்திரத்தை உச்சரித்தார்கள். அதிசயமான விஷயம் ஒன்றும் நடவாததுபோல் அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பினர்கள். அவர்கள் திரும்புகையில் இளைஞனுடைய சிநேகிதர்களும் பந்துக்களும் வருத்தக்குறிப்பைச் சிறிதுமே காட்டாமல் ஒரு பெரிய விருந்தை நடத்த ஏற்பாடு செய்து சிறிதுநேரம் வேடிக்கையாகப் பொழுது போக்கிவிட்டு எல்லோரும் தங்கள் தங்கள் வேலைக்குப்போனர்கள்.

3. ஹாதீம் நிடாமலைக்குச் சென்றதும் அங்கே கண்ட காட்சியும்.

86438

நிடா வாசிகளுள் மகா புத்திசாலியாக ஜாமன் என்று ஒருவனிருந்தான். ஹாதீமுக்கு அவனுடைய பழக்கம் உண்டாயிற்று. வரவர அது விருத்தியடைந்தது. அதனல் அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்களானர்கள். ஒருநாள் அவர்கள் எதைப்பற்றியோ பேசிக்கொண்டிருக்கையில் நிடாமலையின் உச்சியிலிருந்து முன்போல் பயங்கரமான சத்தம் ஒன்று உண்டாயிற்று. அதைக் கேட்டதும் ஜாமன் பேச்சை நிறுத்திவிட்டு நடுநடுங்கி முகம் வெளுத்துப்போனன். அவன் இருந்த நிலைமையைப் பார்த்த ஹாதீம் அவனுடைய காலம் குறுகி விட்டதாகவே நிச்சயித்தான்.

உடனே ஜாமன் எழுந்திருந்து மலைக்குப் புறப்படச் சித்தமானன். அவனுடைய பந்துக்கள் எல்லோரும் அதனை

அறிந்துகொண்டு அவனைப் பின்தொடர்ந்து செல்ல வழக்கம் போலவே வந்தார்கள். ஹாதீம் அப்போது என்ன ஆபத்து நேரிட்டாலும் அவனைவிட்டுப் பிரிவதில்லையென்றும் அவனைத் தொடர்ந்து அந்த ஆச்சரியமான மலைக்குப் போகவேண்டு மென்றும் நிச்சயித்துக்கொண்டான். தெய்வத்தை நம்பி அவன் ஜாமனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு மலையடிவாரம் போய்ச்சேர்ந்து அவனைப் பார்த்து, "நண்பனே, நீ ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்? என்னுடன் பேசக்கூடாதா? உனக்கு என்ன துன்பம் வந்தாலும் நானும் அதனை அனுபவிக்கப்போ கிறேன். உன் சகோதரன்வேறு நான்வேறு என்று நினைக்கா தே. நீ அந்த மலைக்குப்போனால் நானும் உடன்வருவேன்" என்று சொன்னான்.

ஹாதீம் இவ்வாறு கேட்டுக்கொண்டும் ஜாமன் வாயைத் திறந்து ஒரு வார்த்தையாவது பேசவில்லை. அவன் உயிருள் ளவனாக இருந்தும் இறந்தவனைப்போலவே ஸ்மரணைதப்பியும் தேகம் முழுவதும் வெளுத்தும் மிகவும் அவசரமாக முன்னே நடந்து சென்றான். ஹாதீமினின்றும் பிரிந்துபோக அவன் மிகவும் முயன்றான். ஆனால் ஹாதீம் அவனுடைய கரங்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்தமையால் அங்கிருந்து போக முடியவில்லை. கடைசியில் அவன்மேல் பலமாக ஒரு குத்துக்குத்தி அவனிடமிருந்து திமிறிக்கொண்டு வேகமாக ஓடினான். அவன் கைக்குத்தினால் ஹாதீம் தரையிலே விழுந் தான். ஆனாலும் மிகவும் விரைவாக ஓடக் கூடியவனாதலால் தைரியத்தை விடாமல் அவனைப் பின்தொடர்ந்து ஓடி அவனை உறுதியாகப் பிடித்துக்கொண்டான்.

பிறகு இருவரும் மலையின் பக்கமாகவே போய்க்கொண் டிருந்தார்கள். அவனை விலக்கிவிட்டு ஓடிப்போவதற்கு ஜாமன் இடைவிடாமல் முயன்றுகொண்டிருந்தான். கடைசியில் இரு வருமாக மலையின் ஒரு குகையை அடைந்தார்கள். அதற் குள்ளே போனதும் ஒரு கதவு அவர்களுக்குப் பின்னால் மூடிக் கொண்டது. பின்பு அவர்கள் கண்ணுக்கு மிகவும் விசாலமான ஒரு சமவெளி காணப்பட்டது. அந்த இடத்தின் அமைப் பும் அழகும் வர்ணனையில் அடங்கா. கண்ணுக் கெட்டின தூரம் வரையில் அதேமாதிரி பசுமையான ஒரு சமவெளி காணப்பட்டது.

அவர்கள் இருவரும் கொஞ்சதூரம் சென்றபிறகு சம வெளியில் சமாதியைப்போன்ற ஓரிடத்தைப் பார்த்தார்கள். ஒரு விதமான செடியும் அதன்மேல் வளரவில்லை. அங்கே ஜாமன் தரையோடு தரையாய்ப் படுத்துக்கொண்டான். அப் போது அவனுடைய ஆத்மா உடலினின்றும் நீங்கிப்போ யிற்று. பூமியே தன் காலின்கீழ் நடுங்கினதாக ஹாதீம் அப் பொழுது நினைத்தான். அவன் பார்த்துக்கொண்டிருக்கையி லேயே ஜாமனுடைய சரீரம் பூமிக்குள் போயிற்று. அதற்கு முன்பு ஒன்றும் விளையாமல் தரிசாயிருந்த நிலம் அப்போது மற்ற நிலத்தைப்போல் திடீரென்று பசுமையாக மாறிற்று.

4. நிடாவிலிருந்து யாமனுக்குச் செல்லுகையில் ஹாதீம் கண்ட காட்சிகள்.

அதுமுதலாக ஹாதீம் ஒரு துணையுமின்றித் தனியனாக இருந்தான். அக்காலத்தில் அவனுக்குத் தன்னைத் தவிர வேறொருவருடைய ஞாபகமும் உண்டாகவில்லை. நிடா நகர வாசிகள் உலக வாழ்க்கையை நீக்கும்போது அங்கேயுள்ள மலையைத் தங்கள் இடமாகக் கொள்ளுதலையும் நிடாமலையைப் பற்றிய வேறு ரகசியங்களையும் தெரிந்துகொண்டான். அதனால் ஹம்ஸதேவி கேட்ட ஐந்தாவது வினாவுக்கு ஒருவாறு விடை பகரலாமென்று திருப்தியுற்றான். ஆனாலும் அந்த இடத்தை விட்டு வெளியே வரவாவது வெளியே வருதற்குரிய வழியைத் தெரிந்து கொள்ளவாவது அவனால் முடியாமற் போயிற்று. தன்னைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் வெளியே வருவ தற்கு எங்கேனும் வழி இருக்கலாமோ என்று மிகவும் கவன மாகப் பார்த்தான். ஆனால் மலையைப்பற்றியாவது அதற் குள்ளே வரும் வழியைப் பற்றியாவது ஒருவித அடையாள மும் அவனுக்குத்தெரியவில்லை. ஏழுநாள் இரவும்பகலும் சாப் பிடாமலும் ஜலபானம் செய்யாமலும் பல இடங்களிலும் சுற்றித் திரிந்தான். ஒரு ஜீவப்பிராணியும் அவன் கண்ணிற் படவில்லை. உயிர் தப்புவதற்கு வகையில்லையென்று கண்டு தன்னுடைய வாழ்நாளை மகா அந்தகாரமான அந்த இடத்தி லேயே முடிக்கவேண்டுமென்று உறுதி செய்துகொண்டான். ஆனாலும் இடைவிடாமல் கடவுளையே அவன் தியானித்து வந்தான்.

இவ்வாறு அவன் மிக்க கவலையோடிருக்கையில் வெகு தூரத்துக்கப்பால் சமுத்திரத்தி லுண்டாகும் அலையோசை யைப்போல் ஒருசத்தம் அவன் காதில் விழுந்தது. அது வந்த வழியை நோக்கிக்கொண்டே வெகுதூரம் போகையில் கோஷித்துக் கொண்டிருக்கும் ஒரு மகா சமுத்திரத்தின் கரை யை அடைந்தான். அங்கு நின்று பார்த்தபோது அதன் எல்லை அவன் கண்ணுக்குச் சிறிதும் புலப்படவில்லை. அப் போது அவன் தனக்குள்ளே, "நம்முடைய உலக வாழ்வு இவ்வளவுதான். ஒரு பெரிய சமுத்திரம் நமக்கு முன்னே இருக்கிறது. இதைக் கடத்தல் அரிது; உலகத்தின் அழிவுக் கும் இந்தக் கடலே காரணமாகும்" என்று சொல்லிக் கொண்டான்.

இடைவிடாமல் சமுத்திரத்தையே அவன் நோக்கிக் கொண்டிருக்கையில் அலைகளில் அடிபட்டுக் கரையை நோக்கி வரும் ஒரு சிறிய கப்பலை வெகுதூரத்துக் கப்பால் கண்ணுற் ருன். உடனே அவனுக்கு அதற்கு முன்பிருந்த மனக்கலக்க மெல்லாம் நீங்கிற்று. அவன் இருந்த இடத்துக்குச் சமீப மாகக் கப்பல் வந்து நின்றவுடன் அவன் மிகவும் வேகமாக ஓடி அதற்குள் குதித்தான். அதில் ஒருவரும் இல்லை. தன் னைப் பாதுகாக்கும் பொருட்டே அது கடவுளால் அனுப்பப் பட்டிருக்க வேண்டுமென்று எண்ணி மிகவும் வியப்புற்ருன். மனிதர் ஒருவரும் அந்தக் கப்பலில் இல்லாவிட்டாலும் அவன் சாப்பிடக்கூடிய பலவகை ஆகாரங்கள் ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்தன. அவனுக்கிருந்த பசியின் மிகுதியால் அவற்றைப் புசிக்கப்போனன். பின்பு அவற்றைத்தொடாமல் அவன், அந்தக் கப்பலின் மாலுமி ஒருவேளை கரைக்குச் சென்றிருக்கலாமென்றும் சீக்கிரத்தில் திரும்பிவரக் கூடுமென் றும் அந்த ஆகாரங்கள் அவனுக்காகவே இருக்கலாமென்றும் எண்ணி, "வேறொருவனுக்காக வைத்திருக்கிற ஆகாரத்தை நாம் உண்ணுவது முறையல்ல. அவன் வருகிறவரையில் காத்துக்கொண்டிருப்போம்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு சும்மா இருந்தான்.

ஆகாரத்தைத் தொடாமல் அவன் அவ்வாறு காத்திருக் கையில் ஒரு பெரிய மீன் தன் தலையைக் கிளப்பிக்கொண்டு மேலே வந்து, "மகாவீரனே, இந்த ஆகாரங்கள் உனக்காகவே

ஹதீம் சமுத்திரத்தை நோக்குதல்.

அன்றி வேறெருவனுக்காகவுமல்ல; ஆகையால் நீ இவற்றை யுண்டு உன் பசியைப் போக்கிக் கொள்வாயாக" என்று அவனைப் பார்த்துச் சொல்லிவிட்டு ஜலத்துக்குள் மறைந்து போயிற்று. அப்பால் அது அவன் கண்ணிற் படவேயில்லை. அவன் சிறிதும் தாமதம் செய்யாமல் தன்னுடைய பசியையும் தாகத்தையும் போக்கிக்கொண்டான். பின்பு கப்பல் செல்லுதற்கு வேண்டிய நல்ல காற்று அடிக்க ஆரம்பித்தது. உடனே அவன் பாய்மரத்தைக் கட்டிக் கப்பலைச் செலுத்தினன். நிடாநகரத்துக்குச் சென்று தன்னுடைய நண்பனுக இருந்த ஜாமனுடைய முடிவைப்பற்றி அந்த நகரவாசிகளிடம் சொல்ல வேண்டுமென்ற கவலை அவனுக்கு மிகுதியாக இருந்தது. ஆனாலும் அந்த நகரத்துக்குப் போகவேண்டிய வழி அவனுக்குத் தெரியாமையால் கடவுளுடைய பெருங்கருணையை நம்பிக் கப்பலை அது போனவழியே விட்டான்.

நிடா நகரத்துக்குப் போகவேண்டுமென்று ஹதீம் எண்ணியும் அந்தக் கப்பல் அவனை அங்கிருந்து வெகுதூரத்துக்

கப்பாலுள்ள ஒரு மலையடிவாரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தது. அதன் பாறைகளிலிருந்து ரத்தம் ஆறுகப் பெருகி ஓடிற்று. அங்கிருந்து அவன் ஒரு கடலின் ஓரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அந்தக் கடல் நீரெல்லாம் ரத்தமயமாக இருந்தது. அப்பொழுது அங்கே தோன்றிய ஒரு படகில் ஏறிக்கொண்டு அவன் ஒரு வெள்ளிமலைக்குப் போய்ச் சேர்ந்தான். அதன் அடிவாரத்தில் நவரத்தினங்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. அவற்றைப் பார்த்தபோது அவற்றை வாரிக்கொண்டுபோக வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. உடனே தன்னுல் சுமக்கக்கூடிய அளவு அவற்றில் எடுத்துக்கொண்டான். பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கு மல்லவா? "மகா சக்கரவர்த்திகளிடத்திலும் இவ்வளவு ரத்தினங்கள் இருப்பது அருமை. இவற்றை விலை கொடுத்து வாங்குவதற்கு வேண்டிய திரவியமும் அவர்களிடத்து இராது" என்று அவன் நினைத்தான்.

பிறகு அவன் களைப்பின் மிகுதியால் அவ்விடத்தில் தரையிலேயே படுத்து அயர்ந்து நித்திரை செய்தான். தூங்கி எழுந்ததும் பூதாகாரமான இரண்டு பெரிய பிராணிகள் தனக்குமுன்னே நிற்பதைக் கண்டான். அவற்றின் சரீரம் அண்டங்காக்கையின் சரீரத்தைப் போலவும் தலைகள் மனிதருடைய தலையைப் போலவும் கையும் காலும் சிங்கத்தினுடைய கைகால்களைப் போலவும் இருந்தன. உடனே அவன் தன் கையிலிருந்த வில்லில் ஒரு பாணத்தைத் தொடுத்து அதனை அவற்றுள் ஒன்றன்மேல் எய்தான். ஆனால் அந்தப் பாணம் அதன்மேல் படவில்லை. அந்தப் பிராணி அம்பைத் தன் காலில் இடுக்கிக்கொண்டு மிகவும் கடுமையாக ஹாதீமைப் பார்த்து, "நிரபராதியாகிய என்னை நீ கொல்ல யத்தனிப்பது உனக்குத் தருமமா? நீ உன் உயிருக்காகப் பயந்து இவ்வாறு செய்கிறாய்போலும்; உன்னைப் போலவே எங்களையும் கடவுள் சிருஷ்டிக்கவில்லையா? உன்னுடைய உயிர் உனக்கு அருமையாயிருப்பதுபோல் எங்கள் உயிரும் எங்களுக்கு அருமையல்லவா? உனக்குத் தீங்குசெய்யக் கருதி நாங்கள் இங்கு வரவில்லையே! அப்படி இருக்க எங்களைக் கொல்லவேண்டுமென்ற எண்ணம் உனக்கு ஏன் உண்டாக வேண்டும்?" என்று சொல்லிற்று. அந்த வார்த்தைகளைக் கேட்

டவுடன் தான் செய்தது தவறு என்று அவன் நெஞ்சமே அவனைச் சுட்டது. உடனே தன் கையில் வைத்துக்கொண்டிருந்த வில்லையும் அம்பையும் அவன் கீழே எறிந்துவிட்டான்.

ஹதீம் வெள்ளிமலையிலிருந்து கொள்ளையடித்து வந்த ரத்தினங்களையெல்லாம் அங்கேயே எறிந்துவிட்டுப் போகும்படி அந்த விசித்திரமான பிராணிகள் இரண்டும் அவனைத் தூண்டின. அவைகள் அவனுக்குச் சொந்தமல்லவே! அவன் அந்த ரத்தினங்களை மிகுந்த அதிருப்தியுடன் எறிந்தனன். உடனே அவற்றுள் மிகவும் விலையுயர்ந்த ரத்தினங்கள் மூன்றை அந்தப் பிராணிகள் பொறுக்கி எடுத்து ஹதீமினிடம் கொடுத்து அவனைப்பார்த்து, "இந்த மூன்று ரத்தினங்களையும் நீ கையில் வைத்துக்கொள்ளு. நீ நிடாமலையைப் பார்த்ததற்கும் பிரபஞ்சத்தின் எல்லைக்கப்பால் நீ பிரயாணம் செய்ததற்கும் இவைகள் சிறந்த அடையாளங்களாகும். இவற்றைக் கண்டவுடன் யாரும் நீ இவ்வாறு பிரயாணம் செய்ததை நம்புவார்கள்" என்று கூறின.

அப்போது ஹதீம் அந்த மூன்று ரத்தினங்களையும் மிகவும் பிரியமாக ஏற்று அந்தப் பிராணிகளை நோக்கி, "ஓ புண்ணியாத்மாக்களே, மிகவும் வந்தனம். இந்த இடத்தை விட்டு என்னுடைய சிநேகிதர்கள் இருக்குமிடத்துக்கு நான் போகும் வழியைத் தயவுசெய்து நீங்கள் காட்டுவீர்களாயின் மெத்த உபகாரமாயிருக்கும். இதுவரையில் நான் அனுபவித்த கஷ்டங்கள் சொல்லி யடங்குவன அல்ல" என்று சொல்ல அவைகள், "இவ்வளவு துன்பங்களிலும் கடவுளே உன்னைக் காப்பாற்றி வந்திருக்கிறார். இந்த உலகம் உண்டான பிறகு மூன்று மனிதர்களே பற்பல கஷ்டங்களை அனுபவித்து இந்தப் பக்கத்துக்கு வந்து உயிருடன் திரும்பிப்போயிருக்கிறார்கள். இங்கே வருவதற்கு முயன்றவர்களில் வழியிலேயே மாண்டவர்கள் ஆயிரக்கணக்காக இருக்கலாம். நீ உன்னுடைய ஊருக்குப்போய்ச் சேருவதற்குமுன் ஸ்வர்ணசமுத்திரத்தையும் அக்கினிக்கடலையும் அவசியம் பார்க்க வேண்டியிருக்கும். பாராமல் ஊருக்குப்போக முடியாது" என்று கூறிவிட்டு இருந்த இடம் தெரியாமல் திடீரென்று மறைந்துபோயின.

ஹாதீம் வந்தனம் செய்தல்.

உடனே ஒரு புதிய படகு தோன்றி ஹாதீமை ஏற்றிக் கொண்டு ஸ்வர்ணசமுத்திரத்தைக் கடந்து வெகுதூரத்துக் கப்பாலுள்ள ஒரு கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தது. கரையிலிருந்து அவன் உள்நாட்டில் வெகுதூரம் பிரயாணம் செய்து ஒரு பாலைவனத்தை யடைந்தான். அங்கே மணலெல்லாம் தணலைப்போல் எரிந்துகொண்டிருந்தன. அனலைப்பார்க்க முடியாமல் அவன் கீழே விழுந்தான். அவனுடைய உதடுகள் அப்போது சிறிதும் ஈரமற்று உலர்ந்துபோயின. அவன் சரீரமோ வெப்பம் பொறுக்க முடியாதபடி வெந்துபோயிற்று. அவனைப் பலமுறை காப்பாற்றிய விசித்திரமான முத்து அப்போது அவனிடம் இருந்தும் அவனுக்கு அதனால் ஒருவித அனுகூலமும் உண்டாகவில்லை. அவன் உயிரே போய்விடும் போல் இருந்தது. அந்தச் சமயத்தில் முன்னே குறிப்பிட்ட பிராணிகள் இரண்டும் திடீரென்று அவனுக்கு முன்னே வந்து தோன்றி ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீரை அவனுக்குக் கொடுத்தன. அப்போது அவன் அதைச் சாப்பிட உடலை விட்டுப்போன உயிர் மீண்டுவந்ததென்று சொல்லும்படி அவ

னுக்கு ஓர் உணர்ச்சியுண்டாயிற்று. ஞாபகம் தவறிப்போயிருந்த ஹாதீமுக்கு அப்போதுதான் சரியான பிரக்ஞை வந்தது. அந்தப் பிராணிகளிரண்டையும் அவன் பார்த்து, "தக்க சமயத்தில் வந்து உதவிசெய்து என் உயிரைக்காப்பாற்றிய உங்களுக்கு நான் என்ன பிரதி உபகாரம் செய்யப்போகிறேன்?" என்று சொன்னான். பிறகு அவைகள், "வீரசிங்கமே, இந்த இடத்துக்கு நூதனமாக வருபவனுக்குச் செய்யவேண்டிய கடமையை நாங்கள் செய்தோம். உனக்கு வழிகாட்டுவதற்காகவே நாங்கள் இங்கு வந்தோம். நீ இந்த வழியாகவே இப்பாலைவனத்தைக் கடந்து செல்வாயானால் அக்கினிக் கடலின் கரையை அடையலாம். எப்படி நீ ரத்தக் கடலையும் ஸ்வர்ண சமுத்திரத்தையும் கடந்து வந்தாயோ அப்படியே இந்த அக்கினிக்கடலையும் கடக்கவேண்டும். நீ இதுவரையில் செய்த பிரயாணங்களைக் காட்டிலும் இதுவே மிகவும் கடினமானது இதற்கப்பால் உனக்குக் கஷ்டமே இராது. கடவுளுடைய கிருபையால் இந்தப் பிரயாணத்தை நீ செய்து முடிப்பாய் என்று நம்புகிறோம். அக்கினிக்கடலைத் தாண்டின பிறகு நீ ஊர்போய்ச் சேருவாய். நாங்கள் உனக்கு ஒரு மாத்திரை கொடுக்கிறோம். உன்னுடைய பிரயாண காலத்தில் வெப்பம் சகிக்க முடியாமற்போனால் இந்த மாத்திரையை வாயில் அடக்கிக்கொள்ளு. அப்போது அக்கினியினால் உனக்கு ஒருவிதமான துன்பமும் உண்டாகாது. அக்கினிக் கடலின் அக்கரையைச் சேர்ந்தபிறகு இந்த மாத்திரையைச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டு நீ அப்பால் பிரயாணஞ்செய்" என்று சொல்லி அவன் கையில் மாத்திரையைக் கொடுத்துவிட்டு மறைந்துபோயின.

அவைகளின் கட்டளைப்படியே அந்த மாத்திரையை ஹாதீம் வாயிலடக்கிக்கொண்டு மூன்று நாள் இரவும் பகலும் இடைவிடாமல் பிரயாணம் செய்தான். எங்கே பார்த்தாலும் அக்கினிச்சுவாலை சூழ்ந்திருந்தது. அந்த இடத்தை யாராவது பார்த்திருந்தால் ஆகாயமும் பூமியும் ஒன்று சேர்ந்து எரிவதாகச் சொல்லியிருப்பார்கள். சில நாழிகைவரையில் அவன் சலனமற்று நின்று அப்பால் அக்கினிக்கடலின் கரைக்கு வந்து சேர்ந்தான். ஆனால் அவனுக்கிருந்த தைரியமெல்லாம் அப்போது பறந்துபோயிற்று. அந்தப் பிரளயாக்கினியை எவ்வாறு

கடந்து செல்வது என்று எண்ணினுன். அப்படியிருக்கையில் ஒரு படகு அவனை நோக்கி வந்தது. அதற்குமுன் வந்த படகுகளைப்போலவே அதுவும் தனக்காகவே வந்ததென்று அவன் எண்ணினுன். சிறிது நேரத்தில் அது அவனுக்குச் சமீபமாக வந்தது. அக்கினியின் துன்பத்தைத் தாங்கமாட்டாமல் மிகவும் கஷ்டப்பட்டு ஹதீம் அதில் ஏறி உட்கார்ந்தான்.

உடனே அக்கினிக்கடலில் படகு வேகமாகச் சென்றது. அவன் வாயிலிருந்த மாத்திரையின் சக்தியினுல் அக்கினியினுல் அவனுக்குத் துன்பம் ஒன்றும் உண்டாகாவிட்டாலும் அவன் அதிற் போகும்போதெல்லாம் கண்ணைத் திறந்து பார்க்கவேயில்லை. கண்ணைத்திறக்க அவனுக்குத் தைரியம் உண்டாகவுமில்லை. மூன்று வாரம் அவன் இவ்வாறு பிரயாணம் செய்து கடைசியில் ஒரு பெரிய அக்கினிச் சுழலில் வந்து சிக்கிக்கொண்டான். அதைப் பார்த்ததும் அவன் "நம்முடைய காலம் நெருங்கிவிட்டது. இந்தப் படகு இதில் அகப்பட்டுக்கொண்டால் நாம் எங்ஙனம் உயிர் தப்புவது?" என்று எண்ணினுன். ஆனுலும் கடவுளைத் தியானித்துக்கொண்டே படகில் உட்கார்ந்தான். திடீரென்று அவனைச் சுழலுக்குள் தள்ளிவிட்டுப் படகு மறைந்துபோயிற்று. மூன்றுநாள் அவன் அங்குமிங்கும் நீந்தி அதில் அலைப்புண்டு கடைசியில் அக்கரைபோய்ச் சேர்ந்தான். உடனே கண்ணைத்திறந்து மாத்திரையைக் கடலுக்குள் வீசியெறிந்து சந்தோஷமாக நின்றுன். அப்போது அக்கினிக்கடலே இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயிற்று. அப்பால் அவனுக்கு எல்லாம் நன்மையாகவே இருந்தன.

5. யாமன் நகரத்துக்கு அவன் திரும்புதல்.

அதன் பிறகு அவன் அந்த இடத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்துக்குப்போக ஆரம்பித்தான். கொஞ்சதூரம் பிரயாணம் செய்தபோது அந்த இடம் சுதேசமாகவே இருக்கக் கண்டு மிகுந்த ஆச்சரிய மடைந்தான். அவன் போனவழியே போய்க்கொண்டிருந்த ஒரு குடியானவனைத் தன்பாலழைத்து, "ஐயா, இந்நாட்டின் பெயரென்ன? இதனை யார் ஆண்டு வருகிறுர்?" என்று கேட்க, அவன் ஹதீமை உற்றுநோக்கி

னனே அல்லாமல் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அப்போது ஹதீம், "ஐயா, உமக்குக் காது செவிடா அல்லது நான் கேட்கும் இந்தக்கேள்வி மிகவும் சாதாரணமானதென்று நீர் பதில் சொல்ல மனமில்லாம லிருக்கிறீரா?" என்று வினவினன். உடனே அந்தக் குடியானவன், "மகாபிரபு, என்னை மன்னிக்கவேண்டும். உங்களுக்கும் மகாவீரரான ஹதீமுக்கும் முகத்தில் வித்தியாசம் காணப்படவில்லை. உங்களைப் பார்த்தவுடன் ஹதீமைப் பார்த்ததுபோலவே எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று. அந்தச் சந்தோஷத்தினல் நான் மெய்ம்மறந்து பதில் சொல்லாமலிருந்தேனே யல்லாமல் வேறொன்றினலுமல்ல" என்று சொன்னன்.

ஹதீம், "அப்படியா, நீர் சொல்லுகிற ஹதீம் என்பவர் யார்? அவரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்? தெரிந்ததைச் சொல்லும்" என்று கேட்க அவன், "மகாபிரபுவாகிய ஹதீமென்பவர் மகாநீதிமான். ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் மிகுந்த பக்திகொண்டிருக்கிருர்கள். இது யாமன் ராஜ்யமாகும். இப்போது இங்கே அரசராயிருப்பவர் தாய் என்பவர். அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வரவேண்டியவர் ஹதீம். அவர் பலவருஷங்களுக்கு முன்பு தூரதேச யாத்திரையாக இந்த நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்ருர். அவர் போனபோது பிரயாணத்தில் கலியாணம் செய்துகொண்ட ஒரு சீமாட்டியின் முகமாகத் தம்முடைய க்ஷேம சமாசாரத்தைத் தமது தந்தைக்குச் சொல்லியனுப்பினர். அதன்பிறகு அவரைப்பற்றிய சமாசாரம் ஒன்றுமே தெரியவில்லை" என்று சொல்லிவிட்டுத் தான் போகவேண்டிய இடத்துக்குப் புறப்பட்டான். உடனே அவன் பிரயாணத்தை நிறுத்தி அவனைப் பார்த்து ஹதீம், "ஐயா, தாய் என்பவரின் குமாரனன ஹதீம் நானே. நீர் என்னுடைய தந்தையின் அரண்மனைக்குச் சென்று அவரையும் என் தாயாரையும் என் மனைவியையும் பார்த்து நான் க்ஷேமமாக இருக்கிறேன் என்பதைச் சொல்லும். நானே அங்கு போகலாம் என்ருலும் அவ்விடம் போவதற்குமுன் நான் கவனிக்கவேண்டிய முக்கியமான காரியங்கள் சில உண்டு. அவற்றை முடித்துக்கொண்டு தான் நான் அங்கே போவேன். வெகுதூரம் செய்த பிரயாணத்தினல் நான் மிகவும் களைத்துப்போயிருக்கிறேன். நீர்

அங்கே போவதற்கு முன்பு எனக்குக் கொஞ்சம் ஆகாரமும் தண்ணீரும் கொடுத்து விட்டுப்போம்" என்று சொன்னான். உடனே குடியானவன் தன்னுடைய சக்திக்கு எவ்வளவு சிறந்த ஆகாரத்தைக் கொணர்ந்து கொடுக்கலாமோ அவ்வளவு சிறந்த ஆகாரத்தைக் கொணர்ந்து கொடுத்து ஹாதீமினுடைய வந்தனங்களைப் பெற்றுக்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டுச் சென்றான்.

6. ஷாஹபாத்துக்கு ஹாதீம் திரும்புதல்.

தன் களைப்பைப் போக்கிக்கொண்டு ஹாதீம் சிறிதும் தாமதம் செய்யாமல் ஷாஹபாத்துக்குப்போய்ச் சேர்ந்தான். அவனுடைய வரவைக்கேட்ட ஹம்ஸதேவி அவனைத் தன்பால் அழைத்து அவன் சென்றதுமுதல் அதுவரையில் நடந்த விஷயங்களை யெல்லாம் விவரமாகச் சொல்லும்படி கேட்க, ஹாதீம் ஒன்றையும் பாக்கிவிடாமல் தான் கண்ட காட்சிகளை யெல்லாம் எடுத்துரைத்தான். ஹம்ஸதேவி அவனைப் பார்த்து, "மகா தைரியசாலியான ராஜகுமாரனே, நீ சொன்ன விஷயம் ஒவ்வொன்றும் உண்மையாகவே இருக்குமென்று நினைக்கிறேன். ஆனால் நீ அங்கே போய் விட்டுவந்ததற்கு அடையாளமாக என்ன கொண்டுவந்திருக்கிறாய்?" என்று கேட்டாள். உடனே ஹாதீம் தன்னிடமிருந்த விலையுயர்ந்த மூன்று ரத்தினங்களையும் அவளுக்குக் காட்டி மகிழ்ச்சியை யுண்டாக்கி அவளைப் பார்த்து, "உன்னுடைய ஆறாவது வினா என்ன?" என்று கேட்டான்.

அப்போது ஹம்ஸதேவி, "ஒருகோழிமுட்டையளவுபெரிதான முத்து ஒன்று என்னிடம் இருக்கிறது. அதைப்போன்ற ஒரு பெரிய முத்தை என்னிடம் கொணர்ந்து காட்டு" என்று சொல்லி அந்த முத்தை அவனுக்குக் காட்டினாள். ஹாதீம் அதைப் பார்த்து அதேமாதிரி வெள்ளியினால் ஒரு வடிவம் செய்து அதனைத் தன் தலைப்பாகைக்குள் வைத்துக்கொண்டு தன்னுடைய ஆறாவது பிரயாணத்தைச் செய்யப் புறப்பட்டான். ஆனாலும் புறப்படுவதற்குமுன் மூன்றுநாள் தன் நண்பனாகிய முனிவரானது வீட்டில் விருந்தினனாக இருந்து அங்கிருந்து புறப்பட்டான். ஏழு கேள்விகளில் ஐந்து கேள்விகளுக்

குத் தன்னுடைய நண்பன் பதில் சொல்லிவிட்டானென்று முனிவரன் அறிந்து மிகுந்த சந்தோஷம் அடைந்து பாக்கி யுள்ள இரண்டு வினுக்களுக்கும் பதில் சொல்லிவிடுவானென்று எண்ணியிருந்தான்.

அத்தியாயம் 7.

ஆருவது வினுவுக்கு விடை.

1. மரத்திலிருந்த பறவைகளிரண்டும் பேசிக்கொண்ட விஷயங்கள்.

ஹாதீம் முனிவரனிடம் விடைபெற்றுக்கொண்டு ஷா ஹ பாத்து நகரத்திலிருந்து புறப்பட்டான். மத்தியில் ஒரு பாலை வனத்தை அவன் கடக்கவேண்டி யிருந்தது. அங்கிருந்து இரண்டு மூன்று காதவழி போனபிறகு தனியேயுள்ள ஒரு மரத்தைக் கண்டான். அதனடியில் கருங்கல்லினுல் அமைந்த ஓர் ஆசனம் இருந்தது. மாலைவேளை நெருங்கினமையால் சிறிதுநேரம் அங்கேயே யிருந்து பொழுதுபோக்க எண்ணி அந்த ஆசனத்தின்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு எதைப் பற்றியோ ஆழ்ந்த யோசனை செய்தான். அப்போது அவன் முழங்கை முழங்காலின்மேலும் தலை கையின்மேலும் இருந் தன. அவன் அந்த நிலைமையி லிருக்கையில் பஞ்சவர்ணக் கிளிகள் இரண்டு அந்த மரத்தின்மேல் வந்து உட்கார்ந்தன. அவைகளுக்குப் பேசத்தெரியும். பெரும்பாலும் அவைகள் கார்மானக் கடலிலேயே சஞ்சரிப்பது வழக்கம். ஏதோ தெய்வ சங்கற்பத்தால் அவை அன்றைத்தினம் ஹாதீம் உட் கார்ந்திருந்த மரத்துக்கு வந்தன.

அவற்றுள் பேடு ஆணைப்பார்த்து, "மனித சஞ்சாரமில் லாத இந்த இடத்தில் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு யோசனை செய்பவன் யாராக இருக்கலாம்? அவன் எதைப் பற்றி ஆலோசனை செய்யக்கூடும்? உன்னுல் சொல்லக் கூடுமா?" என்று வினுவ ஆண்பறவை, "யாமன் நாட்டு நீதிமானுகிய ஹாதீம்தாய் என்னும் யுவராஜனே இங்கே இருப்பவன். அவன் ஒரு கோழி முட்டையளவு பெரிதான முத்தைத் தேடிக்கொண்டிருக்கிறுன். அதற்காக இன்ன இடத்

துக்குப் போகலாமென்றும் இன்னது செய்யலாமென்றும் தெரியாமல் மிக்க மனக்கவலையுடன் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறான். அவன் இவ்வளவு கவலைப்படுவதும் தன்னுடைய நண்பனுக்காகவே யன்றித் தனக்காக அல்ல. வேறொருவனுடைய சுகத்தைக் கருதியே அவன் தன்னுடைய நாட்டையும் பெற்றோர்களையும் விட்டுவிட்டு வந்து இவ்வளவு கஷ்டப்படுகிறான்" என்றது.

பேடு: "அப்படியா, மனிதனென்றால் இவனல்லவோ மனிதன்! இவனுடைய பெருந்தன்மை யாருக்கு வரும்? அந்த முத்து இருக்கும் இடமே இவனுக்குத் தெரியாவிட்டால் இவன் எங்கே போய் அதனைத் தேடிக் கண்டுபிடிப்பான்?"

ஆண்பறவை: "இவனுக்கு வேண்டிய உதவி நான் செய்கிறேன். இந்த அருமையான முத்துக்களைப்பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன் கேள். இந்த உலகம் ஏற்பட்டதுமுதல் நம்முடைய இனத்துப் பறவைகளெல்லாம் காரமானக் கடற்கரையிலேயே இருந்து வந்திருக்கின்றன. முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை இந்த மாதிரியான முத்துக்களை நம்முடைய பெட்டைகள் முட்டையிட்டு வந்தன. சில வருஷங்களாக அந்தச் சக்தி நமது ஜாதிக்கு இல்லாமற் போயிற்று. ஆனாலும் முன்பு உண்டான முத்துக்கள் சமுத்திரத்துக்குள்ளே அளவிடமுடியாத ஆழத்தில் கிடக்கின்றன. அவற்றில் இரண்டுமட்டும் சமுத்திரத்துக்குள்ளே போகாமல் நிலத்தில் இருக்கின்றன. அவை பல ஜனங்களிடம் மாறி மாறிப் போயிருக்கின்றன. ஷாஹபாத்து நகரத்து அரசியாகிய ஹம்ஸதேவியினிடம் ஒரு முத்து இருக்கிறது. மற்றொன்று பாரசாக் தீவை ஆண்டுவரும் சூளாமணி என்னும் அரசனிடம் இருக்கிறது. அவனுக்கு ஒரு பெண்ணைத்தவிர வேறு சந்ததி இல்லை. அவளுக்கோ இன்னும் கலியாணம் ஆகவில்லை. எவனொருவன் அந்த அரசனிடம் சென்று அந்த முத்தின் வரலாற்றைத் தெரிவிக்கிறானோ அவனுக்கு அந்த அரசன் தன் மகளை விவாகஞ்செய்து கொடுப்பதல்லாமல் அந்த முத்தையும் சீதனமாக அளிப்பான்."

பேடு: "நீ சொல்லுவது சரிதான். இவன் காரமானக் கடலுக்கு எவ்வாறு போய்ச் சேருவான்? அந்த இடத்தில்

அநேகம் பூதங்கள் இருக்கின்றனவே! அவற்ருல் இவனுக்கு அளவற்ற துன்பங்கள் உண்டாகக்கூடுமே."

ஆண்பறவை: "கடவுள் இவனைக் காப்பாற்றுவார். இவன் இன்னும் வெகுகாலம் சிரஞ்சீவியாக இருப்பான். பாரசாக் அரசனுக்கும் இந்தப் பூதங்களுக்கும் சிநேகம் உண்டு. இவன் நம்முடைய இறகுகளில்சிலவற்றை எடுத்துக்கொண்டுதெற்கே வெகுதூரம் போகவேண்டும். காப் என்னும் குன்றத்தை அடைந்ததும் இவனுக்கு முன்னே ஒரு விசாலமான பாலை வனம் காணப்படும். அங்கே போவதற்கு முன்பு இவன் பச்சை நிறமுள்ள இறகுகளைக் கொளுத்திச் சாம்பலாக்கி அந்தச் சாம்பலை ஜலத்தோடு கலந்து தன்தேகம் முழுவதிலும் பூசிக்கொள்ளவேண்டும். இதனல் துஷ்ட மிருகங்கள் இவனிடம் அணுகாதபடி ஒரு நெடி அடிக்கும். அல்லாமலும், பார்ப்பதற்கும் இவன் பூதம்போலவே இருப்பான். இவன் குரலும் பூதத்தின் குரலைப்போல் இருக்கும். இவன் தேகம் கறுப்பாகவும் இவன் கைகளும் கால்களும் அளவுக்கு மிஞ்சின பருமனகவும் ஆய்விடும். அந்தப் பாலைவனத்தைத் தாண்டிப் பாரசாக் தீவுக்கு வந்தவுடன் வெள்ளை இறகுகளை யெல்லாம் பொசுக்கிச் சாம்பலாக்கி அதை ஜலத்தோடு கலந்து முன்போல் தன் தேகத்தில் பூசிக்கொள்ளவேண்டும். உடனே இவன் தேகம் பழைய நிலைமையை அடைந்துவிடும். அப்பால் இவனைச் சில போர்வீரர்கள் அந்தத் தீவின் அதிபதியாகிய சூளாமணியினிடம் அழைத்துக்கொண்டு போவார்கள். இவன் சிறிதும் பயப்படாமல் தான் வந்த காரியத்தை அவனிடம் சொல்ல வேண்டும். உடனே அவன் அந்த முத்தை இவனுக்கு அளிப்பதல்லாமல் தன் மகளையும் விவாகம் செய்து கொடுப்பான்."

பேடு: "இவன் இந்த முத்துக்களின் வரலாற்றைச் சொன்னலன்றிச் சூளாமணியரசன் தன் மகளை இவனுக்கு விவாகம் செய்து கொடுக்கமாட்டான் என்று முன்பு சொன்னயல்லவா? இவனுக்கோ அந்த வரலாறு தெரியாதே! அதற்கு இவன் என்ன செய்வான்? அதனை இவனுக்குச் சொல்லக் கூடியவர் யார் இருக்கிருர்?"

ஆண்கிளி: "அதற்கென்ன? நானே சொல்லுவேன். என்னைத்தவிர வேறொருவருக்கும் அந்த முத்தின் வரலாறு தெரியாது."

பேடு, "அப்படியானால் அந்த வரலாற்றைச் சொல்லுவாயாக; கேட்கிறேன்: நான் கேட்கும்போது இவனும் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்" என்று சொல்ல ஆண்பறவை, அந்த முத்து முதலில் உண்டான விதத்தையும் அப்பால் அது பலரிடம் சென்று கடைசியில் சூளாமணி அரசனிடம் வந்த விதத்தையும் மிகவும் விவரமாக எடுத்துரைத்தது. அவ்வளவையும் எழுதுவதென்றால் இப்புத்தகம் இடம் கொடாது. ஹாதீம்தாய் ஒரு வார்த்தையையும் விடாமல் எல்லாவற்றையும் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொண்டான். முத்தின் வரலாற்றைச் சொல்லிவிட்டு ஆண்கிளி தன் சிறகுகளையெல்லாம் மிகவும் வேகமாகப் படபடவென்று அடித்துக்கொண்டது. உடனே சில பச்சை இறகுகளும் சில வெள்ளை இறகுகளும் ஹாதீமைச் சுற்றிக் கீழே உதிர்ந்து விழுந்தன. அப்போது ஹாதீம் பின்னால் உபயோகிப்பதற்காக அவற்றை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக் கொண்டான்.

2. ஹாதீம் தியூமன் நாட்டு யுவராஜனைச் சந்தித்தல்.

இவ்வாறு பஞ்சவர்ணக் கிளிகள் செய்த உதவியினால் ஆறாவது கேள்விக்குரிய விடையைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய வழியை ஹாதீம் நன்றாக அறிந்துகொண்டான். ஆனாலும் அவ்விஷயத்தில் அவன் செய்யவேண்டிய துணிகரச் செயல்களோ மிகவும் அபாயமானவை. அவற்றையெல்லாம் விவரமாகச் சொல்லுவதற்கு இந்தப் புத்தகம் இடந்தராது. சிறிதுநேரம் யோசனைசெய்து ஹாதீம்தாய் வழக்கப்படி பிரயாணஞ்செய்யத் தொடங்கினான். ஷம்ஷா என்னும் கந்தருவ அரசனொருவனுக்கு நேர்ந்திருந்த சாபமானது ஹாதீம்தாயினால் அந்தப் பிரயாணத்தில் விமோசனமாயிற்று. அதனாற் களிப்புற்ற கந்தருவ அரசன் நான்கு கந்தருவ வீரர்களை ஹாதீம்தாய்க்கு உதவியாக இருக்கும்படி செய்தான். அந்த வீரர்கள் ஹாதீமை ஒரு விமானத்தில் தூக்கிவைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகப் பலநாள் அல்லும் பகலும் இடைவிடா

கந்தருவ அரசனுடைய சாபவிமோசனம்.

மல் பிரயாணஞ்செய்து காரமானக்கடலை யடைந்தார்கள். பசியும் தாகமும் உண்டாகும் போதெல்லாம் அவர்கள் கீழே ஓரிடத்தில் தங்கிக் களைப்பைப் போக்கிக் கொள்வார்கள். ஒருநாள் அவர்கள் எல்லாரும் ஒரு மலையினுச்சியில் தங்கி இளைப்பாறினார்கள். பாரசாக் அரசனுடைய குமாரி யின்மேற் காதல் கொண்ட தியூமன் நாட்டு யுவராஜனை ஒரு கந்தருவன் அந்த மலையில் வசித்து வந்தான். தன் காதலுக் குரிய மடந்தை தனக்குக் கிட்டாமையினால் அவன் அந்த மலையின் மேலிருந்து ஓயாமல் புலம்புவது வழக்கம். ஹதீம் தாய் அங்கே போய்ச் சேர்ந்தவுடன் கந்தருவனுடைய அழு கைக்குரல் அவன் காதில் விழுந்தது. அவன் அழுகைக்குக் காரணம் யாதென்று ஹதீம் அவனருகிற் சென்று விசாரித் தான்.

கந்தருவன்:—"பூலோகவாசியே, நீ இன்னானென்பதை முதலில் எனக்குச் சொல்லுவாயாக. இங்கே நீ வந்த காரி யம் யாது?"

ஹாதீம்:—"மோகனமுத்தைத் தேடிக்கொண்டு நான் இவ்வளவுதூரம் வந்திருக்கிறேன். அது பாரஸாக் மன்னனிடம் இருப்பதாகக் கேள்வி. அந்த முத்தைத் தேடிக்கொண்டு வருபவர்களையெல்லாம் அவன் ஏதோ ஒரு கேள்வி கேட்கிருனென்றும் இதுவரையில் ஒருவனுலும் அதற்குப் பதில் சொல்லமுடியவில்லை யென்றும் சொல்லுகிருர்கள். நன்ருக விசாரித்துப் பார்த்ததில் அவன் கேட்பதெல்லாம் அந்த முத்தைப் பற்றிய வரலாறுதானென்று தெரிகிறது."

கந்தருவன்:—"நீ சொல்வதெல்லாம் உண்மையே. கந்தருவ வகுப்பைச் சேர்ந்த எங்களுக்கே அவ்விஷயம் அசாத்தியமாக இருக்கையில் மனிதனுகிய நீ அந்த முத்தின் சரித்திரத்தை எவ்வாறு சொல்லப்போகிருய்?"

ஹாதீம்:—"தெய்வத்தினிடம் எனக்குப் பூரணமான நம்பிக்கையுண்டு. அதனுல்தான் இவ்வளவு தைரியமாக வந்திருக்கிறேன். அது இருக்கட்டும். உன் வருத்தத்துக்குக் காரணம் என்ன? ஜனசஞ்சாரமில்லாத இந்த மலையின் உச்சியில் நீ ஏன் வசிக்கிருய்?"

கந்தருவன்:—"ஐயோ! நான் என்ன செய்வேன்! பாரஸாக் தீவுக்கு அதிபதியான மாகியர் அரசனுக்கு அதிரூபலாவண்ணியமுள்ள ஒரு புத்திரி யிருக்கிருள். அவளை விவாகம் செய்துகொள்ள ஆசைகொண்டவர்களில் நானும் ஒருவன். நான் அந்த அரசனிடம் சென்று என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்தபோது அவன் அருமையான ஒரு பெரிய முத்தைக்காட்டி, 'இந்த முத்தின் வரலாறு உனக்குத் தெரியுமா?' என்று என்னைக் கேட்டான். அந்த முத்தைப்பற்றிய சமாசாரமே எனக்கு ஒன்றும் தெரியாமையாலும் அவன் இவ்வாறு கேட்கக் கூடுமென்று நான் சிறிதும் எதிர் பாராமையாலும் மிக்க நாணத்துடன் அந்த இடத்தைவிட்டு வெளியே திரும்பிவர நேர்ந்தது. அரசனுடைய அத்தாணி மண்டபத்திலிருந்து வெளியே வருகையில் தற்செயலாய் அவனுடைய குமாரியின் முகத்தை ஒரு ஜன்னலின் வழியாகப் பார்த்தேன். அவளைப் பார்த்தது முதல் என்னுடைய ஞாபகம் அவளிடத்திலேயே பதிந்திருக்கிறது. வேருென்றிலும் என் புத்தி செல்லவில்லை. வெறிகொண்டவனுடைய மனநிலை எப்படி இருக்குமோ அப்படியே ஆயிற்று என் மனநிலை.

தாங்க முடியாத துக்கத்தினுல் ஒன்றும் தோன்ருமல் இந்த மலேக்கு ஓடிவந்து அழுதுகொண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டும் காலத்தைப் போக்கி வருகிறேன். நான் இப் பொழுது இறந்துவிடுவேனுயின் அதுவே என்னுடைய துக்கத்தைப் போக்குவதற்குத் தகுதியான வழியாகும். என் னுடைய துக்கம் நீங்குவதற்கு மரணம் வழியே யல்லாமல் அவளை யடைந்து என் துக்கம் நீங்கப்போகிற தென்பது இந்த ஜன்மத்திலில்லே. நான் இனி இருந்தாலென்ன? இறந் தாலென்ன?"

ஹதீம்:—"ஏன் நீ வீணுகக் கவலேப்படுகிருய்? தைரியத்தை விட்டுவிடாதே. நான் அந்த முத்தைத் தேடிக்கொண்டுதான் போகிறேன். எனக்கு அது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய முயற்சி கைகூடுமானுல் முத்தை நான் எடுத்துக்கொள்ளுவேன். அந்த அரசனுடைய குமாரி உனக்குரிமையாவாள். இது நிச்சயம்."

கந்தருவன்:—"நீ சொல்லுவது காதுக்கு மிகவும் இனிமை யாக இருக்கிறது. அதனுல் உன்னுடைய தயாள குணமும் நன்ருகத் தெரிகிறது. ஆனுல் உன்னுடைய முயற்சி பலிக் கும் என்ற நம்பிக்கை மாத்திரம் எனக்குச் சிறிதளவேனும் இல்லே. நான் இவ்விதம் சொன்னேனேயென்று நீ வருத்தப்பட வேண்டாம்."

ஹதீம்:—"நண்பனே, நான் சொல்லுவதைக்கேள். அந்த முத்து ஒரு பறவையின் முட்டையிலிருந்து உண்டானது. அதன் வரலாறும் எனக்குக் கொஞ்சம் தெரியும். அதைப் பற்றி இப்போது உன்னிடம் சொல்லுவதற்கு எனக்கு அவ காசம் இல்லே. உனக்கு இஷ்டம் இருந்தால் என்னுடன் வா. இருவரும் மாகியர் அரசனுடைய அரண்மனேக்குப் போ வோம். அங்கே எல்லாவற்றையும் நீ விவரமாகக் கேட்க லாம்."

ஹதீம்: இவ்வாறு சொன்னவுடன் கந்தருவ யுவராஜன் ஹதீமுக்கு வந்தனமளித்து அவனுடன் விமானத்தி லுட்கார் ந்து கொண்டான். உடனே கந்தருவ வீரர்கள் நால்வரும் அந்த விமானத்தைத் தூக்கிக்கொண்டு மேகமண்டலத்தைக் கடந்து பாரசாக் தீவை நோக்கி வெகுதூரம் சென்ருர்கள். சிலநாட். சென்றபின் கந்தருவ வீரர்கள் ஹதீமைப் பார்த்து,

"யாமன் நாட்டு வீரனே, நாங்கள் இதுவரையில் தான் வரலாம். இதற்கப்பால் இருப்பது பூதங்களுடைய பிரதேசம். அங்கே போவதற்கு எங்களுடைய தலைவன் உத்தரவு கொடுக்கவில்லை" என்று சொன்னார்கள். அப்போது ஹாதீம், "நீங்கள்போய் வாருங்கள். இதுவரையில் வந்ததேபோதும். பாக்கியுள்ள பிரயாணத்தை நானே முடித்துக்கொள்ளுவேன். அதைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். உங்களுடைய அரசனிடம் சென்று என் வந்தனத்தை தெரிவியுங்கள்" என்று சொல்லி அவர்களை அவர்கள் கொண்டுவந்த விமானத்துடன் ஊருக்கு அனுப்பிவிட்டான். கந்தருவனாக இருந்தாலும் ஹாதீமினுடைய பலத்தினால் தியூமன் நாட்டுயுவராஜன் அச்சமின்றி அவனுடனிருந்தான்.

3. அவர்களிருவரும் பூதங்களிடமிருந்து தப்பிப் பாரசாக் தீவை யடைதல்.

அதன்பிறகு ஹாதீம் கந்தருவனைப் பார்த்து இனிமேல் கால்நடையாகப் போகலாமா என்று கேட்டான். "பூதங்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் பூதத்தைத் தவிர வேறொருவரும் காலடி யெடுத்து வைக்கக்கூடாது. ஒருவேளை யாரேனும் துணிந்துசென்றால் அவனுக்கு மகத்தான தீங்கு நேரிடும். மனிதனாகிய நீ அங்கே செல்வது மிகவும் அபாயத்துக்கு இடம் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை" என்று கந்தருவன் பதிலுரைத்தான்.

ஹாதீம்:—"அப்படியா, கந்தருவர்கள் கூட அங்கே போகப் பயப்படுவார்களா?"

கந்தருவன்:—"கந்தருவர்கள் போனால் அபாயம் இல்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆனாலும் மனிதர்களைப்போல் அவர்கள் பயப்படவேண்டியதில்லை. பூதங்களுக்கும் கந்தருவர்களுக்கும் கடுமையான யுத்தம் ஒன்று நடந்து இப்போது தான் சமாதானத்தால் முடிவுக்கு வந்தது. கந்தருவ ஜாதிக்கே பூதங்கள் யாதொருவிதமான துன்பத்தையும் செய்யக்கூடாதென்பது அந்த உடன்படிக்கையில் ஏற்பட்ட நிபந்தனைகளில் ஒன்றாகும். ஆனால் உன்னைப்போன்ற மனிதர்களை அந்தப் பூதங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கும் இந்த உடன்படிக்கைக்கும் சம்பந்தமில்லை."

ஹதீம்:—''சரி, ஒரு பூதத்தைப்போல் நான் வேஷம் போட்டுக்கொள்ளுகிறேன் என்று நினைத்துக்கொள்ளு. அப்போது நீ என்னுடனிருப்பாயா?''

கந்தருவன்: —"இருப்பதற்குத் தடையில்லை. ஆனால் வெளிப்படையாக இருக்கமாட்டேன். ஏனென்றால் நீயும் நானும் சேர்ந்திருப்பதைப் பார்த்தால் அவைகள் நம்மிருவருக்கும் துன்பத்தை உண்டாக்கக்கூடும். ஆகையால் பகல் வேளையில் நான் ஆகாயத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்து ராத்திரியில் நீதங்குமிடத்துக்கு வந்துவிடுகிறேன்'' என்றுசொல்ல, ஹதீம் அதற்கிணங்கித் தான் கொண்டுவந்திருந்த பச்சை இறகுகளைக் கொளுத்திச் சாம்பலாக்கி அதனை ஜலத்தோடு கலந்து தன் தேகம் முழுவதிலும் பூசிக்கொண்டான். அதனால் அவன் பார்வைக்கு ஒரு பூதம்போல் ஆனான். அதைக் கவனித்த கந்தருவன் ஹதீமினுடைய திறமையையும் புத்தி விசாலத்தையும் கண்டு மகிழ்ந்தான். பிறகு இருவருமாகப் புறப்பட்டுச் சென்றார்கள். பூதங்களுடைய நாட்டிற்குச் செல்லுகையில் ஹதீமுக்குப் பூதங்களால் ஒருவிதமான அசௌகரியமுமுண்டாகவில்லை. ஹதீமும் தங்கள் இனத்தைச் சார்ந்ததாகவே அந்தப் பூதங்கள் எண்ணினமையே அதற்குக் காரணம்.

சில தினங்களுக்குப் பிறகு ஹதீமும் அவனுடைய கந்தருவ நண்பனும் ஒருநாள் ராத்திரி ஓரிடத்தில் தங்கினபோது ஒருபூதம் அவர்கள் இருவரும் சேர்ந்து பழகுவதைக் கவனித்து மற்றப் பூதங்களிடம்போய் அதைப்பற்றித் தெரிவித்தது; உடனே அந்த இருவரையும் கைதியாக்கிக் கொண்டு போகும் எண்ணத்துடன் எல்லாப் பூதங்களுமாகச் சேர்ந்து அவ்விடத்துக்கு வந்தன.

ஹதீம்:—''எங்களுடைய தூக்கத்தை ஏன் கெடுக்கிறீர்கள்? இங்கே உங்களுக்கு என்ன வேலை?''

பூதங்கள்: "நீங்கள் இருவரும் இன்னாரென்பதை அறிந்துகொள்ள வந்திருக்கிறோம்."

ஹதீம்:-—''என்னைப் பார்க்கும்போது உங்களைப்போலவே நானும் ஒருபூதம் என்று உங்களுக்குத் தெரியவில்லையா? கந்தருவ நாட்டரசனாகிய ஷம்ஷா என்பவன் முகரணஜாதி பூதங்களையெல்லாம் நாட்டினின்றும் துரத்தியடித்தான். அதனாலேதான் நான் இங்கே ஓடிவந்திருக்கிறேன். பாரஸாக்

தீவுக்குப்போகும் ஒரு நண்பனுக்கு உதவிசெய்யும் பொருட்டே அவ்வரசன் எங்களையெல்லாம் துரத்தினன். நீங்கள் அவனைத் தேடிப்பிடித்து அவனை எதுவேண்டுமானாலும் செய்யுங்கள். குற்றமற்ற என்னைப்போன்ற பிரயாணிகளின் வழிக்கு நீங்கள் ஏன் வருகிறீர்கள்?"

பூதங்கள்: "ஒரு கந்தருவனால் உங்கள் ஜாதிக்கே இவ்வளவு கெடுதி உண்டாயிருக்குமானால் நீ இவனுடன் ஏன் உறவாடுகிறாய்? இவன் எந்த வகுப்பைச் சேர்ந்தவன்?"

ஹாதீம்:—"இவன் தியூமன் நாட்டு யுவராஜன். உங்களுக்கு வேண்டியவர்களான கந்தருவஜாதியிற் பிறந்தவன்."

பூதங்கள்: "சரி, அப்படியானால் நாங்கள் உங்சள் வழிக்குவரவில்லை. உங்கள் இஷ்டப்படி போய்வாருங்கள்."

பூதங்களின் வசம் அகப்பட்டுக்கொள்ளாமல் ஹாதீமும் அவனுடைய நண்பனும் அந்த இடத்தினின்றும் மிகவும் வேகமாகக் கிளம்பினார்கள். ஒருவேளை மறுபடியும் அவைகளால் தங்களுக்குத் துன்பம் நேரக்கூடுமோ என்ற கவலை ஹாதீமுக்கும் அவன் நண்பனுக்கும் உண்டு. ஆதலால் எவ்வளவு வேகமாக நடக்கக்கூடுமோ அவ்வளவு வேகமாகச் சென்று மூன்றாவதுநாள் மாலையில் காரமானக் கடலின் கரையை யடைந்தார்கள். பின்பு ஹாதீம் அந்தக் கடலைநோக்கிவிட்டு, "நண்பனே, பாரஸாக் தீவு இந்தக் கடலின் மத்தியிலே தானிருக்கிறது. கடலோ மிகவும் விசாலமாகவுள்ளது. ஒரு படகையேனும் கப்பலையேனும் காணோம். நாம் எப்படி அந்தத் தீவுக்குப் போய்ச்சேருவோம்?" என்று சொல்ல, கந்தருவன், "இங்கிருந்து ஒன்பதுகாத தூரத்தில் ஒரு பட்டணமுண்டு. அதில் இறகுகளோடு கூடிய குதிரைகள் உள்ளன. அந்த இடத்துக்குச் சென்று அவற்றுள் இரண்டு குதிரைகளை நான் கொண்டுவருகிறேன். நான் போய்த் திரும்பி வரும் வரையில் நீ இங்கேயே இரு" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். அந்த நகரத்து அதிபதி கந்தருவனுக்கு மிகவும் வேண்டியவனாகையால் ஒரு தடையுமில்லாமல் அவனுடைய அரண்மனைக்குட் சென்று அவனுக்குத் திருப்தியுண்டாகும்படி வெகுநேரம் வரையில் இனிமையாகப் பேசியிருந்து அப்பால் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். உடனே அவன் மிகவும் வேகமாகப் பறக்கக்கூடிய இரண்டு

கந்தருவனும் ஹதீமும் குதிரைகளின்மேல் ஏறிச்செல்லுதல்.

குதிரைகளைக் கந்தருவனிடம் கொடுக்கும்படி உத்தரவு செய்தான். அவற்றைப் பெற்றுக்கொண்டு வேகமாக ஹதீமினிடம் அவன் திரும்பிவந்தான். அவன்போய்த்திரும்பிவருவதற்குள்ளாகத் தான் வைத்திருந்த வெள்ளை யிறகுகளை யெல்லாம் ஹதீம் சாம்பலாக்கிஜலத்தோடுகலந்துமேலேபூசிக்கொண்டான். உடனே அவனுக்குப் பழைய வடிவம் வந்துவிட்டது. கந்தருவன் திரும்பிவந்து பார்த்து மிகுந்த ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தான். இருவரும் குதிரைகளி லேறிக்கொண்டு சவாரிசெய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் குதிரைகள் இறகுகளை விரித்துக்கொண்டு பறந்தபோது ஹதீமுக்கு உண்டான வியப்புக்கு எல்லையில்லை. குதிரை யோடின வேகத்தினல் அதன் முதுகின்மேல் சரியானபடி உட்காருவதற்குக்கூட ஹதீமுக்கு முடியாமற்போயிற்று. புறப்பட்ட சில தினங்களில் இருவரும் பாரஸாக் தீவுக்குப் பாதித்தூரத்தில் வந்துவிட்டார்கள். கந்தருவனுக்குப் பிரயாணத்தினல் களைப்பே உண்டாகவில்லை. ஆனல் மனிதவர்க்கத்தினனுத

லால் ஹதீமுக்குமட்டும் பசியும் தாகமும் அதிகமாயிருந்தன. ஆதலால் அந்த இடத்தைவிட்டு அப்பால் செல்ல அவனுல் முடியவில்லே. தனக்கிருந்த களேப்பை ஹதீம் கந்தருவனிடம் தெரிவிக்கவே அவன் ஒரு சிறிய பழத்தை ஹதீமினிடம் கொடுத்து, "இதில் கொஞ்சம் சாப்பிடு. உடனே உனக்கு இருக்கிற களேப்பெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடும்" என்று சொன்னுன். அவ்வாறே ஹதீம் பழத்தைச் சாப்பிட வழக்கம்போல் அவனுக்கு மனேதைரியமும் தேகபலமும் உண்டாயின. பிரயாணம் முடிகிறவரையில் அவனுக்குக் களேப்பே உண்டாகவில்லே.

அங்கிருந்து புறப்பட்டுச் சில தினங்களில் இருவரும் காரமானக் கடலின் வேருெரு கரையையடைந்தார்கள். அப்போது ஹதீம், "வாஸ்தவத்தில் நாம் பாரஸாக்தீவைத் தாண்டிவந்திருக்கிருேம். அந்தத் தீவு இந்தச் சமுத்திரத்தின் மத்தியில் இருப்பதாகத் தான் எனக்குக் கேள்வி" என்ருன்.

கந்தருவயுவராஜன், "அப்படியல்ல. அந்தத் தீவை இன்னும் நாம் தாண்டிவரவில்லே. அதன் ஓரத்தை இப்பொழுதுதான் நாம் மிதித்தோம். அதனுடைய ராஜதானிக்கு நாம்போய்ச் சேர இன்னும் சில தினங்களாகும். நீ உத்தரவு கொடுப்பாயானுல் நான் என்னிடத்துக்குப்போய்ச் சில வீரர்களே அழைத்துக்கொண்டு வருகிறேன். அவர்கள் நமக்குச் சகாயமாக வருவார்கள்" என்றனன்.

ஹதீம், "யோசனே வெகு நன்ருயிருக்கிறது. சூளாமணியரசனிடம் நாம் சண்டைபோட வரவில்லேயே!" என்று கேட்க யுவராஜன், "நாம் சண்டை போடுவதற்காக வரவில்லே. ஆனுலும் வழியில் நமக்கு இடையூறு ஏற்படுமானுல் அதைப் போக்கிக்கொள்ளுவதற்காகத்தான் நான் என்னுடைய வீரர்களே அழைத்துவர எண்ணினேன். நான் போய்வர அதிக நாளாகாது. ஏழுநாளில் திரும்பிவந்துவிடுவேன்" என்று சொன்னுன்.

4. பாரஸாக் அரசனிடமிருந்து ஹதீம் முத்தைப் பெறுதல்.

கந்தருவ நண்பன் உடனில்லாமல் ஹதீம் மட்டும் தனியாயிருந்தகாலத்தில் அவன் சுற்றியுள்ள இடங்களேயெல்லாம் பார்க்கப்போனுன். ஒருநாள் அவன் நல்ல வாசனேயுள்ள

ஒரு சோலையைக் கண்டான். அதற்குள்ளே செல்வதற்கு யாதொரு தடையுமில்லாமல் வழிகளெல்லாம் திறந்திருந்தன. ஆதலால் ஹதீம் அந்தத் தோட்டத்திற்குள்ளே சென்று அங்கே மரங்களெல்லாம் அளவற்ற கனிகளைத் தாங்கி நிற்ப தைக்கண்டு மகிழ்ச்சி யடைந்தான். பழங்களெல்லாம் பல நிறங்களில் இருந்தன. அவ்வளவு சிறந்த பழங்களை ஹதீம் அதற்குமுன் கண்டதில்லை. தன்னிஷ்டப்படியே அத்தோட் டத்தின் எல்லாப் பக்கங்களிலும் சுற்றித் திரிந்து தனக்கு வேண்டியவளவு பழங்களைத் தின்றான். அங்கே அவனுக் குக் காலப்போக்கு மிகவும் சுகமாக இருந்தது. தோட்டத்தி லிருந்த குதிரைகள் யாவும் அவனிடம் மிக்க பிரியங்காட் டின. பகல்வேளையில் அவைகள் வெளியே சென்று மேய்ந்து விட்டு ராத்திரிவேளையில் தோட்டத்துக்குத் திரும்பிவரும்.

பன்னீராயிரம் போர்வீரர்களோடு கந்தருவராஜன் குறிப் பிட்டகாலத்தில் ஹதீம் இருந்த இடத்துக்கு வந்துசேர்ந்தான். போர்வீரர்கள் யாவரும் ஆகாயத்தில் பறக்கக் கூடியவர் களாக இயிருந்தார்கள்.

ஹதீமும், கந்தருவ யுவராஜனும் குதிரைகளி லேறிக் கொண்டு ராஜதானியை நோக்கிச் சென்றார்கள். அநேகம் கந்தருவவீரர்கள் தன்னுடைய ராஜதானியை நோக்கி வருகி ருர்களென்றதைக் கேட்ட சூளாமணியரசன் அவர்கள் ஒரு வேளை தன்னை எதிர்க்க வருவார்களாயின் அவர்களைத் தாக்க வேண்டுமேயென்று தன்னுடைய சேனைகளையெல்லாம் சித்தப் படுத்தினன். ஹதீமும் கந்தருவ யுவராஜனும் ராஜதானியின் எல்லைக்கு வந்தவுடன் தங்களுக்கு முன்னே தங்களுடைய சேனையைக்காட்டிலும் மிகவும் பலமான ஒரு சேனை சித்தமாக இருப்பதைக் கண்டு வியப்புற்றார்கள். சண்டைக்காக வர வில்லையென்றும், அரசனைப் பார்த்துவிட்டுப் போவதற்காகவே வந்தவர்களென்றும் தியூமன்நாட்டு யுவராஜன் ஒரு தூதனிட மாகச் சொல்லியனுப்பச் சூளாமணியரசனுடைய சேனைவீரர் கள் ஹதீமையும் அவனது நண்பனையும் ராஜதானிக்கு உள்ளே விட்டார்கள். அங்கே அரசனைச் சேர்ந்தவர்கள் அவர்களு க்கு விசேஷமான உபசாரணைகள் செய்து திருப்தியை உண் டாக்கினர்கள்.

சூளாமணி யரசன் ஒரு தூதனை யனுப்பி ஹாதீமும், கந்தருவ மன்னனும் எங்கிருந்து வந்தவர்களென்பதையும் தன்னிடம் வந்ததன் நோக்கம் யாதென்பதையும் கேட்டுவரச் சொன்னான். அந்தத் தூதனிடம் கந்தருவன், "நான் இதற்கு முன்பு ஒருதடவை இங்கேவந்து அரசகுமாரியை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று அரசனை மிகவும் பிரார்த்தித்துக்கொண்டேன். ஆனால் அப்போது அரசன் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. மறுபடியும் இப்போது அந்த உத்தேசத்துடனே தான் இங்கே வந்திருக்கிறேன். உத்தமோத்தமனான ஒரு சிநேகிதனும் என்னுடன் அதே எண்ணத்துடன் வந்திருக்கிறான். ஆனால் அவன் இருப்பது என்னுடைய நாட்டுக்கு வெகுதூரத்துக்கு அப்பாலுள்ள யாமன் தேசமாகும்" என்று பதில் சொல்லியனுப்பினான்.

தூதன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சூளாமணி யரசன் அவர்களிருவரையும் தன்பால் அழைத்து வரச்செய்து ஹாதீமை நோக்கி, "யாமன் தேசாதிபதியே, நான் இருக்குமிடத்தைத் தேடிக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு நீ இவ்வளவுதூரம் வந்ததில் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். உன்னுடைய பெருமையைப்பற்றி நான் பலரால் கேள்வியுற்றிருக்கிறேன். என்னால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் இருந்தால் சொல்லவேண்டும்" என்று கேட்டான்.

அப்போது ஹாதீம் தான் கொண்டுவந்திருந்த வெள்ளி முத்து ஒன்றைக்காட்டி ஹம்ஸதேவிக்கும் முனிவரனுக்கும் விவாக சம்பந்தமாக ஏற்பட்ட நிபந்தனைகளை எடுத்துக்கூறி அந்த முத்துக்குச் சமமான நல்ல முத்தைத் தனக்குக் கொண்டுவந்து காட்டுவதுதான் அந்த மடந்தை ஏற்படுத்தின ஆறுவது நிபந்தனையாகுமென்றும் அதைக் கண்டுபிடிக்கும் பொருட்டேதான் அங்கே வந்ததாகவும் விவரமாகச் சொன்னான்.

அரசன்: "அப்படியா? இதற்குச் சமமான முத்து உனக்கு எங்கிருந்து கிடைக்கும்?"

ஹாதீம்: "ஹம்ஸதேவியிடத்தில் இருப்பது போன்ற முத்து உலகத்தில் ஒன்றுதான் இருக்கிறதென்றும் அதுவும் உங்களிடத்தில் தான் இருக்கிறதென்றும் கேள்விப்பட்டு வந்தேன்."

அரசன்: "சரி, உண்மையிலேயே என்னிடம் அப்படிப் பட்ட முத்து ஒன்று இருக்கிறது. ஆனல் அதனுடைய வரலாற்றை நீ சொல்வாயானல் அதனை உனக்குக் கொடுப்பதன்றி என் மகளையும் உனக்கு விவாகம் செய்விப்பேன்."

அப்பால் ஹதீம் சிறிதுநேரம் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்து அந்த விஷயத்தைப்பற்றி நன்ருக யோசனை செய்து, "எனக்குத் தேவையானது முத்துத்தான். உன்னுடைய மகள் எனக்கு வேண்டாம்" என்று சொன்னன்.

அரசன்: "முத்தை நீ அடைவாயானல் என் மகளும் உனக்கு உரியவளாவள். உனக்கு இஷ்டமானல் அவளை அங்கீகரிக்கலாம்; இல்லாவிட்டால் நிராகரிக்கலாம். உனக்கு இஷ்டமானவனுக்கு அவளை விவாகம் செய்துகொடுத்தாலும் கொடுக்கலாம்."

ஹதீம் "நல்லது; முத்தை நான் அடைந்தால் உன் மகளை இங்கே என்னுடன் வந்திருக்கும் தியூமன் நாட்டு யுவராஜனுக்குக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்ல அரசன் அதற்குச் சம்மதித்து அந்த முத்தின் வரலாற்றைச் சொல்லும்படி ஹதீமைக்கேட்டான். உடனே ஹதீம் பஞ்சவர்ணக் கிளிகள் இரண்டும் சொன்னபடி அந்த முத்தைப்பற்றிய வரலாற்றை மிகவும் தெளிவாகக் கூறினன். அதைக் கேட்டு அரசன் மிக்க சந்தோஷமடைந்து தன்னுடைய பொக்கிஷ அறைக்குச் சென்று முத்தை யெடுத்துவந்து, "நீ மகா தைரியசாலி; உன்னுடைய திறமையினல் நீ வெற்றிபெற்றனை. இதனை எடுத்துக்கொள் என் மகளும் உனக்கு உரியவளாவள்" என்ருன். பிறகு மிகவும் ஆடம்பரமாகத் தியூமன நாட்டு யுவராஜனுக்கும் சூளாமணி அரசனுடைய குமாரிக்கும் முறைப்படி விவாகம் நிறைவேறியது.

5. ஹதீம் ஷாகபாத்துக்குத் திரும்புதல்.

பாரஸாக் அரசனுடன் இரண்டொருமாதம் ஹதீம்இருந்துவிட்டு அவனிடம் விடைபெற்று ஷாகபாத்துக்குத் திரும்பி வந்துசேர்ந்தான் அவன் கொண்டுவந்த முத்தைப்பார்த்து ஹம்ஸதேவி மிகவும் ஆச்சரியமுற்ருள். அவளது அரண்மனையில் எல்லோருமே ஹதீமினுடைய திறமைக்கு மெச்சினர்கள். முனிவரனுடன் அங்கே சிலநாள் தங்கியிருந்து ஹம்ஸதேவி

யினிடம் சென்று, "பெண்மணி, உன்னுடைய ஏழாவது கேள்வி யாது? அதைச் சொன்னல் என்னல் கூடுமானவரை முயன்று நான் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்று வேன்" என்று சொல்ல ஹம்ஸதேவி, "நான் சொல்லப்போகும் ஏழாவது கேள்வியாகிய இதுவே என்னுடைய கடைசிக் கேள் வியாகும். படகார்டின் ஸ்நான கட்டத்திலுள்ள விசேஷங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு வந்து எனக்குச் சொல்லவேண் டும். இதுவே நான் விரும்புவது" என்றனள்.

பிறகு ஹாதீம் அந்தச் சீமாட்டியினிடமும் முனிவரனிட மும் சொல்லிக்கொண்டு அங்கிருந்து ஏதோ ஒரு திசையை நோக்கிப் புறப்பட்டான்.

அத்தியாயம். 8.

ஏழாவது வினவுக்கு விடை.

1. ஹாதீம் கேடன் அரசனைக்கண்டு பேசுதல்.

கடைசியாகிய அந்தப் பிரயாணம் செய்கையில் ஹாதீம் அளவற்ற அருமையான காட்சிகளைக் கண்டான். அபா யத்துக் கிடமான சில துணிகரச் செயல்களைச் செய்துவிட்டு அவன் படகார்டு ஸ்நான கட்டமுள்ள இடமாகிய கேடனுக் குப் போய்ச்சேர்ந்தான். வழியில் அவன் அநேகருக்குச் செய்த உதவிகளுக்குப் பதிலாக விலையுயர்ந்த ஆபரணங்க ளும் பலவகை ரத்தினங்களும் முத்துக்களும் அவனுக்கு வெகுமதியாகக் கிடைத்தன. ஆனல் எல்லாவற்றையும் எடுத் துக்கொண்டு போக முடியாமல் அவன் சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு போனன்.

கேடன் நாட்டு ராஜதானியை அடைந்தவுடன் ஹாதீம் சில தினங்கள் ஒரு சத்திரத்திலேயே இருந்துவந்தான். பிர யாணத்தாலுண்டான அயர்ச்சி நீங்கினபிறகு தான் கொண்டு வந்த பொருள்களுள் மிகவும் அருமையான இரண்டு முத் துக்களையும் இரண்டு கெம்புகளையும் இரண்டு வைரங்களை யும் எடுத்துக்கொண்டு அந்த நகரத்து அரசனது அரண்மனை யின் அஜாரவாசலை யடைந்து தன்னுடைய வரவை அரச னுக்குத் தெரிவிக்கும்படி வாயில் காப்போர்களிடம் சொன்

னன். அவர்கள் உடனே அரசனிடம் சென்று ஹாதீமின் வரவைத் தெரிவிக்க அவனை உள்ளே அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டான். ஹாதீம் உள்ளே சென்றவுடன் அரசனுக்கு வந்தனம் செய்து மிகவும் மரியாதையாக நின்ருன். அரசனும் அவனுடைய க்ஷேமங்களைப்பற்றி விசாரித்துவிட்டு, "ஐயா, உம்முடைய வியாபாரச் சரக்குகளையெல்லாம் எங்கே வைத்திருக்கிறீர்? நீர் என்ன வியாபாரம்செய்து வருகிறீர்?" என்று வினவ, ஹாதீம், "ராஜாதிராஜ, நான் வியாபாரத்தை விட்டு வெகுகாலமாயிற்று. இப்போது ஒரு போர் வீரனுக இருந்து வருகிறேன். நான் இந்த வழியே போய்க் கொண்டிருக்கையில் தேவரீருடைய தரிசனத்தைப் பெறும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது" என்ருன்.

அதுமுதல் ஹாதீமை அடிக்கடி அரண்மனைக்கு வருவித்து அரசன் உபசரிப்பதுண்டு. நாளடைவில் ஹாதீம் அரசனுடைய அந்தரங்க நண்பனுமாயினன். ஒருநாள் அரசன் அளவுக்கு மேல் சந்தோஷமாயிருப்பதைக் கண்டு ஹாதீம் அவனுக்கு ஒரு பெட்டிநிறைய விலையுயர்ந்த ஆபரணங்களை வெகுமதியாகக் கொடுத்தான். அரசன் அவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றிற்குப் பதிலாக அவனுக்கு ஏதேனும் செய்யக் கருதி அவனை நோக்கி, "உனக்கு வேண்டுவதுயாது? கொடுக்கச் சித்தனுக இருக்கிறேன்" என்று சொன்னன்.

அவ்வாறு அவ்வரசன் தன்னை எப்போது கேட்கப்போகிருன் என்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஹாதீம் மிக்க மகிழ்ச்சியுற்று, "மகாராஜா, படகார்டின் ஸ்நான கட்டத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் எனக்கு மிகுதியாக இருக்கின்றது" என்று சொல்ல, அரசன் அவன் இவ்வாறு சொன்னனே என்று மிக்க சஞ்சலத்தையடைந்து அவனைப் பார்த்து, "நண்பனே, உன்னுடைய விருப்பம் எனக்கு மிக்க மனக்கவலையை உண்டுபண்ணுகிறது. மனிதஜாதியிற் பிறந்த எவனையும் அந்த ஸ்நான கட்டத்தைப் பார்க்கவிடக் கூடாதென்று நான் சபதம் செய்துகொண்டிருக்கிறேன். ஒரு வேளை நீ அங்கே போகும்படி நேர்ந்தாலும் நீ உயிருடன் திரும்பிவருவது அசாத்தியம். உன்னிடத்தில் நான் விசேஷமான பிரியம் வைத்திருப்பதால் உன்னுடைய உயிருக்கே மோசம் வரக்கூடிய காரியத்தைச் செய்யும்படி உனக்கு

நான் அனுமதி கொடுப்பது தருமமாகாது. உன்னுடைய பிரிவை நான் பொறுக்கமாட்டேன். ஆகையால் நீயே இந்த விஷயத்தைப்பற்றி நன்ருக யோசித்துப்பார். நீ கேட்டபடி உனக்கு அனுமதிகொடுப்பதானல் எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? அதை நான் எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?" என்று அவனிடத்தில் மிக்க இரக்கங்கொண்டு கூறினன்.

அப்பால் ஹாதீம் தனது நண்பனுகிய முனிவரன் பொருட்டுத் தான் மேற்கொண்ட காரியங்களுள் அந்த ஸ்நான கட்டத்தைப் பார்த்து அதனுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்வதே கடைசியானதென்றும் அதற்கு முன்பு ஆறு காரியங்களைச்செய்து முடித்ததாகவும் அவை இன்னவையென்றும் விரிவாக எடுத்துரைத்தான். அப்பொழுது அரசன், "தயாளகுணசீலனே, பாக்கியாக இருக்கும் காரியத்தையும் கடவுளே துணைநின்று உனக்கு நிறைவேற்றி வைப்பாராக. அது இருக்கட்டும். உன் பெயரென்ன? நீ யாருடைய வம்சத்தில் உதித்தவன்?" என்று வினவினன்.

உடனே ஹாதீம், "மகாராஜா, என்னை எல்லோரும் ஹாதீம் என்று அழைப்பார்கள். என்னுடைய தந்தை யாமன் நாட்டு அரசராவர். அவருடைய பட்டத்துக்குரியவன் நானே" என்று கூற அரசன் அடங்கா மகிழ்ச்சியுடன் அவனைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, "யாமன் நாட்டு யுவராஜ சிங்கமே, உன்னுடைய முகத்தைப் பார்த்தால் நீ சொல்வன யாவும் உண்மையாகவே இருக்குமென்று தெரிகிறது. உன்னுடைய முகத்தில் ராஜ சின்னங்கள் விளங்குகின்றன. உன்னுடைய மேன்மைக் குணத்தினல் இந்த உலகமுள்ளளவும் உன்னுடைய பெயர் அழியாமல் விளங்கும் என்பது நிச்சயம்" என்று சொல்லி ஸ்நான கட்டத்துக்குள்ளே போவதற்காக அங்கே உள்ள காவற்காரனிடம் காட்டும்படி அனுமதிச் சீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்துச் சில சேவகர்களை அவனுக்கு உதவியாக அனுப்பினன்.

2. ஹாதீம் ஸ்நான கட்டத்துக்குப்போதல்.

ஹாதீம் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு அவன் அனுப்பிய சேவகர்களுடன் படகார்ட் ஸ்நான கட்டத்துக்குப் போகும் சாலையை யடைந்தான். பதினைந்து தினங்கள் பிர

யாணம் செய்தபிறகு ஒரு பெரிய மலையின் சிகரம் கண்ணுக்குத் தெரிந்தது. அதனைப்பார்த்து ஹாதீம், "இதோ தெரிகிற மலை யாது?" என்று மற்றவர்களை வினவ அவர்கள், "இது தான் படகார்டுமலை. இது மிகவும் சமீபத்தில் இருப்பதாகத் தோன்றினாலும் இங்கிருந்து அங்கேபோக இன்னும் ஏழுநாள் பிடிக்கும்" என்றார்கள். பிறகு எல்லோருமாக மிகவும் கஷ்டப்பட்டு ஏழுநாள் பிரயாணம் செய்து மலையடிவாரத்தை யடைந்தார்கள். அங்கே உருவின கத்தியுடன் அநேகம் யுத்தவீரர்கள் மலையைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹாதீமைப் பார்த்து, "நீயார்? நீ இங்கே வந்த காரியம் யாது?" என்று விசாரித்தார்கள்.

உடனே ஹாதீம் அரசன் கொடுத்த அனுமதிச் சீட்டைக் காவற்காரர்களின் தலைவனிடம் காட்டினன். அவன் ராஜாக்ஞையை வாசித்தான். அதில், "இந்த உத்தரவுடன் வருகிற யாமன் நாட்டு யுவராஜனுக்குப் படகார்டின் ஸ்நான கட்டத்தைக் காட்டவேண்டும். இவன் மனித ஜாதியிற பிறந்தவனென்று இவனை அசட்டைசெய்து வெளியேபோகச் சொல்லக்கூடாது. மனித ஜாதியிற் பிறந்தவர்களுக்கு இந்த இடத்தைக் காட்டுவதில்லை என்று நான் பிரதிக்ஞை செய்திருந்தாலும் இவன் விஷயத்தில் அதைப் பார்க்கவேண்டாம். ஆனல் இவனிடம் பேசிப்பார்த்து இவனை ஸ்நான கட்டத்துக்குப் போகாமலிருக்கும்படி உபதேசிக்கக் கூடுமானல் அவ்விதம் செய்துபார். அவ்வாறு செய்வாயானல் உனக்கு விசேஷமான வெகுமதி அளிக்கப்படும்" என்ற சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன.

வாயில் காப்போன் அனுமதிச் சீட்டைப் படித்துப் பார்த்தபிறகு ஹாதீமைத் தன்னுடைய விருந்தினனாக மூன்றுநாள் வரையில் வைத்திருந்தான். அந்தக் காலத்துக்குள்ளாகத் தன்னல் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவும் சொல்லி அவனை ஸ்நான கட்டத்துக்குப் போகாமல் இருக்கும்படி பலவாறு தடுத்துப்பார்த்தான். ஆனல் அவனுடைய முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை.

ஹாதீமினுடைய மனத்தை ஒரு விதத்திலும் திருப்ப முடியாதென்று கண்டறிந்து அந்த வாயில் காப்போன், "துணி

வுள்ளவனே, என் பின்னேவா; பழி உன்மே லிருக்கட்டும்" என்று சொல்லி அவனை அழைத்துச் சென்றான். ஹாதீமும் அவன் பின்னேபோய் ஸ்நான கட்டத்தின் வெளிக்கதவண்டைபோய்ச் சேர்ந்தான்.

அவ்வளவு பெரிய கதவை ஹாதீம் அதற்குமுன் எங்கும் கண்டதே இல்லை. கதவுக்குமேலே சுவரில் "கௌமாரதனுடைய மாயா விநோதங்களெல்லாம் இங்கே உள்ளன. யார் இதற்குள்ளே நுழைந்தாலும் மறுபடி திரும்பமாட்டான்" என்ற வாக்கியங்கள் வரையப்பெற்றிருந்தன.

அந்தச் சாஸனங்களை ஹாதீம் படித்துப் பார்த்துத் தனக்குள், "ஹம்ஸதேவி கேட்ட கேள்விக்கு இவைகளைக்கொண்டே நாம் பதில் சொல்லிவிடலாமா? அல்லது இன்னும் கொஞ்சதூரம் போகலாமா?" என்று சிறிதுநேரம் யோசனைசெய்தான். பிறகு ஸ்நான கட்டத்தைப் பாராமல் திரும்புவது முறையன்று என்று நிச்சயித்துக்கொண்டு வாயில் காப்போனுடைய உத்தரவைப்பெற்றுக் கடவுளை நம்பி ஸ்நான கட்டத்தின் கதவைத்திறந்து உள்ளே நுழைந்தான்.

மூன்று அடி எடுத்துவைத்ததும் சுற்றிப்பார்க்கையில் வாயில் காப்போனும் அவன் கண்ணிற்படவில்லை. ஸ்நான கட்டத்தின் கதவும் இருந்த இடம் தெரியவில்லை. சுற்றியுள்ள பிரதேசமெல்லாம் பயங்கரமான ஒரு பெரிய பாலைவனமாக இருந்தது. அந்தக் காட்சியைக்கண்டு அவன் திடுக்கிட்டு, தனக்குள்ளே, "ஓ ஹாதீம், உன்னுடைய வாழ்நாள் முடியும் காலம் வந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டு ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றான். ஆனாலும் சிறிதுநேரம் சென்றபிறகு மிக்க தைரியமடைந்து அந்தப் பாலைவனத்திலேயே சுற்றித்திரிய ஆரம்பித்தான். அப்போது வெகுதூரத்துக்கப்பால் ஒரு மனிதனுடைய வடிவம் காணப்பட்டது. அந்த மனிதன் தன்னை நோக்கிக்கொண்டுவரவே ஹாதீம் அவனை எதிர்கொண்டு சென்றான். இருவரும் சந்தித்தவுடன் அந்தப் புதிய மனிதன் ஹாதீமுக்கு வந்தனமளித்து ஒரு கண்ணாடியை அவன் கையிற் கொடுத்தான். ஹாதீம் அதனைக் கையில் வாங்கிப்பார்த்தான். அப்பால் அவனை நோக்கி, "இந்தக் கண்ணாடிக்குள் தெரிகிறது என்ன? இது படகார்டின் ஸ்நான கட்டமல்லவா? நீ இதன் காவற்காரன் அல்லவா?"

என்று கேட்க அவன், "நான்தான் காவற்காரன்" என்று மட்டும் சொன்னான். உடனே ஹதீம் "ஐயா, இந்த ஸ்நான கட்டத்தை நான் எப்படிப் பார்க்கலாம்? சொல்லு" என்று கேட்க அவன், "நீ கொஞ்சதூரம் முன்னே நடந்து செல்வாயானால் ஸ்நான கட்டத்தைப் பார்ப்பாய்" என்று சொன்னான். ஹதீம் அவனை இன்னான் என்று அறிந்துகொள்ள ஆவல்கொண்டு, "யாரப்பா நீ? தயவுசெய்து சொல்வாயாக" என்று கேட்க அவன், "நான் இந்த ஸ்நான கட்டத்தைச்சேர்ந்த ஒரு வேலைக்காரன். புதிய மனிதர்கள் யாராவது வருகிறார்களா என்று நான் சுற்றிப் பார்ப்பது வழக்கம். யாரேனும் வந்தால் அவரை ஸ்நான கட்டத்துக்கு அழைத்துச்சென்று அவருக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிப்பதுதான் என்னுடையவேலை. அவரவர்கள் அதற்காகத் தகுந்த வெகுமதி யளிப்பார்கள். நீ எவ்வளவுக் கெவ்வளவு எனக்குக் கொடுக்கிறாயோ அவ்வளவுக் கவ்வளவு உனக்கு நல்லதுதான்" என்று சொன்னான். அப்பொழுது ஹதீம் அவனைப் பார்த்து, "நீ சொல்வது சரிதான். ஸ்நான கட்டத்தில் உள்ள வேலைக்காரன் நீ ஒருவன்தானா? அல்லது உன்னைத்தவிர வேறு சில வேலைக்காரர்களும் உண்டா?" என்று கேட்க, அவன், "என்னைப்போல் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் இன்றைத்தினம் என்னுடையமுறையாதலால் நான் இங்கே வந்தேன்" என்று உரைத்தான்.

ஹதீம், "நல்லது. இந்த ஸ்நான கட்டத்தை உத்தேசித்து நான் வெகுதூரம் பிரயாணம் செய்துவந்திருக்கிறேன். ஆகையால் குறுக்கு வழியாக என்னை அழைத்துக்கொண்டுபோய் ஸ்நான கட்டத்தைக் காட்டுவாயானால் உனக்கு மிக்க புண்ணியம் உண்டு" என்று கேட்டுக்கொண்டான்.

3. ஸ்நான கட்டத்திலுள்ள மாயா விநோதக் காட்சிகள்.

அப்படியே அந்த மனிதன் ஹதீமை அழைத்துக்கொண்டு ஒரு காதவழிதூரம் நடந்துசென்றான். அங்கே மிகவும் நேர்த்தியான பெரிய மண்டபமொன்று அவன் கண்ணிற்பட்டது. அதன் கதவண்டைபோனதும் காவற்காரன் அந்தக் கட்டிடத்துக்குள் நுழைந்து ஹதீமையும் தன் பின்னே வரச்சொன்னான். அவ்வாறே ஹதீம் அவன் பின்னே சென்றனன். அப்போது அந்த மனிதன் ஹதீமுக்குச் சலவைக்கல்லினால்

செய்யப்பட்ட ஒரு தண்ணீர்த் தொட்டியைக் காட்டி அதன ருகேபோகச் சொல்லிவிட்டு அவனைப்பார்த்து, "நீ ஜலத்தில் இடுப்பளவுக்குமேல் நில்லு. நான் உன் தலையில் ஜலத்தை ஊற்றுகிறேன்" என்றான்.

ஹாதீம் தன்னுடைய உடைகளில் சிலவற்றைக் கழற்றி விட்டுத் தொட்டிக்குள் இறங்கி நின்றான். அப்போது அந்த வேலைக்காரன் அவன் தலையிலும் தோளிலும் மூன்று கங்காளம் ஜலத்தை ஊற்றினான். மூன்றாவது பாத்திரத் தின் ஜலம் விழும்போது மிகவும் பலமான சத்தம் ஒன்று உண்டாயிற்று; அது இன்ன இடத்திலிருந்து வந்ததென்று தெரியவில்லை. ஸ்நான கட்டம் முழுவதும் இருளடைந்து போயிற்று. கொஞ்சம் இருள் நீங்கியவுடன் கண்ணைத்திறந்து பல இடங்களையும் சுற்றிப்பார்த்தான். மண்டபம் முழுவதும் வெண்மையான ஒரே சலவைக்கல் பாறையாக மாறிவிட்டது. தரையில் ஜலம் வழிந்தோடி அவன் முழங்காலளவுக்கு வந்து விட்டது. கொஞ்சநேரம் ஆனபிறகு ஸ்நான கட்டத்தில் ஜலம் பெருகிக்கொண்டேவந்தது. அதைவிட்டு வெளியே வருவதற்கு வழி இருக்குமோ என்று அவன் கவனித்துப் பார்த்தான். ஒரு பக்கத்திலும் கதவின் அடையாளமே தெரிய வில்லை. அவனைச் சுற்றிலும் கற்பாறையே சூழ்ந்துகொண் டிருந்தது. அதற்கப்பால் ஜலம் அவன் மார்பளவுக்கு வந்து விட்டது. எப்படியாவது உயிர்தப்பவேண்டுமென்று கருதி அவன் இங்கு மங்கும் அலைந்தோடினான். ஆனால் பயன் ஒன்றுமில்லை. கடைசியில் வெள்ளம் அவன் தலைக்குமேல் வந்துவிட்டது. அப்போது அவன் மிகவும் கஷ்டப்பட்டுத் தலை யைமட்டும் ஜலத்துக்குமேல் தூக்கி வைத்துக்கொண்டு அங்கு மிங்கும் நீந்தி மிதந்துகொண்டிருந்தான். அந்த நிலைமையில் அவன் தனக்குள்ளே, "ஏ ஹாதீம், உன்னுடைய நண்பர்கள் உனக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லியும் அவற்றுள் ஒன்றும் இந்தச் சமயத்தில் பயன்படவில்லையே. வருந்துவதில் என்னபயன்? நடப்பது நடந்தே தீரும். கடவுளுக்குக் கைங் கரியம் செய்வதில் ஆயிரக்கணக்கான உயிர் மாண்டாலும் பாதகமில்லை" என்று சொல்லிக்கொண்டான். கொஞ்சநேரம் சென்றபிறகு அவன் தண்ணீரிலே மிதந்துகொண்டு பாறையின் உச்சிக்குப் போய்ச்சேர்ந்தான். அவன் அந்த உச்சியைத்

தொட்டதும் காது செவிடு படும்படியான இடியோசைபோன்ற ஒரு பெரிய சத்தம் உண்டாயிற்று. ஒரு நொடிப்பொழுதுக்குள் அவன் ஒரு பாலைவனத்தின் மத்தியில் வந்துநின்றான். மரமாவது செடியாவது அவன் கண்ணிற் காணப்படவில்லை. படகார்ட் ஸ்நான கட்டத்தைவிட்டு வெளியேறினதாக அவன் எண்ணினான். ஆனால் உண்மையில் அவன் அதைவிட்டு வெளிவரவில்லை.

மூன்று நாள் இரவும் பகலும் ஒருவிதமான நோக்கமுமில்லாமல் அவன் வெகுதூரம் நடந்து சென்றான். கடைசியில் வெகுதூரத்துக்கப்பால் ஓரரண்மனை தெரிந்தது. அதில் ஜனங்கள் இருக்கக்கூடுமென்று எண்ணி அவன் அதனை நோக்கிச் சென்றான். அதனருகே போகப்போக அதைச் சுற்றிலும் அழகான தோட்டம் ஒன்று இருப்பது தெரிந்தது. தோட்டத்தின் கதவு திறந்திருந்தமையால் அவன் சிறிதும் தடையின்றி அதற்குள் சென்றான். எங்கே பார்த்தாலும் புஷ்பங்களும் பழங்களும் நிறைந்திருந்தன. அவனுக்குப் பசி மிகுதியாக இருந்தமையால் சில பழங்களைப் பறித்துத் தின்றான். அவன் எவ்வளவு தின்றும் அவன் பசி அடங்கவில்லை. படகார்டின் ஸ்நான கட்டத்தை இன்னும் நீங்கவில்லையென்று அப்போதுதான் எண்ணினான்.

தோட்டத்தை யெல்லாம் பார்த்தபிறகு கட்டிடத்துக்குள் போவதற்குத் துணிந்தான். கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் அநேகம் மனிதர்களுடைய உருவச்சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சமயத்தில் அரண்மனைக்குள்ளேயிருந்த ஒரு கிளி அவனைப்பார்த்து, "ஓ ஹதீம், ஏன் அங்கே நிற்கிறாய்? உன் உயிரைப் போக்கிக்கொள்ள இந்த இடத்துக்கு ஏன் வந்தாய்?" என்று கூவிற்று. ஒரு கதவின்மேல், "ஓ மானிடப்பதரே, நீ இந்த இடத்திலிருந்தும் உயிர்தப்பிச் செல்வது அசாத்தியம். பெயர்பெற்ற கௌமாதனுடைய அரண்மனையாகும் இது. அவன் இந்தப் பக்கங்களில் வேட்டையாடச் செல்லும்போது கொட்டைபாக்கு அளவுள்ள ஒரு வைரக்கல்லைக் கண்டெடுத்தான். அவன் அதனைத் தன்னுடன் இருந்தவர்களுக்குக் காட்ட அவர்கள் அதற்குச் சமானமான வைரக்கல் வேறு உலகத்தில் இல்லையென்று சொன்னார்கள். அதை அவன் மிகவும் ஜாக்கிரதையாக எங்கே வைக்கலாம்

என்று ஆலோசித்துப் படகார்ட் ஸ்நான கட்டத்தை ஏற்படுத்தி அதைச் சுற்றிலும் பல காவலிடங்களை அமைத்தான். அந்த வைரக்கல் கிளியினுடைய வயிற்றில் இருக்கிறது. இந்தத் தோட்டத்துக்குள் யார்நுழைந்தாலும் யார்வந்தாலும் அந்த வைரத்தை அபகரித்துக்கொண்டாலன்றி உயிருடன் திரும்பமாட்டான். இதனுள்ளே இருக்கும் மண்டபத்தில் ஒரு நாற்காலியின்மேல் ஒரு வில்லும் சில அம்புகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. இங்கே வருபவன் அந்த வில்லில் பாணங் களைத் தொடுத்து அந்தக் கிளியின்மேல் எய்யவேண்டும். அதன் தலையின்மேல் குறி தவருமல் எய்வாஞனல் அவனுக்கு அந்த வைரக்கல் கிடைப்பது நிச்சயம். குறி தவறுமாஞல் அவன் கற்சிலையாக மாறிவிடுவான்" என்னும் வாக்கியங்கள் எழுதப் பட்டிருந்தன.

எல்லாவற்றையும் படித்துப்பார்த்த ஹாதீம் கிளியின்மேல் அம்பை எய்வதைத் தவிர வேறு வழியில்லையென்று அறிந்து கொண்டு மண்டபத்துக்குள் நுழைந்து நாற்காலியிலிருந்து வில்லையும் பாணங்களையும் எடுத்துக்கொண்டான். பாணத்தை எய்வதற்குத் தகுதியான ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே போய் நின்று ஒரு பாணத்தைத் தொடுத்தான். அப்போது கிளி தன் தலையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டது. அத ஞல் குறிதப்பிப் போயிற்று. உடனே ஹாதீமினுடைய தேகம் முழங்கால்வரையில் கல் சிலையாக மாறிவிட்டது. அப்போது அவன் "ஐயோ, இங்கே உள்ள சிலைக்கூட்டங்களின் மத்தியில் நாமும் இருக்கவேண்டுமென்பது கடவுளின் கட்டளைபோலும்" என்று எண்ணிஞன். பின்பு கிளி பழையபடி தன்னிடத் துக்குவந்து உட்கார்ந்தது. அப்போது ஹாதீம் இரண்டாவது பாணத்தை எடுத்து அதன்மேல் தொடுத்தான். முதல் பாணத் தைப்போலவே அதுவும் குறிதப்பிப் போயிற்று. உடனே அவன் மார்புவரையில் சிலையாக மாறிஞன். அப்போது கிளி அவனைப்பார்த்து, "உன்னுடைய பிடிவாதத்தை விட்டுவிடு. நீ எடுத்துக்கொண்டிருக்கிற காரியம் உன் சக்திக்கு அசாத் தியமானது" என்று சொல்லிற்று.

அப்போது அவன் கடவுளைப் பலவாறு தொழுது திக்கற்ற வனுக்குத் தெய்வமேதுணை என்னும் கருத்தை உட்கொண்டு

கிளி உட்கார்ந்துகொண்டிருந்த இடத்தை நிதானமாகப் பார்த்துத் தன் கண்ணை மூடிக்கொண்டு மூன்றும்முறை ஒரு பாணத்தை விடுத்தான். அது அந்தக் கிளியின் மூளையைப் பிளந்து எறியவே அது கீழேவிழுந்து இறந்தது. உடனே புயல்காற்றும் இடியும் மின்னலும் பேரொலியுடன் உண்டாயின. எங்கே பார்த்தாலும் இருள் மூடிக்கொண்டது. கடைசியில் படகார்டின் ஸ்நான கட்டத்தின் மாயைகளெல்லாம் ஒருவகையாக ஒழிந்துபோயின. ஆனாலும் ஹதீமுக்குமட்டும் நிதானம் ஏற்படவில்லை. அவன் "இந்த உலகத்திலேதான் நாம் இருக்கிறோமா? அல்லது வேறு உலகத்தில் இருக்கிறோமா" என்று எண்ணினான். இடியோசை முதலியனவும் இருட்டும் நீங்கியவுடன் அவன் கண்ணைத்திறந்து பார்த்தான். அப்போது அவனுக்கு எதிரில் வில்லும் அம்புகளும் கோடிசூரியப் பிரகாசத்தோடுகூடிய ஒரு வைரக்கல்லும் இருந்தன. தோட்டம் அரண்மனை கிளி எல்லாம் இருந்த இடம் தெரியாமற் போய்விட்டன.

பின்பு ஹதீம் எழுந்து வைரக்கல்லைத் தொட்டவுடன் அங்கேயிருந்த கற்சிலைகள் யாவும் உயிர்பெற்றெழுந்தன. உயிர்பெற்ற மனிதர்கள் எல்லோரும் தங்களுக்கு முன்னே நின்ற ஹதீமைப் பார்த்து, "ஏ புண்ணிய புருஷா, நீ யாவன்? எங்களுடைய சாபத்தை நீ எவ்வாறு விடுவித்தாய்?" என்று கேட்டார்கள். உடனே அவன் நடந்த வரலாறு முழுவதையும் எடுத்துரைத்தான். அவர்கள் எல்லாவற்றையும் கேட்டு ஆச்சரியமுற்று அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கித் தங்களுடைய ஆயுள்நாள் முழுவதும் அவனுடைய அடிமைகளாகி ஊழியஞ் செய்வதாகச் சபதம் கூறினார்கள். அவர்கள் எல்லாரையும் ஹதீம் அழைத்துக்கொண்டு கேடன் ராஜதானிக்குப் புறப்பட்டான். வழியில் படகார்ட் ஸ்நான கட்டத்தின் வேலைக்காரர்களில் நாலைந்து மனிதர்களைச் சந்தித்தான். அவர்கள் அவனுடைய வெற்றியைக் கேள்வியுற்று அதைத் தங்கள் அரசனிடம் தெரிவிக்கும்பொருட்டு அவனுக்கு முன்னே மிகவும் வேகமாகச் சென்றார்கள்.

சில தினங்களில் ஹதீம் ராஜதானியை அடைந்து அரசனுடன் சம்பாஷணை செய்தான். அப்போது அவனிடம் வைரக்கல்லைக்காட்டி, "மகாராஜா, இதனை நான் உங்களுக்கு

ஹாதீம் வைரக்கல்லைப் பார்த்தல்.

வெகுமதியாகக் கொடுக்கிறேன். அங்கீகரித்துக்கொள்ளவேண்டும். ஆனால் அதனை நான் முதலில் ஹம்ஸதேவிக்குக் காட்டவேண்டியவனாக இருக்கிறேன். என்னுடன் இங்கே வந்திருக்கிறவர்கள் எல்லோரும் பரம தரித்திரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பிரதேசத்துக்குச் சௌக்கியமாகப்போய்ச் சேரும்வரையில் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் நீங்கள் செய்விக்கவேண்டும் என்பது என்னுடைய பிரார்த்தனை" என்று கூறினான். உடனே அரசன் அவனுடைய பிரார்த்தனைக்கு இணங்கி அவனுடன் வந்தவர்களுக்கெல்லாம் வேண்டிய சௌகரியங்களைச் செய்விக்க அவர்கள் அவனுக்கு மிக்க நன்றிபாராட்டித் தங்களிடத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

4. ஹாதீம் திரும்புதல்; முனிவரனுடைய விவாகம்.

அப்பால் ஹாதீம் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அப்போது அரசன் அநேகம்

போர்வீரர்களை அவனுக்குச் சகாயமாக அனுப்பியதன்றி அவனுடைய பிரயாணத்துக்கு வேண்டிய சௌகரியங்களுக்கும் ஏற்பாடுசெய்தான். ஆதலால் ஹாதீம் மார்க்கத்தில் ஒருவித மான இடையூறுமில்லாமல் ஷாகபாத் நகரத்துக்கு மிகவும் சௌகரியமாக வந்து சேர்ந்தான். ஷாகபாத் நகரவாசிகள் ஹாதீம் வெற்றியுடன் திரும்பிவந்ததைக் கேள்வியுற்று அளவற்ற சந்தோஷமடைந்து அவனை மிகவும் குதூகலமாக ஹம்ஸ தேவியின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். உடனே அவனைப் பார்ப்பதற்கு ஹம்ஸதேவி மிக்க ஆவலுடன் வந்தனள்.

தான் பட்ட கஷ்டங்களையும் வழியில் தான் கண்ட காட்சிகளையும் அவளிடம் ஹாதீம் விரிவாக எடுத்துக்கூறித் தான் சொல்லுவது மெய் என்று வெளிப்படுத்தும்பொருட்டுத் தான் கொணர்ந்த வைரக்கல்லைக் காட்டினான். அவளும் அதனைக் கண்டு ஆச்சரியமுற்றனள். பின்பு அவன் அவளைப்பார்த்து, "நீ ஏற்படுத்திய நிபந்தனைகளெல்லாம் இதனோடு பூர்த்தியாயின என்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. ஆகையால் நீ என்னிடம் முதலில் வாக்களித்திருந்தபடி நிறைவேற்றலாமல்லவா?" என்று கேட்டான். உடனே ஹம்ஸதேவி, "நான் உனக்கு உரிமையானேன். என்னை உன் இஷ்டப்படி நடத்தலாம்" என்று பணிவுடன் கூறினள். பின்பு அவளுடைய விவாக மகோற்சவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படி அவன் கட்டளையிட்டான். எல்லாம் சித்தமானவுடனே ஹம்ஸதேவிக்கும் முனிவானுக்கும் மிகவும் விமரிசையாகக் கலியாணம் நடந்தேறியது.

கலியாணத்துக்குப்பிறகு சில தினங்கள் அங்கே இருந்துவிட்டு முனிவரனிடமும் ஹம்ஸதேவியினிடமும் விடைபெற்றுக்கொண்டு ஹாதீம் தன்னுடைய நாட்டுக்குத் திரும்பினான். முன்புவாக்களித்திருந்தபடி அவன் ஷாகபாத்நகரத்தைவிட்டுப் புறப்படுவதற்குமுன் வைரக்கல்லைக் கேடன் அரசனுக்கு அனுப்பினான். நீண்டகாலமாக ஊரைவிட்டுப் போயிருந்த தங்களுடைய யுவராஜன் திரும்பிவருவதை அறிந்துகொண்ட யாமன்நாட்டுஜனங்களெல்லோரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கி அவன் ராஜதானிக்குள் நுழைவதற்குமுன் அவனை எதிர்

கொண்டு அழைக்கச் சென்றார்கள். அவனுடைய பெற்றோர்கள் அவனைக்கண்டு மகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். நாடெங்கும் சில தினங்கள் வரையில் பாட்டும் கூத்துமாக இருந்தன.

சில காலத்துக்குப்பின்பு ஹாதீமினுடைய தகப்பன் ராஜ்யத்தை அவனிடம் ஒப்பித்துப் பாக்கியுள்ள தன் சாலத்தை ஏகாந்தமாக இருந்து போக்கினான். யாமன் நாட்டை அநேக வருஷங்கள் நீதிமுறை வழுவாமல் ஹாதிம் ஆண்டுவந்து மிக்க புகழுடன் விளங்கினான். இன்றைக்கும் அவனுடைய புகழ் அழியாமல் இருக்கின்றது.

இந்தச் சரித்திரத்தைப் படிப்போர் ஒவ்வொருவரும் முயற்சி திருவினை ஆக்கும் என்பதை உணர்ந்து தம் வாழ்நாளை வீணே கழிக்காமல் பிறருக்கு உதவிசெய்வதையே தமது கடமையாகக் கொள்வாராக.

TB
O-3CD
N18

86438

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS.—1918.

Eastern Fables & Folk Tales

(ILLUSTRATED)

Selected and Adapted from Original Sources by

J. C. NESFIELD, M.A.

IN ENGLISH, TAMIL AND TELUGU

GRADE I, 2 Annas 6 Pies

No. 1. Indian Fables from Hitópadesha. First Series.
No. 2. Indian Fables from Hitópadésha. Second Series.
No. 3. Short Tales selected from Gulzár-i-Dabistán.

GRADE II, 3 Annas

No. 1. Persian Fables from Anwár-i-Suhaili. First Series.
No. 2. Persian Fables from Anwár-i-Suhaili. Second Series.
No. 3. Short Tales selected from Kathá Sarit Ságar.

GRADE III, 4 Annas

No. 1. Birth, Exile, and Wanderings of Rám and Sítá. From the Rámáyan.
No. 2. The Last Exile of Sítá. From Uttara-Kánd Rámáyan and Sítár Bana-bás.
No. 3. The Wisdom of Sádi. Selections from Gulistán and Bústan.

GRADE IV, 4 Annas 6 Pies

No. 1. Tales from the Mahábhárata. First Series.
No. 2. Tales from the Mahábhárata. Second Series.
No. 3. Suhráb and Rústam. From Firdausi's Sháh Náma.

GRADE V, 5 Annas

No. 1. The King and the Rubies. From the 'King's Tale' in Bágh-o-Bahár.
No. 2. Fifteen Tales from Baitál Pachísi.
No. 3. Some Adventures of Hátim Tái. From Qissa-i-Hátim Tái

RMR/1146